28 °C
32 °C
26 °C
தெளிவான காலநிலை காணப்படும்

உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

19 MAY 2014



விலை: யாழ்.– 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=
சுடர்: 29 | கதிர்: 174 | வள்ளுவர் ஆண்டு: 2045 | வைகாசி 05, திங்கள் 19.05.2014

# எவர் விமர்சித்தாலும் வெற்றி விழா நடக்கும்

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவிப்பு



கொழும்பு, மே 19
"யார் என்ன கூறினாலும் போர் வெற்றிக் கொண்டாட்டங்களை இலங்கை அரசு ஒரு போதும் நிறுத்தாது. வெற்றி விழாவில் யார் கலந்துகொண்டாலும், கலந்து கொள்ளாமல் விட்டாலும் வெற்றி விழா ஒவ்வொரு ஆண்டும் நடந்தேறும்"- இவ்வாறு திட்ட வட்டமாகத் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இலங்கை அரசின் முழுமையான ஒத்துழைப்புடன், பாதுகாப்புத் தரப்பினரால் பெரும் எடுப்பில் ஏற்பாடு செய்யப் பட்ட தெற்கின் போர் வெற்றிக் கொண்டாட்டங்கள் மாத்தறையில் நேற்று இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கூறியதாவது,

**ஐக்கியத்தை அபகரிக்க முயற்சி**
சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை மட்டுமல்ல தமிழ்த் தலைவர்களையும் பயங்கர வாதிகள் கொன்றொழித்த னர். அவ்வாறான பயங்கர வாதிகளிடமிருந்து படையினர் உயிர் துறந்து பெற்றுக்கொண்ட ஐக்கியத்தை நாம் பாதுக்காக்க வேண்டும். அதனை பறித்தெடுப்பதற்கு யாருக்கும் இடமளிக்கக் கூடாது. என்றுமே மரணிக்க முடியாதது இன ஐக்கியமாகும். அந்த ஐக்கியத்தை அபக ரிப்பதற்கு ஒரு சிறு பிரிவினர் முயற்சிக்கின்றனர்.

**நாடாளுமன்றத் தெரிவுக்குழு**
தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு நாடாளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப் பட்டுள்ளது. அந்தக் குழுவில், ஜனநாயகரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் இருக்கின்றனர். அந்தக் குழுவின் ஊடாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும்.
**அரசை விமர்ச்சிப்பதற்கு ஊடகங்களுக்கு முழு சுதந்திரம் இருக்**

21ஆம் பக்கம் பார்க்க

# இராணுவ வளையங்களை உடைத்து உறவுகளை நினைவேந்தினர் மக்கள்

யாழ்ப்பாணம், மே 19
முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை தமிழ் மக்கள் நினைவு கூருவதை முடக்கும் நோக்குடன் இராணுவத்தினரால் போடப்பட்ட தடைகள் - அச்சுறுத்தல்களையும் தாண்டி, தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு எழுச்சியுடன் - உணர்வுபூர்வமாக நினைவு கூரப்பட்டுள்ளது.
2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலுடன் போர் முடிவுக்கு வந்தது. இறுதிக் கட்டப் போரில் கொத்துக் கொத்தாகத் தமிழ் மக்கள் கொன்றழிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு கொல்லப்பட்ட தமிழ் மக்கள் நினைவாக வருடாந்தம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும் தெற்கில் போர் வெற்றி விழாவைக் கொண்டாடிய இராணுவத்தினர், வடபகுதியில் தமிழ் மக்கள், உயிரிழந்த தமது உறவுகளுக்காக நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு தடை விதித்திருந்தனர்.
அத்துடன் நிகழ்வுகள் நடைபெறாமல் தடுப்பதற்கும், உயிரிழந்தவர்களின் உறவினர்

21ஆம் பக்கம் பார்க்க

# நினைவேந்தல்களைத் தடுக்க இராணுவத்தினர் பிரயத்தனம்

## வடக்கு எங்கும் நேற்று போர்க்காலச் சூழல்

யாழ்ப்பாணம், மே 19
வடக்கில் தமிழ் மக்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளைக் கடைப்பிடித்துவிடக் கூடாது என்பதற்காக நேற்றைய தினம் இராணுவத்தினர் பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்தனர். வடக்கில் மூலை முடுக்கெல்லாம் போர்க்காலச் சூழல் போன்று இராணு வத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். பல்வேறு இடங்களிலும் திடீர் சோதனை நடவடிக் கைகளிலும் அவர்கள் ஈடு பட்டமையால், வடக்கு மக்கள் மத்தியில் நேற்றுப் பெரும் அச்சமும் - பீதியும் ஏற்பட்டிருந்தது.
இறுதிப் போரில் கொல்லப்பட்ட உறவுகளின் நினைவாக மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழ் மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஆயினும் இம்முறை உயிரிழந்த மக்கள் நினைவாக பொது இடங்களில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த முடியாது என்று

21ஆம் பக்கம் பார்க்க

# அடக்குமுறை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதது

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 19
தமிழ் மக்கள் மீது கடந்த மூன்று தினங்களாக கட்ட விழ்த்து விடப்பட்ட இராணுவ அடக்குமுறை என்பது ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாதென்பதை சர்வதேச சமூகம் இலங்கைக்கு உணர்த்த வேண்டும் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை தடுப்பதற்காக வடக்கில் பெருமளவில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். கடந்த மூன்று

21ஆம் பக்கம் பார்க்க

# பத்திரிகை நிறுவனங்களை முற்றுகையிட்ட இராணுவம்

யாழ்ப்பாணம், மே. 19
'உதயன்' மற்றும் 'தினக்குரல்' பத்திரிகை நிறுவனங்களும் நேற்று மதியம் இராணுவத்தினரினால் திடீரென முற்றுகைக்குள்ளாக்கப்பட்டன. இரு பத்திரிகை நிறுவனங்களுக்குமான பாதைகளில் தடைகளை ஏற்படுத்தியதுடன், இரு ஊடக நிறுவனங்களுக்கு அருகிலும் பெரும் எடுப்பில் இராணுவச் சிப்பாய்கள் குவிக்கப்பட்டிருந்தனர்.
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டதன் காரணமாக வடக்கில் பெரும் எடுப்பில் படையினர் குவிக்கப்பட்டிருந்தனர். அதனால் பதற்றமான நிலைமை நிலவியது.

21ஆம் பக்கம் பார்க்க

# வடக்கு ஆலயங்களில் வழிபாட்டுக்குத் தடை

யாழ்ப்பாணம், மே 19
வடக்கு மாகாணத்திலுள்ள சகல ஆலயங்களிலும் நேற்று அதிகாலை முதலே இராணுவத்தினர் குவிக்கப்பட்டதுடன், வழிபாடுகளுக்குச் சென்ற மக்களும் திருப்பியனுப்பப்பட்டனர். கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தில் பிதிர்கடன் செலுத்தவும் உறவினர்களுக்கு அனுமதி மறுத்த இராணுவத்தினர், நல்லூர் கந்த சுவாமி கோயிலிலும் வழிபாடுகளுக்கு செல்ல யாரை யும் அனுமதிக்கவில்லை.
முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களின் நினைவாக சமய அனுஷ்டானங்களில் ஈடுபடுவதற்கோ, பிதிர்கடன் செலுத்துவதற்கோ தடையில்லை என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்திருந்த நிலையிலேயே, வடபகுதியில் சமய நிகழ்வுகளுக்குப் படையினர் தடை விதித்துள்ளனர்.
2009 ஆம் ஆண்டு இடம் பெற்ற முள்ளிவாய்க்கால் போரில் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்ட தமிழ் மக்கள் நினைவாக மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழ் மக்களால் கடைப்பிடிக்கப்

23ஆம் பக்கம் பார்க்க

**கிறிஸ்மஸ்தீவில் மோசமான நிலையில் காணப்படும் சிறார்கள்**

பக்கம் 12

# இசைப்பிரியா தொடர்பான புதிய புகைப்படங்கள் நேற்று வெளியாகின

கொழும்பு, மே 19
இசைப்பிரியா தொடர்புடைய புதிய புகைப்படங்கள் நேற்று வெளியாகியுள்ளன. அந்தப் புகைப் படங்களில் சீருடையினரின் மத்தியில் இசைப் பிரியாவும், மற்றொரு பெண்ணும் காணப்படுவது போன்ற காட்சிகள் இடம்பெற்றுள்ளன. குறித்த புகைப்படங்களில் கடற்கரையை அண்மித்த மண் அணை ஒன்றுக்கு அருகில் சதுப்பு நண்ணீருக்குள்ளும்,



23ஆம் பக்கம் பார்க்க

# கட்சி அலுவலகங்களும் இராணுவ கட்டுப்பாட்டில்

யாழ்ப்பாணம், மே 19
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் தலைமை அலுவலகங்கள் நேற்றுக் காலையிலிருந்து இரவு வரையில் இராணுவத்தினரின் முழுமையான முற்றுகைக்குள் முடக்கப்பட்டிருந்தது. கட்சியின் முக்கியஸ்தர்கள் கூட அலுவலகத்தினுள் செல்வதற்கு இராணுவத்தினர் அனுமதி மறுத்திருந்தனர்.

21ஆம் பக்கம் பார்க்க

# உயிரிழந்த உறவுகளை நினைவேந்திய தருணங்கள்





தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நல்லூர் ஆலயத்தில்



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் ஏற்பாட்டில்



தேவாலயம் ஒன்றில்



த.தே.கூ. பிரத்தியேக இடமொன்றில்



பொதுமக்கள் நல்லூர் ஆலயத்தில்



மன்னாரில்



மட்டக்களப்பில்



கிளிநொச்சியில்

## சீனா குறித்த நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, மே. 19
சீனா தொடர்பான இலங்கையின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தென் சீனக் கடல் விவகாரத்தில், வியட்நாமுக்கு ஆதரவாக பிரதமர் தி.மு.ஜயரத்ன கருத்து வெளியிட்டுள்ள சூழ்நிலையிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு, சீனாவின் உயர்மட்டப் பாதுகாப்புக் குழுவினரிடம் தெரிவித்துள்ளார்.

சீனாவின், ஜெனரல் சூ கியூயிலியாங் தலைமையிலான உயர்மட்ட பாதுகாப்புக் குழுவினர் மூன்று தினங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வருகை தந்தனர். இவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின்போது, கருத்து வெளியிட்ட ஜெனரல் சூ கியூயிலியாங்,

"சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பரஸ்பர மூலோபாய நம்பிக்கையை மேலும் வலுப்படுத்துவதும், இரண்டு நாடுகளுக்கு இடையிலும், இரு ஆயுதப்படைகளுக்கு இடையிலுமான உறவுகளை புதிய மட்டத்துக்கு தரமுயர்த்துவதுமே தமது பயணத்தின் நோக்கம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை இராணுவம் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள ... நன்றாக பயிற்சி பெற்ற ...ாக நிர்வகிக்கப்படும் ...றுவம் என்று தெரிவித்துள்ளார். இலங்கை மற்றும் சீனாவுக்கு இடையில், இராணுவ மட்டத்திலான உறவுகளுக்கு முன்னுரிமை கொடுப்பது குறித்து சீனா ஆலோசித்து வருவதாகவும் ஜெனரல் சூ கியூயிலியாங் தெரிவித்துள்ளார்.

> " இலங்கை மற்றும் சீனாவுக்கு இடையில், இராணுவ மட்டத்திலான உறவுகளுக்கு முன்னுரிமை கொடுப்பது குறித்து சீனா ஆலோசித்து வருவதாகவும் ஜெனரல் சூ கியூயிலியாங் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதத்தை தோற்கடித்து போருக்குப் பிந்திய அபிவிருத்திகளை மெற்கொண்டதற்காக அவர் ஜனாதிபதியை பாராட்டியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, சர்வதேச அரங்கிலும் ஒரே சீனா என்ற கொள்கை, தென் சீனக் கடல் விவகாரம் உள்ளிட்ட பிராந்திய விவகாரங்களிலும், சீனாவுக்கு ஆதரவு வழங்கும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார். சீனா தொடர்பான இலங்கையின் கொள்கைகள் மாறவில்லை என்றும், ஒருபோதும் மாறாது என்றும் சீன ஜெனரலிடம் உறுதியளித்துள்ளார். (ற-5)

## பாதுகாப்பு என்று காரணம் தெரிவித்து; மாணவரை அடைவு வைக்காதீர்கள்

துணைவேந்தரிடம் தெரிவித்தனர் பல்கலைக் கழக ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம், மே 19
மாணவர்களின் பாதுகாப்பு என்றுகூறிக்கொண்டு அவர்களை இராணுவத்தினரிடமும் பொலிஸாரிடமும் அடைவு வைக்காதீர்கள். அவர்களின் உணர்வுகளைக் கட்டிப்போடாதீர்கள்-இவ்வாறு யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தரிடம் தெரிவித்துள்ளனர் யாழ். பல்கலைக் கழக ஆசிரியர்கள்.

கடந்த திங்கட்கிழமை துணைவேந்தருக்கும் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பின்போதே இவ்வாறு அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

"மாணவர்களின் பாதுகாப்பு என்று கூறி தேவையில்லாது பல்கலைக் கழகத்தை மூட வேண்டாம். அதே காரணத்தை வைத்துக்கொண்டு மாணவர்களை இராணுவத்தினரிடமோ பொலிஸாரிடமோ அடைவு வைக்காதீர்கள். பல்கலைக்கழகத்தை மூடுவதென்றால் அது தொடர்பில் ஆசிரியர் சங்கத்துடன் பேசிக் கலந்துரை யாடியிருக்கலாம். எதிர்காலத்திலாவது அவ்வாறு பேசித்தீர்மானம்எடுங்கள். யாழ்.பல்கலைக்கழகம் ஓர் உயர்கல்விப்பீடம். அங்கு பயிலும் மாணவர்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளே. தமிழ் மக்களின் உணர்வுகளை அவர்கள் பிரதிபலிப்பர். அவர்களின் உணர்வுகளை அடக்காதீர்கள். அடைவு வைக்காதீர்கள். சட்டவிரோத செயலில் ஈடுபட்டால்தான் அதனைத் தடுக்க வேண்டும்."- என்று அந்தச் சந்திப்பில் ஆசிரியர்கள் சார்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது என்று கூறப்படுகின்றது. (ற-4)

## இந்திய வம்சாவளிகள் தொடர்பில் மோடி அக்கறை செலுத்துவார்

நம்பிக்கை வெளியிடுகிறார் ராதாகிருஸ்ணன்

கொழும்பு, மே 19
இந்தியாவின் புதிய பிரதமராக தெரிவுசெய்யப்பட்டுள்ள நரேந்திர மோடி, இந்திய வம்சாவளி இலங்கை தமிழர்கள் விடயத்தில் அதிக அக்கறை செலுத்துவார் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார் மலையக மக்கள் முன்னணியின் அரசியல்துறை தலைவர் வீ.ராதா கிருஸ்ணன்.

அகரபத்தையில் நேற்று இடம்பெற்ற நடமாடும் சேவையை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த காலத்தில் இந்திய அரசு இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் விடயத்தில் உரிய அக்கறை கொண்டு செயற்பட வில்லை.

> " கடந்த காலத்தில் இந்திய அரசு இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் விடயத்தில் உரிய அக்கறை கொண்டு செயற்பட வில்லை.

இந்த நிலையில் மோடி தலைமையிலான புதிய அரசு இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் விடயத்தில் அதிக அக்கறை கொண்டுசெயற்பட வேண்டும் என்று அவர் அங்கு தெரிவித்துள்ளார். (ற)

## நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பு; ஜே.வி.பி. நேற்றுக் கூடி ஆராய்வு

கொழும்பு, மே 19
மாதுளுவாவே சோபித தேரர் உட்பட நியாயமான சமூகத்திற்கான மக்கள் அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் ஜே.வி.பி.க்கும் இடையே நேற்று விசேட சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இந்த சந்திப்பு தமது தலைமை அலுவலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்றதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க, அதன் அரசியல் குழு உறுப்பினர் சுனில் அந்துன்நெத்தி ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். மாதுளுவாவே சோபித தேரர், சட்டத்தரணி கிருஷாந்த வெலியமுன, சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா, ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்ரமரத்ன ஆகியோர் மறுதரப்பில் கலந்து கொண்டனர் என்றும் ஜே.வி.பி கூறியுள்ளது.

நியாயமான சமூகத்திற்கான மக்கள் அமைப்பு தயாரித்துள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை ஒழிப்பது 17 ஆவது அரசியல் அமைப்பு திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது உள்ளிட்ட விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் இந்த யோசனைகளின் அடிப்படையில் எடுக்க கூடிய செயற்பாடுகள் தொடர்பில் இதன் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (ர)

## மர்மப் பொருள் வெடித்ததில் சிறுவன் காயம்

கிளிநொச்சி, மே 19

கிளிநொச்சி திருநகர்ப் பகுதியில் மர்மப் பொருள் ஒன்று வெடித்ததில் பன்னிரண்டு வயதுச் சிறுவன் ஒருவர் படுகாயமடைந்துள்ளான்.

திருநகர் வடக்கு பகுதியில் நேற்றுக் காலை 7.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது 12 வயதுடைய திருநகர் வடக்கைச் சேர்ந்த மாணிக்க தியாகராசா விஜயயாதவன் என்ற சிறுவனே காயமடைந்துள்ளார்.

சம்பவம் குறித்து தெரிய வருவதாவது:-

நேற்றுக் காலை குறித்த சிறுவன் தனது வீட்டில் இருந்து மாமனார் வீட்டுக்குச் சென்ற சமயம் திருநகர் வீதியில் உள்ள 573 ஆவது படைப்பிரிவு இராணுவ முகாமுக்கு முன்பாக உருண்டை வடிவிலான மர்மப் பொருள்கள் மூன்று குப்பை மேட்டில் கிடந்ததாகவும் அவற்றை எடுத்து ஒன்றை வீதியில் எறிந்து விளையாடிய போது திடீரென அது வெடித்துள்ளது.

இதன்போது குறித்த சிறுவன் இரு கால்களிலும் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-55-18)

# வளலாய் மேற்கில் ராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள காணிகளை மே 20-24 வரை பார்வையிடலாம்

அச்சுவேலி, மே 19

வளலாய் மேற்கு இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியின் குடியிருப்பாளர்கள் மற்றும் விவசாய குடியிருப்பு நிலங்களை நேரில் பார்வையிடுவதற்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் மே 20 திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை குறித்த இடங்களை பார்வையிடுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளலாய் கிராம அலுவலர் மூலம் வளலாய் மேற்கு மீள்குடியேற்ற குழுவுக்கு தெரிவிக்கப்பட்டதை அடுத்து குறித்த தினங்களில் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள இடங்கள் மற்றும் விவரங்களை மீள் குடியேற்ற செயற்குழு காணி உரிமையாளர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

**குறித்த தினங்களில் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள இடங்கள் மற்றும் விவரங்களை மீள் குடியேற்ற செயற் குழு காணி உரிமையாளர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளது.**

பார்வையிடுவதற்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள தினங்களும் பகுதிகளின் விபரமும்வருமாறு-

மே 20 ஆம் திகதி:- வளலாய் கடற்கரை காங்கேசன்துறை வீதி இரண்டு பக்கமும்நீர் வாவி கேணி உட்பட பலாலி வீட்டுத் திட்ட கிழக்கு எல்லை வரை.

21 ஆம் திகதி :- வளலாய் வடமேற்கு தில்லைக்கலட்டி, பனுவில், அரசகலட்டி, வேனை, கொத்தன்பாண்டியன், மண்திட்டி , ஓடை, பலாலி எல்லை வரை.

22 ஆம் திகதி:-வளலாய் மேற்கு கந்தனார் வீதி, சாந்தை, கொச்சாட்டி தாத்தாபுலம், கொத்தானை, பிரணயடி, பலாலி எல்லை வரை.

23 ஆம் திகதி :-வளலாய் தென் மேற்கு புளியிட்டி, ஆவரம்புலம், ஒட்டாம்படி, குச்சம் பலாலி எல்லை வரை.

24 ஆம் திகதி:- வளலாய் கிராம அலுவலர் அலுவலகத்தில் பொதுவான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டு காணி உரிமை தொடர்பாக 224 பேர் தமது நிலங்களில் குடியேற அனுமதிக்குமாறு கோரி வலி. கிழக்கு பிரதேச செயலகத்தில் பதிவு செய் திருப்பதோடு தமது காணி சுவீகரிப்புக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் மேற் கொண்டுள்ளனர்.

காணிகளை நேரில் பார்வையிடுவதற்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பது தொடர்பாக வளலாய் மீள்குடியேற்றக் குழு நிர்வாகி ஒருவர் தகவல் தெரிவிக்கையில்;

"காணி உரிமையாளர்களை காணி பார்ப்பதற்கு அழைக்கப்பட்டிருப்பதன் உள் நோக்கம் புரியவில்லை. சென்று பார்க்க வருமாறு உரிமையாளர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. நிலைமையை பொறுத்திருந்து பார்ப்போம்" என்று தெரிவித்தார். (வ-11)

# அரச நாடக விழாப் போட்டிகளில் புறக்கணிக்கப்படும் நாட்டுக்கூத்து

## தமிழ்க் கலைஞர்கள் கவலை

கொழும்புத்துறை, மே 19

இலங்கை கலாசார அலுவல்கள் மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், அரச நாடகக்குழு என்பன இணைந்து வருடாந்தம் நடத்தும் அரச நாடகவிழாப் போட்டிகளில் தமிழர்களின் பாரம்பரிய கலை வடிவமான நாட்டுக்கூத்து புறக்கணிக்கப்படுவதாக நாட்டுக்கூத்துக் கலைஞர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த 2 வருடங்களாக நடைபெற்ற போட்டிகளில் நாடகப் போட்டிப் பிரிவுக்குள் நாட்டுக்கூத்து உள்வாங்கப்படாது அரச நாடக விழாப் போட்டிகள் இடம்பெற்றனஎன்றுகூறப்பட்டது.

அருகிவரும் கலைகளை வளர்த்தெடுத்து பாதுகாக்கும் நோக்கில் நடைபெறும் அரச நாடக விழாப் போட்டிகளில் தமிழர்களின் பாரம்பரிய கலை வடிவமான நாட்டுக் கூத்து அண்மைக் காலங்களில் இணைத்துக் கொள்ளப்படாமை நாட்டுக்கூத்து கலைஞர்கள் மத்தியில் பெரும் ஆதங்கத்தை ஏற்படுத்துவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. சிங்கள பாரம்பரிய கலை வடிவங்களில் கண்டிய நடனம் எவ்வாறு முக்கியம் பெறுகிறதோ அதே போன்று தமிழர்களின் மரபு வழிக்கலைகளில் நாட்டுக்கூத்து பிரதான அம்சமாக விளங்குவதாக தெரிவிக்கும் கலைத்துறை ஆர்வலர்கள் நாட்டுக்கூத்துக் கலைக்கு அரச நாடக விழாவில் உரிய இடம் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றன. (வ-135)

## பாதிக்கப்படும் இயற்கை எழில்

## வவுனியா விவசாயிகள் கவலை

### இயற்கைக்கு முரணான செயற்பாட்டால்



குளங்களினுள் கொட்டப்பட்ட குப்பைகள்

வவுனியா, மே 19

வவுனியாவிலுள்ள குளங்கள் அண்மைக்காலமாக மனிதர்களின் இயற்கைக்கு முரணான செயற்பாடுகளால் பெரும்பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றன என்று விவசாயிகளும் நன்னீர் மீன் பிடியாளர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக குளங்களுக்குள் அத்துமீறிய குடியிருப்புகளை நிர்மாணித்தல், குளங்களினுள் குப்பைகளை கொட்டுதல் என மனிதனால் மேற்கொள்ளப்படும் இவ்வாறான செயல்களால் குளங்களின் அழகு குறைவதுடன் குளங்களில் வாழும் மீன் வளமும் குறைவடைகிறது.

வவுனியா நகர்ப்புறத்திலுள்ள வைரவபுளியங்குளம், வவுனியாகுளம், பண்டாரிகுளம் ஆகியவற்றில் பொதுமக்கள் குப்பைகளை கொட்டி வருவதால் குளங்கள் வேகமாக மாசடைந்து வருகின்றன.

இதன் காரணமாக நன்னீர் மீன் பிடியாளர்கள் பாதிப்படைவதுடன் விவசாய நிலங்களுக்குள் பிளாஸ்ரிக் பொருள்கள் செல்வதால் விவசாயச் செய்கையும் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருவதாகவும் விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை - குப்பைகள் குளங்களினுள் கொட்டப்படுவதால் குளங்களின் நீர் ஏந்து பிரதேசம் குறைவடைந்து மழை காலங்களில் குளங்களினுள் நீர் வடிந்தோட முடியாது மக்கள் குடியிருப்புக்களுக்குள் செல்லும் நிலையும் தோன்றியுள்ளது.

எனவே குளங்களினுள் குப்பை கொட்டுவோர் தொடர்பில் வவுனியா நகரசபை யினர் அதிகளவில் கவனம் செலுத்த வேண்டும் என்று விவசாயிகளும் நன்னீர் மீன் பிடியாளர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ)



உடல் வெப்பத்தை தணிக்க உதவும் வெள்ளரிப்பழ சீசன் ஆரம்பித்ததையடுத்து குடாநாட்டின் சந்தைகளில் வெள்ளரிப்பழம் விற்பனைக்கு வந்துள்ளது. குருநகர் சந்தையில் பழத்தின் தரத்துக்கேற்ப 60 ரூபா முதல் 100 ரூபா வரை வெள்ளரிப்பழம் விற்பனை செய்யப்படுகிறது. (ஓ-135)

## சிறுவன் சடலமாக மீட்பு

அளவெட்டிப் பகுதியிலுள்ள வீடொன்றினுள் தூக்கில் தொங்கிய நிலையில் சிறுவன் ஒருவனின் சடலம் சுன்னாகம் பொலிஸாரால் நேற்று மீட்கப்பட்டுள்ளது.பூதவிராயர் கோவிலடி, சூராவத்தை சுன்னாகத்தைச் சேர்ந்த சச்சிதானந்தம் - மதுசன் (வயது - 14) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

ரீயூசனுக்குச் செல்லாது மடிக்கணினியில் விளையாடிக் கொண்டிருந்த மகனை தாய் கண்டித்ததாகவும் இதனால் மனமுடைந்த சிறுவன் வீட்டில் ஒருவரும் இல்லாத வேளை தூக்கில் தொங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சடலம் உடற் கூற்றுப் பரிசோதனைக்காக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-400-36-86)

# ஓய்வூதியப் பணிக்கொடைக்காக மாதக் கணக்கில் காத்திருக்கும் அரச சேவை ஓய்வூதியர்கள்

அச்சுவேலி, மே 19

அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் திரட்டிய ஓய்வூதிய பணிக்கொடை கொடுப்பனவை பெற்றுக் கொள்வதற்கு பல மாதங்களாக காத்துக் கிடக்கின்றனர்.

குறித்த கொடுப்பனவைப் பயன்படுத்தி தமது பிள்ளைகளின் திருமணம் மற்றும் கடந்த காலத்தில் பெற்றுக்கொண்ட கடன், பிள்ளைகளின் படிப்பு செலவை ஈடு செய்ய காத்திருந்த போதிலும் உரிய நேரத்துக்கு கிடைக்காததால் மேலதிக பாதிப்புக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் உள்ளாகி இருப்பதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

பத்து மாதங்களுக்கு மேலாகியும் பலருக்கு குறித்த கொடுப்பனவு கிடைக்க வில்லை என்று கூறப்படுகின்றது.

அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுபவர்களுக்கு அவர்கள் பெற்றுக்கொண்டிருந்த திரட்டிய மாதச் சம்பளத்தில் 24 மடங்கு தொகை திரட்டிய ஓய்வூதிய பணிக்கொடை கொடுப்பனவாக வழங்கப்படும்.

கடந்த காலத்தில் திரட்டிய ஓய்வூதிய பணிக்கொடை கொடுப்பனவு ஓய்வுபெற்ற தினத்தில் இருந்து குறிப்பிட்ட சில வாரங்களுக்கு இடையில் ஓய்வூதியத் திணைக்களத்தால் வழங்கப்பட்டு வந்தது.

திரட்டிய ஓய்வூதிய பணிக்கொடை கொடுப்பனவு பத்து வருட காலத்தில் மாதாந்தம் ஓய்வூதியத்தில் இருந்து கழித்தெடுக்கப்படும்.

திரட்டிய ஓய்வூதியப் பணிக்கொடைக்கான கட்டு நிதியை திறைசேரி ஓய்வூதியத் திணைக்களத்துக்கு வழங்குவதில் தாமதிப்பதால் ஓய்வூதியத் திணைக்களத்தால் உரிய வேளையில் கொடுப்பனவை வழங்க முடியவில்லை என்றும் திறைசேரியில் இருந்து கட்டு நிதி கிடைக்கப் பெற்றதும் ஓய்வு பெற்ற கால வரிசையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படலாம் என்று ஓய்வூதியத் திணைக்களம் அறிவித்துள்ளது. அத்துடன் வங்கி ஊடாக கொடுப்பனவை பெறுவதற்கு விருப்பம் தெரிவித்தால் வங்கி மூலம் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியத் திணைக்களத்தின் மூலம் திரட்டிய ஓய்வூதியப் பணிக்கொடை பெறுபவர்கள் திரும்பிச் செலுத்தும் தொகைக்கும் வங்கி மூலம் திரட்டிய ஓய்வூதியம் பணிக்கொடை பெறும்போது திருப்பிச் செலுத்த வேண்டிய தொகைக்கும் இடையே 35 வீதம் வரை அளவில் வேறுபடுவதால் வங்கி மூலம் பெற்றுக் கொள்வதில் பெரும்பாலானவர்கள் விருப்பம் தெரிவிக்கவில்லை.

ஓய்வூதியத் திணைக்களம் வழங்கும் என பல மாதங்களாக காத்துக்கிடக்கின்றனர். வங்கிகள் மூலம் பணிக்கொடை வழங்குவதற்கு தொழிற் சங்கங்களும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

உரிய நேரத்தில் உரிய தேவைக்கு திரட்டிய ஓய்வூதியப் பணிக்கொடை வழங்கப்படாமல் இருப்பது பலத்த ஏமாற்றத்தை அளித்திருப்பதோடு ஓய்வுபெற்றவர்களை உளத் தாக்கத்துக்கு உள்ளாக்கி உள்ளது. இது இறப்புக்குப் பிந்திய கொடுப்பனவாகத் தான் இருக்கப் போகிறது என்று விசனம் தெரிவிக்கின்றனர். (வ-11)

## இலங்கையர் ஒருவர் இத்தாலியில் கைது

இத்தாலியின் போலோக்ஞ்ஞா நகரில் மதுபோதையில் குழப்பம் விளை வித்த இலங்கையர் கைது செய்யப் பட்டுள்ளார்.

36 வயதான இந்த இலங்கையர் மதுபோதையில் போல் வேதேரே வீதியில் உள்ள உணவகம் ஒன்றின் உரிமையாளருக்குத் தொந்தரவுகொடுத்ததுடன் அவரைத் தவறாக வழிநடத்த முயன்றுள்ளார்.

அதனையடுத்து உணவகத்தின் உரிமையாளர் பொலிஸாருக்கு அறிவித் துள்ளார்.

பொலிஸார் அங்கு சென்றபோது, இலங்கை நபர் பொலிஸாரையும் தாக்கியுள்ளதுடன் ஒரு பொலிஸ் அதிகாரியின் சட்டையைப் பிடித்து சண்டையிட்டுள்ளார். தாக்குதலில் காயமடைந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

அதேவேளை பிரிட்டன் நீதிமன்ற மாவட்ட நீதிமன்றம் ஒன்று இலங்கையர் ஒருவரை விளக்கமறியலில் வைக் குமாறு உத்தரவிட்டுள்ளது.

பிரிட்டனில் நிரந்த வசிப்பிடம் இல்லாத 39 வயதான சமந்த குமார என்ற இந்த நபர் தன் மீது சுமத்தப்பட்ட 14 குற்றச்சாட்டுக்களை ஒப்புக் கொண்டார்.

பெண்ணொருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியமை, கொலை அச்சுறுத்தல் விடுத்தமை, பிள்ளை ஒன்றை சித்திரவதை செய்தமை உள்ளிட்ட 14 குற்றச் சாட்டுக்கள் சந்தேக நபருக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்தது. (வ)

# சிங்கள தேசமும், தமிழர் தேசமும் ஒருபோதும் ஒரு நாடு என்ற கூட்டுக்குள் வாழமுடியாது

### நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் தெரிவிப்பு



வி.உருத்திரகுமார்

சிங்கள தேசமும், தமிழர் தேசமும் இனி ஒரு போதும் ஒரு நாடு என்ற கூட்டுக்குள் வாழ முடியாது என்று நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமார் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் பெருவலியின் துயர நினைவுகளைச் சுமந்த நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி. உருத்திரகுமாரனுடைய மே-18 தமிழீழத் தேசிய துக்க நாள் உரை, சமகால அரசியல் அரங்கில் தமிழர்களின் முன்னகர்வு குறித்து முன் வைத்துள்ளது. இதன்போது உருத்திரகுமாரன் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிங்கள தேசமும், தமிழர் தேசமும் இனி ஒரு போதும் ஒரு நாடு என்ற கூட்டுக்குள் வாழ முடியாது என்பதனை முள்ளிவாய்க்கால் இன அழிப்பு மிகத் தெட்டத் தெளிவாக முரசறைந்திருக்கிறது. தமிழர் தேசத்தை சிங்களவர்களுடன் சேர்ந்து ஒரே நாட்டில் வாழுமாறும், இலங்கை அரசு இன அழிப்பை மறக்குமாறும் மன்னிக்குமாறும் எம்மை வற்புறுத்தாதீர்கள் என்று அனைத்துலக சமூகத்துக்கு நாம் முறையீடு ஒன்றைச் செய்கிறோம்.

எந்த அனைத்துலக சமூகம் எமது தேசத்தின் ஆயுதப் போராட்டத்தைத் தோற்கடிக்கத் துணை நின்றதோ அதே அனைத்துலக சமூகத்திடம் நாம் நீதி கோருகிறோம்.

அரசுகளின் நலன்களும் எமது நலன்களும் ஆரம்பத்தில் எமது இறுதி இலக்கு வரை இணையாது இருக்கலாம். சில சமயங்களில் நமது பயணத்தில் பாதி வழி வரை கூட சில அரசுகள் வரக்கூடிய வாய்ப்புக்களும் கிடைக்கலாம்.

நாமும் அனைத்துலக அரசுகளும் வேறுபட்ட நோக்கங்களுக்காக ஒரே வழியில் பயணம் செய்யும் நிலையும் தோன்றலாம்" என்றும் தெரிவித்துள்ளார். (வ)

## தீவிரவாதத்துடன் தொடர்புடைய இலங்கையர் மலேசியாவில் கைது



கைது செய்யப்படும் இலங்கையர்

இந்தியாவில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டதாகக் கூறப்படும் இலங்கையர் ஒருவர் மலேசியாவில் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் இந்திய தூதரங்கள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டதாகக் கூறப்படுகின்றது.

மலேசியாவின் புகிட் அமான் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கடந்த புதன்கிழமை கீபொங்கில் வைத்து அவரைக் கைதுசெய்துள்ளனர்.

பின்னர் அவர்கள் வழங்கிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, மேலும் மூவர் இந்தியாவின் சென்னையில் கைதாகியுள்ளனர்.

கைதான இலங்கையர் அல்-குவைதாவுடன் மறைமுகத் தொடர்பு கொண்டிருப்பதாகவும், இலங்கை மற்றும் பிற நாடுகளில் தீவிரவாத செயல்களுடன் தொடர்புபட்டமை தொடர்பில் தேடப்பட்டு வந்தவர் என்றும் தெரிய வந்துள்ளது.

அவர் கடந்த 2011 ஆம் ஆண்டில் இருந்து மலேசியாவில் பதுங்கியிருப்பதாவும், பொலிஸார் அவரைக் கடந்த டிசெம்பர் மாதத்தில் இருந்து கண்காணித்து வந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள் ளன.

மேலும் குறித்த நபர் போலிக் கடவுச்சீட்டு மூலம் மலேசியாவுக்குள் நுழைந்துள்ளமையும்தெரியவந்துள்ளது.(வ)

## ஈழத்தமிழருக்கு இழைத்த கொடூரத்தால் குப்பைத் தொட்டிக்குள் வீசப்பட்டது காங்.

### அவமானகரமான தோல்வியென வைகோ ஏளனம்

ஈழத் தமிழர்களுக்குக் கொடூரம் இழைக்கும் பெருங் குற்றத்துக்குத் துணைபோனமைக்காக காங்கிரஸ் கட்சி குப்பைத் தொட்டிக்குள் தூக்கி வீசப்பட்டிருக்கிறது - இவ்வாறு ஏளனம் தெரிவித்திருக்கிறார் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ.

சென்னை தண்டையார் பேட்டையில் 'மே17' இயக்கத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி நேற்று நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஈகைச் சுடரேற்றி, மலரஞ்சலி செலுத்திய பின்னர் அங்கு திரண்டிருந்த மக்கள் மத்தியில் அவர் உரையாற் றினார். அப்போது அவர் கூறியவை வருமாறு:-

ஈழத் தமிழர்களுக்கு இழைத்த கொடூரங்களுக்காக காங் கிரஸ்கட்சி வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் வீசப்படும் என்று நான் கூறி வந்தேன். அதுவே இப்போது நடந்திருக்கிறது. 1947 இல் நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் - முதலாவது சுதந்திரப் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் - காங்கிரஸ் கட்சி அடைந்த மிகப் பெரிய தோல்வி, அவமானகரமான தோல்வி இது. ஈழத்தமிழர்களுக்கு இழைத்த கொடூரங்களுக்காக காங்கிரஸ் கட்சி இப்படி வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் தூக்கி வீசப்படும் என்றேன். - என்றார் அவர்.

## ஆஸியில் புதிய எல்லை பாதுகாப்புப் படைப்பிரிவு

இலங்கை உள்ளிட்ட நாடுகளின் அகதிகளைக் கட்டுப் படுத்துவதற்காகப் புலனாய்வாளர்களின் தலைமையிலான புதிய எல்லைப் பாதுகாப்புப் படைப்பிரிவு ஒன்றை ஆஸ்திரேலியா நியமித்துள்ளது.

இதன் பணிகள் புதன்கிழமை ஆஸ்திரேலியாவின் குடிவரவுத்துறை அமைச்சர் ஸ்கொட் மொரி சனினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தற்போது அகதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக, இலங்கை, மலேசியா, இந்தோனேசியா போன்ற அரசுகளுக்கு நிதியையும் வளங்களையும் வழங்கி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

எனினும் இது ஆஸ்திரேலியாவுக்கு மிகுந்த செலவினத்தை ஏற்படுத்தி இருந்தது. இந்த நிலையில் புலனாய்வுத்துறையை மையப்படுத்திய புதிய படைப்பிரிவு உருவாக் கப்பட்டுள்ளது.

(வ)

# முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு நீதி வழங்க வேண்டும் புதிய இந்திய அரசு

### தொல்.திருமாவளவன் வேண்டுகோள்

சென்னை, மே.19

முள்ளிவாய்க்கால் இனப் படுகொலைக்கு நீதி வழங்க வேண்டும். புதிதாகப் பொறுப்பேற்கும் இந்திய அரசுக்கு தொல்.திருமாவளவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இதே நாளில் (மே 18) முள்ளி வாய்க்காலில் இலங்கை அரசால் நிகழ்த் தப்பட்ட இனப்படுகொலையில் உயிரிழந்த ஈழத்தமிழ்ச் சொந்தங்களுக்கு எமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். மனித குல வரலாற்றில் நிகழ்த்தப்பட்ட மிகப் பெரிய வன்முறைகளில் ஒன்றாக இந்த இனப்படு கொலை இப்போதுதான் சர்வதேச சமூகத்தால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபை சுதந்திரமான போர்க் குற்ற விசாரணை ஒன்றை தற்போது மேற்கொண்டுள்ளது. அதன் முடிவில் அந்தப் படுகொலைக்குப் பொறுப்பானவர்கள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கை எழுந்துள்ளது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நிகழ்த்தியதோடு மட்டுமல்லாமல் இன்றும்கூட ஈழத்தமிழர்கள் மீது இராணுவ வன்முறையை இலங்கை அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது.

உலக அளவில் தமிழர்களும் தமிழ் அமைப்புகளும் பயங்கரவாதிகள் என்ற பெயரில் இலங்கை அரசால் தடை செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது பதவி இழந்துள்ள காங்கிரஸ் அரசு, ராஜபக்ஷ வுக்குத் துணையாக அந்தத் தடையை இந்தியாவிலும் செயற்படுத்தப் போவதாக அறிவித்திருந்தது. மத்தியில் புதிய அரசு ஒன்று பொறுப் பேற்கவுள்ள நிலையில் இந்தியாவின் இலங்கை கொள்கை மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்.

ஈழத் தமிழர்களுக்கு நீதி வழங்கும்விதத்தில் இந்திய அரசு நடந்துகொள்ள வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் வலியுறுத்து கிறேன்.

ஈழத் தமிழர்களின் சிக்கலுக்கு தமிழ் ஈழம் ஒன்றே தீர்வாகும். அதனை எட்டும் விதமாக ஐ.நா. மேற்பார்வை யில் கருத்தறியும் வாக்கெடுப்பை நடத்த இந்திய அரசு முன் முயற்சி எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்- என்றுள்ளது. (வ)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### சிங்கராசா ஜனனி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 21-9-1987 | 19-4-2014 |

கனிவான உன் முகம் காணாது
எம் நெஞ்சம் தவிக்கிறதேயடா
உன்னை நாம் எப் பிறப்பில் காண்பதோ?
மனதிலே என்றும் நீ நிறைந்தாய்
உன் பிரிவு எம்மை மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டதே
ஏன் எம்மை விட்டு ஓடிப் பறந்தாய்
உன்னைப் பிரிந்து முப்பத்தொரு நாள்கள் என்ன
எத்தனை நாள்கள் சென்றாலும்
உன்னை எம்மால் மறக்கவே முடியாதம்மா
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்:
சி.குகராஜ்



## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.


## இலங்கைத் தமிழர், மீனவர் பிரச்சினையில் நடவடிக்கை

### பா.ஜ.க. அரசு மேற்கொள்ளும் என்கிறார் பொன்.ராதாகிருஷ்ணன்



பொன். ராதாகிருஷ்ணன்

சென்னை, மே 19

இலங்கைத் தமிழர்கள், மீனவர்கள் பிரச்சினையில் பா.ஜ.க. அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்று பா.ஜ.கவின் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்பொன். ராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் அவர் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'இலங்கைத் தமிழர்கள், மீனவர்கள் பிரச்சினையில் பா.ஜ.க. அரசு உரிய நடவடிக்கை எடுக்கும். அதே போல், நதிநீர் பிரச்சினையிலும் பா.ஜ.க. அரசு தீர்வு காணும்.

நாடாளுமன்றத் தேர்தலின் போது நடைமுறையில் இருந்த 144 தடை உத்தரவை சில அரசியல் கட்சிகள் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டன. நரேந்திர மோடி அலையால் தான் தேர்தலில் பா.ஜ.க. அதிக இடங்களை கைப்பற்றியது. மேலும், அமைச்சர்கள் நியமனத்தை பா.ஜ.க.வின் மேலிடம் முடிவு செய்யும்"- என்றார். (வ)

## பரிசளிப்பு விழா

கிளிநொச்சி, மே 19

கிளிநொச்சி, உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை பாடசாலை அதிபர் திருமதி மீனலோஜினி இதய சிவதாஸ் தலைமையில் நடைபெறும்.


நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா முதன்மை விருந்தினராகவும் சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேலும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-18)

உதயன் 19.05.2014



# வெண்குஷ்ட நோய் பரவுவது அதிகரிப்பு

### மக்களின் கவனயீனமே காரணம்



சுகாதார அமைச்சரை ஜப்பான் நிகபான் மன்ற தலைவர் சந்தித்தபோது...

கொழும்பு.மே 19

இலங்கையில் கடந்த சில வருடங்களாக வெண்குஷ்ட நோய் பரவுவது அதிகரித்து வருகிறது. இந்தநோய் குறித்து மக்கள் பொருட்படுத்தாமல் செயற்படுவதே இதற்கு முக்கிய காரணம் என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இலங்கை வந்துள்ள ஜப்பான் நிகபான் மன்றத் தலைவர் யொஹி அசகாவுடன் சுகாதார அமைச்சில் நடைபெற்ற பேச்சின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் இருந்து வெண்குஷ்ட நோயை ஒழிக்க தேவையான சகல உதவிகளையும் வழங்கத் தயாராக இருப்பதாக அசகா உறுதியளித்துள்ளார்.

இலங்கையில் வெண்குஷ்ட நோய் உயர்வடைந்து வரும் நிலையில், அது குறித்து மக்களுக்கு விழிப்பூட்டும் பல திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் கூறினார்.

இலங்கையில் இலவச சுகாதார சேவையின் கீழ் வறியவர், செல்வந்தர் என்ற பேதமின்றி சகலருக்கும் சுகாதார வசதிகள் சமமாக வழங்கப்படுகின்றன என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ச)

# சர்வதேச விசாரணை நிச்சயம் நடந்தே தீரும்

## அதனை இராஜதந்திர ரீதியில்தான் அணுக வேண்டும் என்கிறார் ராஜித




கொழும்பு.மே 19

சர்வதேச விசாரணையை நாம் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அது நிச்சயமாக நடக்கும். இந்த விசாரணையின் பிரதிவாதிகளான நாம் கலந்து கொள்ளாமல் விசாரணை நடக்குமானால் அதன் முடிவு பாரதூரமானதாகவே இருக்கும் ; சவால்களையும் எதிர் நோக்க வேண்டிவரும்.

இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போரை வெற்றி கொள்வதற்கு பலமும் புத்திசாலித்தனமும் தேவைப்பட்டது. ஆனால் தற்போது எழுந்துள்ள சர்வதேச அழுத்தங்களையும் சவால்களையும் வெற்றி கொள்ள புத்திசாலித்தனமே தேவை.

சமஷ்டி அடிப்படையிலான தீர்வைக் கோரி வந்த தமிழ் தரப்பினர் போர் முடிவடைந்ததும் முதல் தடவையாக ஐக்கிய இலங்கைக்குள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வுத் திட்டத்துக்கு இணங்கினார்கள். ஆனால் அரசு அதனைக் கருத்தில் கொள்ளாமல் காலதாமதமாகியதால் அவர்கள் மீண்டும் தமது பயணத்தை மாற்றியுள்ளனர்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் எமது அரசியல் தலைவர்கள் கைநழுவ விட்டனர். சிலர் அவற்றைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. ஆனால் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தற்போது நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதனைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

போர் முடிந்தவுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருடன் உரிய முறையில் பேச்சுக்களை நடத்தி ஐக்கிய இலங்கைக்குள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வொன்றை முன்வைத்திருக்கலாம். அவ்வாறு செய்திருந்தால் இன்று இவ்வாறான சர்வதேச அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது.

இன்று சர்வதேச விசாரணையை ஏற்றுக்கொள்ள மாட்டோம். இலங்கைக்குள் எந்தவொரு விசாரணைக் குழுவையும் அனுமதிக்க மாட்டோம் என்றெல்லாம் வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. இது மிகவும் முட்டாள் தனமான வாதமாகும்.

இந்த விசாரணையில் பிரதிவாதிகளே நாம் தான். எனவே நாம் இந்த விசாரணையில் கலந்து கொள்ளாமல் விசாரணைகள் நடக்குமானால் முடிவு பயங்கரமானதும் பாரதூரமானதுமாக இருக்கும். எனவே இந்த விடயம் தொடர்பில் நன்றாகச் சிந்தித்து இராஜதந்திர ரீதியில் தான் அணுக வேண்டும்.

எமது நாட்டுக்கு எதிராக பொருளாதாரத்தடை விதிக்கப்படுமானால் பொருளாதாரம் பாதிப்படையும். லட்சக்கணக்கானோர் வேலைவாய்ப்பை இழக்க வேண்டிவரும்.

இவ்வாறான சவால்கள் ஒன்றன்பின் ஒன்றாக வரும்போது மக்கள் கிளர்ந்தெழுவார்கள். அப்பொழுது சர்வதேசம் எதிர்பார்க்கும் அரசியல் மாற்றம் ஏற்படும்-என்றார். (ச)

# எண்ணெய் அகழ்வில் பிரெஞ்சு நிறுவனம்

### இலங்கை அரசுடன் இணைந்து

கொழும்பு.மே 19

யாழ்ப்பாணத்துக்கு கிழக்கிலுள்ள கடற்படுகையில், இலங்கைஅரசுடன் இணைந்து பிரெஞ்சு பல்தேசிய எண்ணெய், எரிவாயு நிறுவனம் ஒன்று எண்ணெய் அகழ்வில் ஈடுபடவுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு கிழக்கே, தொடங்கி திருகோணமலை, மட்டக்களப்பு வரையான கடற்படுகையில், இந்த எண்ணெய் வள ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இயங்கும், பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திக் குழு, பிரெஞ்சு நிறுவனத்துடன் இணைந்து இந்த கூட்டு ஆய்வை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

இந்த ஆய்வுக்கான அனைத்துச் செலவையும் பிரெஞ்சு நிறுவனமே பொறுப்பேற்கும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (ச)

# ஜனாதிபதி தேர்தலில் பங்குபற்றுவதில்லை

### சோபிததேரர் கூறுகிறார்

கொழும்பு.மே 19


ஜனாதிபதித் தேர்தலில் பங்கேற்கும் உத்தேசங்கள் எதுவும் இல்லை என்று கோட்டே நாக விகாரையின் பீடாதிபதி மாதுலுவே சோபித தேரர் தெரிவித்தார்.

நாட்டின் சகல மத மக்களிடையேயும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே தமது நோக்கம் என்று அவர் கூறினார்.

மதப் பயங்கரவாத நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிடத் திட்டமிட்டுள்ளதாக வெளியாகும் தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை என்று அவர் சுட்டிக்காட்டினார். (ச)

## மாத்தறையில் கொண்டாட்டம்... இங்கே...



தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையில் இடம்பெற்ற போர் வெற்றியின் ஐந்து ஆண்டுகள் பூர்த்தி நேற்று ஞாயிற்றுக்கிழமை மாத்தறையில் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொடியை ஏற்றி வைத்தார்.

# ஆசிய பசுபிக் மாநாடு கொழும்பில் நாளை முதல்

கொழும்பு.மே 19

தொற்றுநோய் ஒழிப்பு மற்றும் பொது சுகாதார முகாமைத்துவம் தொடர்பான ஆசிய பசுபிக் பிராந்திய ஒத்துழைப்பு மாநாடு கொழும்பில் நடைபெறவுள்ளது.

விமானங்கள் மூலம் வருகை தரும் பயணிகள் ஊடாக தொற்று நோய்கள் பரவுவதை தடுப்பதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

இந்த மாநாடு நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது என்று சிவில் விமான சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த மாநாட்டில் தொற்று நோய்கள் இலங்கையில் பரவுவதை தடுப்பதற்காக சர்வதேசத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வது, சர்வதேச தொடர்புகள் மற்றும் தகவல் பரிமாற்றத்தை விஸ்தரிப்பது, பிராந்திய விமான சேவைகள் மற்றும் சுதாதார அதிகாரிகளுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளன என்று சிவில் விமான சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது. (ச)

# இலங்கையில் இருந்து இளநீர் சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி

### லுணுவில தெங்கு ஆராய்ச்சி நிலையம் தகவல்

கொழும்பு. மே 19

இலங்கையிலிருந்து மாதாந்தம் 200,000 இளநீர் சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்று லுணுவில தெங்கு ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் உள்நாட்டு சந்தைகளுக்கே இளநீர் விநியோகிக்கப்பட்டன என்று நிலையத்தின் பணிப்பாளர் ஜயந்த குணதிலக்க சுட்டிக்காட்டினார். தற்போது சர்வதேச சந்தையில் இளநீருக்கான கேள்வி அதிகரித்துள்ளது.

பிரிட்டன், சுவிற்ஸர்லாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கே அதிகளவில் இளநீர் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று அவர் மேலும் கூறினார்.

மத்திய கிழக்கு நாடுகளிலும் இலங்கையின் இளநீருக்கு கேள்வி அதிகரித்துள்ளது.




இளநீர் ஏற்றுமதியை அதிகரிக்கும்வகையில் விமானம்மூலம் அதனை அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)


மு.க.அழகிரி

# தலைமை அழைத்தால் கட்சியில் இணைவேன்

## மு.க.அழகிரி கூறுகின்றார்

சென்னை, மே 19

தி.மு.க.வின் தலைமை என்னை அழைத்தால் தி.மு.கவில் மீண்டும் இணைவேன் என்று மு.க.அழகிரி தெரிவித்துள்ளார். தனியார் தொலைக் காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வேட்பாளர் தேர்வில் கருணாநிதியின் தலையீடு இல்லாமல் ஒருவர் மட்டுமே அனைத்து முடிவுகளையும் எடுத்ததே தி.மு.கவின் தோல்விக்கு காரணம்.

தி.மு.க. தலைமை மீண்டும் அழைத்தால், எனது நிபந்தனைகளை தலைமை ஏற்றால் மீண்டும் தி.மு.கவில் இணையத் தயாராக உள்ளேன். தி.மு.க. தலைவர் கருணாநிதியையும் விரைவில் சந்திக்க உள்ளேன்" - என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# பதவி விலகுவாரா சோனியா காந்தி?

புதுடில்லி, மே 19

நடைபெற்று முடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வியடைந்துள்ள நிலையில், அந்தக் கட்சியின் தலைவி சோனியா காந்தி, கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து விலகவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

நடைபெற்று முடிந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சி 45 இடங்களை மட்டுமே பெற்று படுதோல்வியை சந்தித்துள்ளது. ஊழல் குற்றச்சாட்டுக்களும், விலைவாசி உயர்வும், நிர்வாகத்தில் ஏற்பட்ட குளறுபடிகளும் காங்கிரஸ் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக கூறப்படுகிறது.

தேர்தல் தோல்வி குறித்துக் கருத்துத் தெரிவித்திருந்த சோனியாவும், ராகுலும் தோல்விக்கு தாங்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்திருந்தனர்.

இந்தநிலையில் இன்று காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதில் காங்கிரஸ் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

காங்கிரஸுக்கு ஏற்பட்டுள்ள வீழ்ச்சி சோனியா, ராகுல் காந்தி இருவரிடமும் கடும் மனவேதனையை ஏற்படுத்தி இருப்பதாக கூறப்படுகிறது. எனவே சோனியா காங்கிரஸ் தலைவர் பதவியில் இருந்து விலகவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

சோனியாவைத் தொடர்ந்து ராகுலும் துணைத் தலைவர் பதவியிலிருந்து விலகுவார் என்றும் கூறப்படுகின்றது.

ஆயினும் அவர்கள் இருவரும் பதவி விலகல் கடிதங்களைக் கொடுத்தாலும், அதை காங்கிரஸ் செயற்குழு ஏற்காது என்கின்ற நிலையில் அவர்கள் தொடர்ந்தும் தத்தமது பதவிகளில் இருப்பார்கள் என்றும் ஒரு தகவல் கூறுகின்றது. (ற)

# லேடிக்கு மோடி வாழ்த்து

சென்னை, மே 19

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் வாழ்த்துக் கடிதத்தை பெற்ற நரேந்திர மோடி தொலைபேசியில் ஜெயலலிதாவுக்கு நன்றியும் வாழ்த்தும் தெரிவித்துள்ளார்.

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் மோடி வெற்றி பெற்றதையடுத்து அவருக்கு தமிழக முதல்வர் கடிதம் மூலம் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார். அந்தக் கடிதத்தைப் பெற்றுக் கொண்ட மோடி, தொலைபேசி மூலம் ஜெயலலிதாவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அத்துடன், மத்திய அரசு, மாநில அரசுகளுடன் நல்லுறவு நிலவ நடவடிக்கை எடுக் கப்படும் என்று மோடி உறுதியளித்துள்ளார். (ற)

# பதவி விலகுகிறார் மு.க.ஸ்டாலின்?


மு.க. ஸ்டாலின்

சென்னை, மே 19

தி.மு.கவின் அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் மு.க. ஸ்டாலின் விலக முடிவு செய்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. மக்களவைத் தேர்தல் தோல்வியை அடுத்து மு.க.ஸ்டாலின் இந்த முடிவு எடுத்துள்ளார் என்றும், பதவி விலகல் குறித்து கருணாநிதியிடம் ஸ்டாலின் கடிதம் அளித்துள்ளார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

ஆயினும் மு.க. ஸ்டாலின் பதவி விலகல் குறித்து தி.மு.க. அதிகாரபூர்வமாக எந்த அறிவிப்பையும் விடுக்கவில்லை. (ற)




தி.மு.கவினரிடையே மீண்டும் ஒரு சுவரொட்டிப் போர் தொடங்கியுள்ளது. ஸ்டாலின் தலைமையில் திமுக சந்தித்த முதல் லோ[illegible] தேர்தலில் சந்தித்த மிகப் பெரிய தோல்வியால் அழகிரி ஆதரவாளர்கள் உற்சாகமடைந்துள்ளனர். இந்த நிலையில்தான் மதுரையில் சுவரொட்டி ஒட்டியுள்ள அழகிரி ஆதரவாளர்கள் அதில், "மூத்தவன் சொல்லும், முத்துன நெல்லிக்காயும் புளிக்கத்தான் செய்யும், ஆனால் எதிர்காலத்திற்கு நல்லது" என்ற வாசகத்தின் கீழ் "மூத்தவரே" என அச்சிட்டு அதன் அருகில் தி.மு.க. தலைவர் கருணாநிதி, மு.க.அழகிரி படம் அச்சிடப்பட்டு உள்ளது. இவ்வாறான சுவரொட்டிப் போர்தான் அழகிரியை தி.மு.கவிலிருந்து ஓரம் கட்டி வைக்க வழிகோலியது. (ற)

# அனைத்தும் நாடகமே

## மு.க. அழகிரி கூறுகின்றார்

மதுரை, மே 19

மு.க.ஸ்டாலின் தி.மு.க.வில் இருந்து விலகவுள்ளார் என்று வெளியாகியுள்ள தகவல் வெறும் நாடகமே என்று தெரிவித்துள்ளார் மு.க.அழகிரி.

தேர்தல் தோல்வியை அடுத்து கட்சியின் அனைத்து பொறுப்புகளில் இருந்தும் மு.க.ஸ்டாலின் விலக உள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது. அதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த மு.க. அழகிரி,

"அவர் பதவி விலகல் கடிதம் அளிக்க உள்ள தகவல் இப்போதுதான் எனக்கும் தெரியும். இது அனைத்தும் நாடகமே. அவர் பதவி விலகல் கடிதம் கொடுப்பது போல் கொடுப்பார்; உடனே சிலர் வேண்டாம் என்று தடுப்பார்கள். அதனையடுத்து திமுக தலைவரும் ராஜினாமாவை ஏற்றுக் கொள்ள முடியாது என கூறுவார்.

இந்த நாடகம் எவ்வளவு காலம் நடக்கும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்" - என்று தெரிவித்துள்ளார். (ற)

# கட்சி தலைவர்களுடன் மோடி ஆலோசனை

புதுடில்லி, மே 19

புதிய பிரதமராகப் பதவியேற்கவுள்ள உள்ள நரேந்திர மோடி பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களுடன் நேற்று முக்கிய ஆலோசனை நடத்தியுள்ளார்.

தமது நெருங்கிய நண்பரான அமித் ஷா, பாரதீய ஜனதா கட்சியின் பொதுச் செயலாளர் நட்டா, கர்நாடக முன்னாள் முதலமைச்சர் எடியூரப்பா மற்றும் பாரதீய ஜனதாக் கட்சியின் [illegible] மாநில பொறுப்பாளர் தர்மேந்திர பிரதான் ஆகியோருடன் மோடி ஆலோசனை நடத்தினார்.

குஜராத் முதல்வராக இருக்கும் நரேந்திர மோடி, பிரதமராகப் பதவி ஏற்க உள்ளதால், புதிய முதல்வர் குறித்து அமித் ஷாவுடன் ஆலோசித்திருக்கலாம் எனத் தெரிகிறது. அதே போல், மக்களவைத் தேர்தல் தோல்வியால் பீகார் முதலமைச்சர் நிதிஷ் குமார், தனது பதவியில் இருந்து விலகியுள்ளதால் அம்மாநிலத்தில் நிலவும் அரசியல் சூழல் பற்றி தர்மேந்திர பிரதனுடன் விவாதித்திருக்கலாம் என கூறப்படுகிறது.

லோக் ஜனசக்தி தலைவர் ராம் விலாஸ் பஸ்வானையும், நரேந்திர மோடி சந்திக்க திட்டமிட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது. அதேவேளை நரேந்திர மோடி பாரதீய ஜனதா கட்சியின் நாடாளுமன்ற குழு தலைவராக நாளை தேர்வு செய்யப்பட உள்ளார். (ற)

# கைப்பாவை அல்ல பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ் கூறுகின்றது

புதுடில்லி, மே 19

புதிதாக ஆட்சி அமைக்க உள்ள பாரதீய ஜனதாக் கட்சியின் செயற்பாடுகளில் ஆர்.எஸ்.எஸ் தலையிடாது என்று அதன் தேசிய செய்தித் தொடர்பாளர் ராம் மாதவ் கூறியுள்ளார். அத்துடன், ஆர். எஸ்.எஸ் ஒரு அரசியல் அமைப்பு அல்ல என்றும் இந் திய மக்களுக்கு சேவை புரி யும் அமைப்பு என்றும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறும்போது, "மக்கள் நலனில் அக்கறை கொண்டு மக்களுக்கு சிறந்த சேவை அளிக்கும் வகையில் ஆர்.எஸ்.எஸ். செயல்படும். பாரதீய ஜனதா கட்சி வெற்றி பெற்றால் ஆர்.எஸ்.எஸ்சின் கைப்பாவையாக பாரதீய ஜனதா செயல்படும் என்ற பல்வேறு கட்சிகள் கூறும் குற்றச்சாட்டுக்களை மறுக்கின்றேன்"- என்று தெரிவித்துள்ளார்.

இதே கருத்தைப் பாரதீய ஜனதாவின் மூத்த தலைவர் வெங்கையா நாயுடுவும் தெரிவித்துள்ளார். (ற)

# தோல்வி ஆராய்ச்சிக்குரியது

## ஞானதேசிகன் கூறுகின்றார்

சென்னை, மே 19

தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் தோல்வி ஆராய்ச்சிக்குரியது. ஆனால் கவலைக்குரியது அல்ல என்று அந்தக் கட்சியின் மாநில தலைவர் ஞானதேசிகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"10 ஆண்டு காலமாக காங்கிரஸ் ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. புதிதாக அமையவுள்ள அரசுக்கு 1 லட்சத்து 81 ஆயிரம் கோடி ரூபா அந்நிய செலாவணியை கையிருப்பில் விட்டுச் செல்கின்றோம். நாட்டின் மீது இருந்த கடன்களை அடைத்து, இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப்பட்ட பிற நாடுகளுக்கு கடனுதவி செய்யும் வலிமையை உருவாக்கிக் கொடுத்தது காங்கிரஸ் அரசுதான்.

வலிமையான பிரசார யுக்திகள், பணக்காரர்களின் அருளாசிகள், ஊடகங்களின் ஆதிக்கம் போன்றவை காங்கிரஸ் கட்சியை தோல்வியைச் சந்திக்க வைத்திருக்கின்றன.


ஞானதேசிகன்

> "வலிமையான பிரசார யுக்திகள், பணக்காரர்களின் அருளாசிகள், ஊடகங்களின் ஆதிக்கம் போன்றவை காங்கிரஸ் தோல்வியை சந்திக்க வைத்திருக்கிறன.

தோற்றதால் காங்கிரஸ் கட்சியின் தொண்டர்கள் துவண்டு போக வேண்டிய அவசியம் இல்லை. தமிழக மக்கள் தங்கள் தேர்வை மறுபரிசீலனை செய்வார்கள்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# இந்திய அரசியலைச் சீர்படுத்தும் வாய்ப்பு கிடைத்துள்ளது மோடிக்கு


## அமெரிக்க அமைப்புகள் கூறுகின்றன

வொஷிங்டன், மே 19
இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில் பாரதிய ஜனதாக் கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது.
அதையடுத்து எதிர் வரும் புதன்கிழமை அந்தக் கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திரமோடி பிரதமராகப் பதவியேற்கவுள்ளார்.
அவரின் வெற்றியைப் பாராட்டியுள்ள அமெரிக்க அமைப்புகள், இந்த வெற்றியின் மூலம் இந்தியாவின்அரசியலமைப்பை மாற்றியமைக்கும் சந்தர்ப்பம் மோடிக்குக் கிடைத்துள்ளது என்று கூறியுள்ளன.
"சர்வதேச அமைதிக்கான கார்னகி என்டோமென்ட்" என்ற அமைப்பு வெளியிட்டுள்ள தகவலில்-
"இந்த அமோக வெற்றி நரேந்திர மோடிக்காக மட்டும் கிடைக்கவில்லை, இந்திய மக்களுக்கும் கிடைத்திருக்கும் வெற்றியாகும்.
அவர்கள் கடந்த ஆட்சியின் தவறான கொள்கைகளுக்கும், தவறான பொருளாதார நிர்வாகத்துக்கும் எதிராக வாக்களித்துள்ளனர்.
அந்தத் தவறுகளை மோடி திருத்துவார் என்று எதிர் பார்க்கிறோம். இதன் மூலம் இந்திய - அமெரிக்க உறவு மேலும் வலுப்பெறும்.
இதற்கு அமெரிக்க அரசுத் தரப்பும் நிறைய செய்ய வேண்டியுள்ளது. ஆட்சி அமைக்க மோடிக்கு தனிப் பெரும்பான்மை கிடைத்துள்ளதால், இந்திய அரசியலை மாற்றியமைக்கும் வாய்ப்பு அவருக்கு கிடைத்துள்ளது. இதை மோடி செய்தார் என்றால் பிரதமர் பதவியில் நீண்ட காலம் நீடிப்பார்"- என்று தெரிவித்துள்ளது.
ரைஸ் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பேராசிரியரும், அமெரிக்க நிதித்துறையில் பணியாற்றியவருமான ரஸல் கிரீன் கருத்துத் தெரிவிக்கையில்;
"2010ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் எழுந்த பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்களாலும், பலவீனமானவர் பிரதமர் பதவி வகித்த காரணத்தாலும் இந்தியாவில் முதலீடுகள் குறைந்துவிட்டன.
அதனால் பொருளாதாரத்தை மேம்படுத்த தேவையான மின்சாரம், வீதி வசதிகள், நிர்வாகம்ஆகியவற்றைஅளிக்க கடந்த அரசு தவறிவிட்டது. அவற்றை மோடி சீர் செய்யக்கூடும்' என்று தெரிவித்துள்ளார். (ற)

## சுமத்திரா தீவில் நிலநடுக்கம்

நியூயோர்க், மே 19
இந்தோனேஷியா சுமத்திரா தீவில் நேற்றுக் காலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.
இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.2 ஆக பதிவாகியுள்ளது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
குறித்த நிலநடுக்கம், இந்தோனேஷியா சுமத்திரா தீவின் மேற்கு கடற்கரை நகரம், பந்த ஏஸெ நகரில் இருந்து 300 கிலோமீற்றர் தொலைவில் 9 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளது.
நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தெரியவரவில்லை. சுனாமி எச்சரிக்கையும் விடப்படவில்லை. (ற)

## தொல்லை கொடுத்த பயணி; மீள திரும்பியது விமானம்



நியூயோர்க்,மே 19
அமெரிக்காவிலிருந்து லண்டன் புறப்பட்ட விமானம் ஒன்று பயணியின் மோசமான நடத்தையால் புறப்பட்ட இடத்துக்கே திரும்பியுள்ளது.
கடந்த 13ஆம் திகதி அமெரிக்காவின் பிலடெல்பியா விமான நிலையத்திலிருந்து அமெரிக்கன் எயார்வேஸ் விமானம் லண்டனுக்குப் புறப்பட்டது.
விமானம் கிளம்பிய சிறிது நேரத்திலேயே இதில் பயணித்த றொபேர்ட் கொபக் (வயது-40) என்ற நபர் குடிபோதையில் இருந்ததால், இவர் நடவடிக்கை குறித்து அருகில்அமர்ந்திருந்த இரண்டு பெண்கள் விமான ஊழியர்களிடம் புகார் செய்துள்ளனர்.
இதனைத் தொடர்ந்து அவரை அங்கிருந்து எழுப்பிய ஊழியர்கள், விமானத்தின் பின் பகுதியில் இருந்த இருக்கை ஒன்றில் அமர வைத்த போதும், அங்கிருந்த பெண்ணிடமும் பிரச்சினையில் ஈடுபட்டுள்ளார்.
இதனால் விமான அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட அவரை விமான நிலைய பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்காகப் புறப்பட்ட இடத்துக்கே விமானம் மீண்டும் திரும்பியது.
இந்தச் சம்பவத்தினால் நான்கு மணி நேரம் தாமதமாக விமானம் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தை வந்து அடைந்தது என்று விமான நிறுவனத்தின் தகவல் தொடர்பாளரான மிச்சேல் மொஹர் தெரிவித்துள்ளார்.
இதற்கிடையே கொபாக்கால் கொடுக்கப்பட்ட கலிபோர்னியா முகவரிஉறவினர்களோ, பொது பாதுகாப்பு உதவியாளரோ தொலைபேசி அழைப்புகளுக்கு பதில் அளிக்கவில்லை என பொலிஸ் தரப்பில் கூறப்பட்டுள்ளது. (த)



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வருடாந்த நடன அணிவகுப்பு கொண்டாட்டம் நடைபெற்றது. அதில் ஆயிரக்கணக்கான நடன கலைஞர்கள் கலந்து கொண்டனர். உலகம் முழுவதும் உள்ள 70 வகையான நடனங்கள் இந்தக் கொண்டாட்டங்களின்போது நடைபெற்றன. ஏராளமான பொதுமக்கள் அவற்றைக் கண்டுகளித்தனர். (ற)

## வியட்நாமில் வசிக்கும் சீனர்கள் வெளியேற்றம்

பீஜிங், மே 19
வியட்நாமில் இருந்து 3000க்கும் அதிகமான சீனர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று அங்கிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.
தென்சீனக் கடற்பகுதியில் எண்ணெய் எடுப்பது தொடர்பாகச் சீனத் தொழிலாளர்களுக்கும், வியட்நாமியர்களுக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.
இந்த வன்முறைகளைஅடுத்தே வியட்நாமில் வசிக்கும் சீனர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (ற)

## இரட்டை குண்டுவெடிப்புகள் கென்யாவில் 10 பேர் சாவு

நைரோபி, மே 19
கென்யாவில் நிகழ்ந்த இரட்டைக் குண்டு வெடிப்பில் 10 பேர் உயிரிழந்துள்ளனர். 103 பேர் காயமடைந்துள்ளனர்.
நைரோபியின் மிகப்பெரிய சந்தை தொகுதியிலும், சிறிய வாகனம் ஒன்றிலுமே குண்டு வெடிப்புகள் நடந்துள்ளன என்று தெரியவருகின்றது.
இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அந்த நாட்டுப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ளனர்.
கென்யாவில் நடந்து வரும் தொடர் தீவிரவாதத் தாக்குதல்கள் காரணமாக அந்த நாட்டுக்கு எவரும் செல்ல வேண்டாம் என்று சில உலக நாடுகள் தமது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளன. (ற)



*குண்டுவெடிப்பில் சிக்கியோரை மீட்கும் பணியின் போது...*

## லாவோஸ் விமான விபத்து; பாதுகாப்பு அமைச்சர் சாவு

பாங்கொக், மே 19
லாவோஸில் இடம்பெற்ற விமான் விபத்தில் அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் டாங்சாய் பிட் உட்பட இராணுவத்தின் உயரதிகாரிள் 5 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரியவருகின்றது.
தென் கிழக்கு ஆசிய நாடான லாவோஸ், தாய்லாந்து, வியட்நாம், சீனா ஆகிய நாடுகளின் எல்லையில் அமைந்துள்ளது.
அந்நாட்டின் ஜியாங்வாங் மாகாணத்தில் நடக்கும் அரச விழாவில் பங்கேற்பதற்காக பாதுகாப்பு அமைச்சர் மற்றும் இராணுவ உயரதிகாரிகள் அடங்கிய 20 பேர் கொண்ட குழு நேற்றுமுன்தினம் விமானத்தில் பயணித்தது.
குறித்த விமானம் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே விபத்துக்குள்ளாகி காட்டுப் பகுதியில் விழுந்து நொருங்கியுள்ளது.
இந்த விபத்தில், பாதுகாப்பு அமைச்சர் டாங்சாய் பிட், அவரது மனைவி உட்பட ஐந்துபேர் உயிரிழந்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
விமானத்தில் பயணித்த ஏனையவர்களின் கதி என்னவென்று இதுவரை தெரியவில்லை. (ற)

## துருக்கி நிலக்கரிச் சுரங்க விபத்து; 301 ஆனது சாவு எண்ணிக்கை

சோமா, மே 19
துருக்கியின் சோமா நகரின் மேற்கு பகுதியில் உள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 301ஆக உயர்ந்துள்ளது.
நடைபெற்றுவரும் மீட்புப் பணிகள் குறித்துக் கருத்துத் தெரிவித்த அந்தநாட்டு எரிசக்தி துறைஅமைச்சர் டனீர் யல்டீஸ்,
"மீட்புக்குழுவினர் கடைசியாக 2 தொழிலாளர்களின் உடல்களை மீட்டனர். மொத்தம் 301 தொழிலாளர்கள் விபத்தில் உயிரிழந்துள்ளனர். மீட்பு பணிகள் முடிவடைந்ததும் இந்த விபத்து குறித்து தீவிர விசாரணை நடத்த முடிவு செய்துள்ளோம். இந்த விபத்து எங்களுக்கு பெரும் சோகத்தையும் அதிர்ச்சியையும் கொடுத்துள்ளது' - என்று தெரிவித்துள்ளார்.



485 சுரங்க தொழிலாளர்கள் இந்த விபத்தில் இருந்து உயிர் தப்பியுள்ளனர். எனினும் இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை தொடர்பில் குழப்பம் காணப்படுகின்றது. பல சடலங்கள் சுரங்கத்துக்குள் புதையுண்டு இருக்கலாம் என பல்வேறு தரப்பில்இருந்து கூறப்படுகிறது. அதே வேளை- துருக்கி அரசு சுரங்க விபத்தில் உயிரிழந் தோரை அஞ்சலிப்பதற்காக 3 நாள் துக்க தினம் அறிவித்துள்ளது. (ற)

## எரிபொருள் மானியத்துக்கு பதிலாக வேறு பொருள்கள்

### அதற்காக விண்ணப்பித்தனர் 29 ஆயிரம் மீனவர்கள்

கொழும்பு,மே 19
மீனவர்களுக்கான எரிபொருள் மானியத்துக்குப் பதிலாக வேறு பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு சுமார் 29 ஆயிரம் மீனவர்கள் விண்ணப்பித்துள்ளனர் என்று கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.
மீனவர்களது விண்ணப்பங்கள் தற்போது பரிசீலிக்கப்பட்டுவருகிறது என்று திணைக்களத்தின் பணிப்பாளர் என்.டீ. ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.
எரிபொருள் மானியத்துக்கு பதிலாக மீன்பிடி வலைகள், படகுகள், உயிர்பாதுகாப்பு அங்கிகள் என்பனவற்றை மீனவர்கள் எதிர்பார்த்துள்ளனர் என்று அவர் கூறினார்.
அதற்கமைய, மீனவர்களுக்கான மானியப் பொருள்கள் அடுத்த மாதம் முதல் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம்


கொழும்பு,மே 19
கடும் வறட்சியால் பாதிக்கப்படும் பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு வறட்சி நிவாரணங்களை வழங்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.
கடும் வறட்சியால் பல பிரதேசங்களில் குடி தண்ணீர் மற்றும் நீர்பாசன வசதியற்ற மக்கள் பல மாதங்களாகக் கடும் நெருக்கடி நிலையை எதிர்நோக்கியுள்ளனர்.
இந்த நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளை அடுத்த வாரம் அளவில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி குறிப்பிட்டார். (ச)

## தாவரவியல் பூங்கா அமைக்க தீர்மானம்

கிளிநொச்சி,மே 19
கிளிநொச்சி மாவட்டத்தில் தாவரவியல் பூங்காவொன்றை அமைப்பதற்கு தாவரவியல் பூங்கா மற்றும் பொது பொழுதுபோக்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.
வடமாகாணத்துக்கே உரித்தான உயர் பல்வகைமை மற்றும் அருகிவரும் தாவரங்கள் மற்றும் பூக்களை பாதுகாப்பதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.
தாவரவியல் பூங்காவை அண்மித்த பகுதிகளில் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்க முடியும் என்று தாவரவியல் பூங்கா மற்றும் பொது பொழுதுபோக்கு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.
உத்தேச பூங்கா அமைக்கப்படவுள்ள பகுதியை கண்காணிப்பதற்காக அமைச்சர் ஜயரத்ன ஹேரத் விரைவில் கிளிநொச்சிக்கு வருகைதரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சாதாரணத் தரப் பரீட்சைக்கான விண்ணப்பம் நாளை முதல் ஏற்பு

கொழும்பு,மே 19
2014 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரணத் தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் நாளை செவ்வாய்க் கிழமை முதல் ஏற்றுக் கொள்ளப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதியுடன் நிறைவடையும் என்று பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.
இது குறித்த வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் 20 ஆம் திகதி வெளியிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (ச)



சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது தொடர்பான மூன்று உடன்பாடுகள் பாதுகாப்பு அமைச்சில், கையெழுத்திடப்பட்டுள்ளன. இந்த உடன்பாடுகள் சீன மத்திய இராணுவ ஆணைக்குழுவின் உதவித் தலைவர் ஜெனரல் சூ கியூயிலியாங்கிற்கும் பாதுகாப்பு அமைச்சர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டன.

# மீனவர் பிரச்சினை பேச்சுகள் தொடரும்

### அரசு அறிவிப்பு

கொழும்பு,மே 19
மீனவர் பிரச்சினை குறித்து இந்தியாவுடனான பேச்சுக்கள் தொடரும் என்று அரசு அறிவித்துள்ளது. ஏற்கனவே இணங்கப்பட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுகள் முன்னெடுக்கப்படும் என்று மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

> இந்தியத் தேர்தலில் எந்தக் கட்சி வெற்றியீட்டினாலும் பேச்சுக்கள் தொடரப்படும்.

இந்தியத் தேர்தலில் எந்தக் கட்சி வெற்றியீட்டினாலும் பேச்சுக்களை தொடர்வதென கொள்கை அடிப்படையில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
அண்மையில் இரு மீனவர் சமூகங்களுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சின் போது இணக்கப்பாடு எட்டப்படாவிட்டாலும், தொடர்ச்சியாகப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படும் என்று அவர் கூறினார்.
இதேவேளை, ஆழ் கடல் மீன்பிடியில் ஈடுபட இந்திய மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
அதற்கு இலங்கை அரசு இணங்கவில்லை என்று மீன்பிடித்துறை அமைச்சின் செயலர் டி.எம்.ஆர். திஸாநாயக்க தெரிவித்தார். (ச)

## பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் சந்தேகநபர் சாவு

கொழும்பு,மே 19
குருநாகல்பிரதேசத்தில்பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொலைசெய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் சனிக்கிழமை குறித்த சந்தேகநபருக்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போதே அவர் உயிரிழந்துள்ளார்.
இந்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை உடுதும்பர - கலுகல பகுதியில் இடம்பெற்றுள்ளது. பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சந்தேகநபர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார். (ச)

## கடல் வழியாக சிறுவர்களை ஆஸிக்கு அனுப்பியவர் கைது

கொழும்பு,மே 19
கடல் வழியாகச் சிறுவர்களை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தாகக் கூறப்படும் சந்தேகநபர் ஒருவரை முந்தல் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
இந்த சந்தேக நபரை நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் முந்தல் பொலிஸார் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்தனர்.
உடப்பு பிரதேசத்தை சேர்ந்த இந்த நபர், கடல் வழியாக சிறுவர்களை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைக்கப்படுவதாகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு முறைப்பாடு கிடைத்திருந்தது.
இது குறித்து விசாரணை நடத்திய அதிகாரசபை கொழும்பு - கோட்டை நீதிமன்றத்தில் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்துள்ளது.
அதனையடுத்து சந்தேக நபரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.
தலைமறைவாகி இருந்த இந்த சந்தேகநபரை கைது செய்த முந்தல் பொலிஸார் அவரைத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையிடம் ஒப்படைத்துள்ளனர். (ச)

# ஊவா மாகாண தேர்தலுடன் அரசின் 'விளையாட்டு' முடிவு

### கயந்த கருணாதிலக்க எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,மே 19
ஊவா மாகாண சபைத் தேர்தலின் பின்னர், அரசு ஆங்காங்கே தேர்தலை நடத்தும் விளையாட்டின் முடிவு ஆரம்பமாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.
கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

> அரசின் அபிவிருத்தித் திட்டங்களால் சிலர் சுகபோகம் அனுபவித்த வருகின்றனர்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அரசின் அபிவிருத்தித் திட்டங்களால் நாட்டில் பிறக்கும் சகல குழந்தைகளும் கடனாளி என்ற பலனே கிடைத்துள்ளது.



கயந்த கருணாதிலக்க

அரசின் அபிவிருத்தித் திட்டங்களால் ஒரு சிலர் தரகுப் பணத்தைப் பெற்று சுகபோகங்களை அனுபவித்து வருகின்றனர்.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கு அரசுக்குள்ளேயே கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன- என்றார். (ச)

## வலயக் கல்விப் பணிப்பாளரை நியமிக்குமாறு கோரிக்கை

### அலுவலக இடையூறுகள் குறித்து உத்தியோகத்தர்கள் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு,மே 19

முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்துக்கு நிரந்தர வலயக் கல்விப் பணிப்பாளர் ஒருவரை நியமிக்குமாறு அங்கு'கடமைபுரியும் உத்தியோகத்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்த எம்.ராஜ்குமார் நிதிமோசடி மற்றும் அதிகார துஷ்பிரயோகம் என்பனவற்றில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் மேலதிக விசாரணைகளுக்காக அவர் வடமாகாண கல்வி திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்துக்கு நிரந்தர வலயக் கல்விப் பணிப்பாளர் ஒருவரை நியமிக்கும் வரை துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளரான மாலினி வெலிங்டன் பதில் வலயக் கல்விப் பணிப்பாளராக வடமாகாண கல்வி அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு முல்லைத்தீவு வலயக்கல்வி அலுவலகத்துக்கு பதில் வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் வாரத்தில் இரு தடவைகள் மாத்திரமே பதில் கடமையாற்றுவதற்கு வருகை தருகின்றார். அதனால் அலுவலக நடவடிக்கைகளைமுறையாக மேற்கொள்ள முடிவதில்லை என்று அதிகாரிகள் விசனம் தெரிவித்தனர்.

அனுமதி வழங்கப்படுகின்ற முக்கிய ஆவணங்களில் கையொப்பம் இடும் அதிகாரம் வலயக் கல்விப் பணிப்பாளருக்கே உள்ள போதும் தேவைப்படுகின்ற சந்தர்ப்பத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் இல்லாமையினால் தமது அலுவலக நடவடிக்கைகளில் இடையூறுகள் ஏற்படுகின்றன என்று அவர்கள் குறிப்பிட்டனர். (ச)

## மாணவருக்கான கணித, நாடகப் போட்டிகள்

வவுனியா, மே 19

வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கணித நாடகப் போட்டி வவுனியா சைவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் கணித உதவிக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கனிஷ்ட பிரிவில் வவுனியா விபுலானந்தாக் கல்லூரி முதலாம் இடத்தையும், உயர்தர பிரிவில் வவுனியா, பூவரசங்குளம் மகாவித்தியாலயம் முதலாம் இடத்தையும் பெற்று மாகாண மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளன.

கணித எண்கருக்களுக்கான மாணவர் மட்டத்தில் புகுத்துவதற்கு நாடக்கலையை இணைத்து பயன்படுத்தல் என்ற உத்தியாக இந்த நாடகப் போட்டி நடத்தப்பட்டு வருகின்றது என்று வவுனியா தெற்கு கல்வி வலயம் தெரிவித்துள்ளது. (ச-402)

# பாடசாலைகளில் ஆய்வு கூடங்கள்

### 64.4 மில்லியன் ரூபா செலவில்

கிளிநொச்சி, மே 19

கிளிநொச்சி கல்வி வலயத்தின் ஏழு பாடசாலைகளில் 64.4 மில்லியன் ரூபா செலவில் மஹிந்தோதய ஆய்வு கூடங்களின் இரண்டாவது தொகுதி அமைக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் உள்ள 104 பாடசாலைகளிலும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

> 104 பாடசாலைகளிலும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில் கரைச்சி கல்விக் கோட்டத்தில் உள்ள அக்கராயன் மகா வித்தியாலயம், கோணாவில் அ.த.க., கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆகிய நான்கு பாடசாலைகளிலும் கண்டாவளை கல்விக் கோட்டத்தில் கிளி. முருகானந்தாக் கல்லூரி, பூநகரி கல்விக் கோட்டத்தில் முழங்காவில் மகா வித்தியாலயம், பளைக் கல்விக் கோட்டத்தில் பளை மத்திய கல்லூரி ஆகிய ஏழு பாடசாலைகளிலும் தலா 9.2 மில்லியன் ரூபா செலவில் இரண்டாவது தொகுதியாக மஹிந்தோதய ஆய்வு கூடத் தொகுதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. (ச-55)

## நூல்களைத் தேடிக் கற்கும் ஆர்வத்தை அதிகரியுங்கள்

### மாணவர்களுக்கு அறிவுரை

கிளிநொச்சி, மே 19

மாணவர்களிடையே நூல்களைத் தேடிக் கற்கும் ஆர்வம் அதிகரிக்கப்படவேண்டும் என்று மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்திக்கு அருகில் மு.முருகவேல் நினைவாக நூலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

> கிளிநொச்சி கரடிப்போக்கு சந்திக்கு அருகில் மு.முருகவேல் நினைவாக நூலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்களிடையே வாசிப்பு ஆர்வம் குறைந்து வருகிறது. மாணவர்கள் நூலகங்களைத் தேடிக் கற்கின்ற மரபு அதிகரிக்க வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கணித, விஞ்ஞானத்துறைகளை கூடுதலான மாணவர்கள் தெரிவு செய்து கற்க வேண்டும்- என்றார். (ச-18)

## கலைசார் போட்டிகள்

வவுனியா, மே 19

சேக்கிழார் மன்றத்தால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற பாடசாலைகள், அறநெறிப் பாடசாலைக்கான கலைசார் போட்டிகள் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் சேக்கிழார் மன்றத்தின் செயலரும், இலங்கை இந்துப் பேரவையின் வவுனியாக் கிளை இணைப்பதிகாரியுமான ந.சுதாகரன், சேக்கிழார் மன்ற சபை உறுப்பினர்கள், பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்கள், அதிபர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதி போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பும் சேக்கிழார் விழாவும் நடைபெறும் என்று சேக்கிழார் மன்றத்தின் செயலர் ந.சுதாகரன் தெரிவித்தார். (ச-402)

## ஆற்றுப்படுக்கை பாதிப்பால் விவசாயிகள் பெரும் சிரமம்

வவுனியா, மே 19

ஓமந்தை விளக்குவைத்த குளத்தின் ஆற்றுப்படுக்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

ஓமந்தை விளக்குவைத்த குளத்துக்கு அருகில் இராணுவ முகாம் வேலிகள், பாதுகாப்பு அரண்கள், ஆற்றுப் படுக்கைக்கு குறுக்காக உள்ளன. அதனால் நீண்ட காலமாக பராமரிப்பு இன்மையால் பற்றைக்காடுகள் மற்றும் மணல் மூடியுள்ளதாலும் விவசாயத்துக்குத் தேவையான நீரைப் பெற முடியாதவாறு நீர்வழிந்தோடும் பிரதேசங்கள் தடைப்பட்டுள்ளன என்று அவர்கள் கூறினர்.

இந்த விடயம் குறித்து வடமாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராசா, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் க.சுரேந்திரன் ஆகியோர் குறிப்பிட்ட இடத்தைப் பார்வையிட்டுள்ளனர். எனினும், இந்த விடயம் குறித்து இது வரை யாரும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று விவசாயிகள் தெரிவித்தனர். (ச-402)



முள்ளியவளை சந்தி அம்மன் கோயிலடியிலிருந்து காட்டவிநாயகர் ஆலயம்வரை செல்லும் வீதி இன்றுவரை புனரமைப்புச் செய்யப்படவில்லை. இந்த வீதியால் மக்கள் பெரும் சிரமத்துக்கு மத்தியில் பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர். (ச-102)

## 295 மலசலகூடங்கள் அமைப்பு

### பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ்

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்ற அமைச்சினூடாக 295 மலசலகூடங்கள், 10 கிணறுகள் அமைத்து கொடுக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டின் வேலைத் திட்டங்களில் பொருளாதார அமைச்சால் 16.55 மில்லியன் ரூபா செலவில் மலசல கூடங்கள் மற்றும் கிணறுகள் அமைப்பதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீட்டின் கீழ் 14.75 மில்லியன் ரூபா செலவில் 295 மலசலகூடங்கள் அமைக்கப்படவுள்ளன. அதற்கான பயனாளிகள் தெரிவுகள் இடம்பெற்று வருகின்றன.

10 கிணறுகள் அமைக்கப்படவுள்ளன. இதற்கான பயனாளிகள் தெரிவும் இடம்பெற்று வருகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-55)

## மின்சார இணைப்பு வழங்குவதில் பாரபட்சம்

### சாந்தபுரம் மக்கள் குமுறல்

கிளிநொச்சி, மே 19

கிளிநொச்சி, சாந்தபுரம் கிராமத்தில் உள்ள சில குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள சாந்தபுரம் கிராமத்தில் தற்போது 716 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்த நிலையில் குறிப்பிட்ட சில குடும்பங்களுக்கு மாத்திரம் மின்சார இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே சாந்தபுரம் கிராமத்தில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

இதேவேளை - இந்தப் பகுதி மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-55)

## சட்டவிரோத கசிப்பு உற்பத்தி

கிளிநொச்சி, மே 19

கிளிநொச்சி, கல்லாறு கிராமத்தில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி இடம்பெற்று வருகிறது. இதனைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி, கல்லாறு கிராமத்தில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி இடம்பெற்று வருகின்றது. அதனால் இங்கு பல்வேறு குற்றச் செயல்களும் இடம்பெற்று வருகின்றன என்று மக்கள் கூறினர். இந்தக் கிராமத்தில் இடம்பெற்று வரும் கசிப்பு உற்பத்தியைத் தடுத்து நிறுத்த அதிகாரிகள் எவரும் நடவடிக்கை எடுக்க வில்லை என்று மக்கள் கூறினர். (ச-55)

## வட்டக்கச்சி வீதிப் புனரமைப்புப் பணிகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுங்கள்

### பிரதேச மக்கள் வேண்டுகோள்

கிளிநொச்சி, மே 19

கிளிநொச்சி, வட்டக்கச்சி வைத்தியசாலை வீதியின் புனரமைப்புப் பணிகளை நிறைவு செய்ய உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி வட்டக்கச்சி வைத்தியசாலை வீதி 2013 ஆம் ஆண்டு "நெல்சிப்" திட்டத்தின் கீழ் புனரமைப்புக்கு தெரிவு செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

எனினும் அதன் பணிகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று மக்கள் தெரிவித்தனர்.

இந்த வீதி புனரமைப்பு பணிகள் கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று மக்கள் தெரிவித்தனர்.

எனவே இந்த வீதியை விரைவில் புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-55)

# காணி சுவீகரிப்பு செயற்பாடு தொடர்ந்து நடைபெறுகிறதா?


## திருமலை நகர சபை உறுப்பினர் கேள்வி

திருகோணமலை.மே 19

திருகோணமலை மாவட்டத்தில் 3.069 ஏக்கர் காணி அரசால் சுவீகரிப்பதற்கான தொடர் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றனவா என்று திருகோணமலை நகர சபை உறுப்பினர் சி. நந்தகுமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலர் பிரிவில் உள்ள திரியாய் கிராமத்தில் தமிழ் மக்களுக்கு சொந்தமான வயல் பிரதேசங்கள், காடுகள், மலைகள், குளங்கள் உட்பட 3.069 ஏக்கர் காணி இங்குள்ள பௌத்த ஆலயத்துக்கு வழங்கும் நோக்கோடு அரசினால் நில அளவை செய்யப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

கட்டுக்குளம் கட்டு, திரியாய் குளக்கட்டு, நொச்சிக்குளம் கட்டு. சாவிஅற்று கட்டு, கறுப்பிட்டி கண்டல், புளியடி கண்டல், வேடன் குளக்கட்டு போன்ற பிரதேசங்கள் காணி சுவீகரிப்பில் உள்ளடக்கப்படுகின்றன. இது திருகோணமலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட உள்ள நிலப்பறிப்பு நடவடிக்கை என்று அவர் மேலும் தெரிவித்தார்.(ச)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தவர்களுக்கான அஞ்சலி செலுத்தும் நிகழ்வு மட்டக்களப்பு, நல்லையா வீதியில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்றபோது நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன். செல்வராசா, பா. அரியநேத்திரன், சீ. யோகேஸ்வரன், கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான கி. துரைராஜசிங்கம், இரா. துரைரெட்ணம் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

# திருட்டுகளில் ஈடுபட்ட இருவர் கைது

மட்டக்களப்பு.மே 19

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக தபால் நிலையங்கள், சமுர்த்தி வங்கிகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்களை களுவாஞ்சிக்குடி பொலிஸார் நேற்று ஞாயிற்றுக் கிழமை அதிகாலை கைது செய்துள்ளனர்.

இந்த இரண்டு சந்தேகநபர்களும் கல்முனை பிதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து 20 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# வாகனம் மோதி சிறுமி படுகாயம்



விபத்து நடந்த சில நிமிடங்களில்

ஏறாவூர்.மே 19

கல்லடிப்பாலத்துக்கு அருகில் உள்ள சென். செபஸ்தியார் தேவாலயத்துக்கு முன்பு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற வீதி விபத்தில் சிறுமியொருவர் காயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு. சின்ன உப்போடையைச் சேர்ந்த குறித்த சிறுமி சைக்கிளில் பாதையைக் கடக்க முற்பட்டபோது பாலத்தினூடாக நகரை நோக்கிச் சென்ற லொறி மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

லொறியின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

# உறவுகளை நினைவு கூருவதை தடுப்பது மனித உரிமை மீறலே

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் தெரிவிப்பு

மட்டக்களப்பு.மே 19

உறவுகளை நினைவு கூருவதைத் தடுப்பது மனித உரிமை மீறலாகும் என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவுகள் குறித்து எழுந்துள்ள சிக்கல் நிலை, அதன் விளைவுகள் குறித்து கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

> “வழமையை விட இந்த வருடமே மாதம் மிக மோசமாக அரசதரப்பு அடக்குமுறைக் கருத்துக்களைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது.

தமிழனாகப் பிறப்பது, தமிழனாக வாழ்வது, தமிழனாக மரணிப்பது, மரணித்த தமிழனை நினைவு கூருவது யாவற்றையும் துரோகமாகப் பார்க்கும் நிலையே எமது நாட்டில் நிலவுகிறது.

தமிழ் மக்களின் உணர்வுகளுக்கும் அரச அடக்கு முறைகளுக்கும் இடையே ஏற்படும் முரண்பாடுகளாகவே கடந்த பல வருடங்களாக மே மாதம் விளங்கி வருகிறது.

மே மாதம் ஆரம்பமானதுமே அரச தரப்பு தமது அகோர முகங்களையும் தமது அடக்கு முறை நடவடிக்கைகளையும் கட்டவிழ்க்கத் தொடங்கிவிடுவர்.

வழமையை விட இந்த வருட மே மாதம் மிக மோசமாக அரசதரப்பு அடக்குமுறைக் கருத்துக்களைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. உயிரிழந்த உறவுகளை உணர்வு பூர்வமாக நினைவு கூருவது என்பது ஒவ்வொரு மனிதனதும் சமயம், நம்பிக்கை சார்ந்த விடயமாகும். இதனை மறுப்பது என்பது அரசமைப்பு எமக்கு வழங்கிய அடிப்படை உரிமையின் மீறல் என்பது மாத்திர மல்ல, சர்வதேச மனிதாபி[illegible]னச் சட்டத்தின் அப்பட்டமான மீறலாகும் -என்றார். (ச)



கோவிந்தன் கருணாகரம்


# INVITATION FOR BIDS TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs. in million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Renovation of Neurology Surgical Ward | 500.00 | 60,000.00 | 90 | 2.9 | C8 |
| Renovation of Toilets in Ward No 07 & 08 | 500.00 | 36,000.00 | 90 | 1.7 | C9 |

1. Bidding will be conducted through National competitive Bidding Procedure
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the Institute for Construction Training and Development (ICTAD).
3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna. during office hours, if necessary.
4. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 20.04.2014,until at 4.00pm on 29.05.2014 The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
5. Sealed bids shall be delivered to the address below at before 15.00 hrs on 30.05.2014 late bides will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital Jaffna, soon after closing, in the presence of bidders' representatives who choose to attend.

**Director (Chairman).**
**Regional Procurement Committee,Teaching Hospital, Jaffna.**
[illegible] 2014.



# இந்தியாவில் உயர்கல்வி
# STUDY IN INDIA

University Grant Commission, Sri Lanka (UGC) இனால் அங்கிகரிக்கப்பட்ட ANNA UNIVERSITY மற்றும் PERIYAR UNIVERSITY ஆகிய பல்கலைக்கழகங்களில் பட்டதாரியாக வாய்ப்பு.

A/L'S 3 சாதாரண சித்தி + A/L English போதுமானது

**SSM COLLEGE OF ENGINEERING - ANNA UNIVERSITY DEGREE**

- B.E. Computer Science & Engineering
- B.E. Electronics & Communication Engineering
- B.E. Electrical & Electronics Engineering
- B.E. Mechanical Engineering
- B.Tech. Information Technology
- B.Tech. Textile Technology
- B.Tech. Textile Chemistry

**SSM COLLEGE OF ARTS & SCIENCE - PERIYAR UNIVERSITY DEGREE**

- B.Sc. Computer Science
- B.Sc. Bio-Technology
- B.Sc. Textile & Fashion Designing
- B.Sc. Hotel Management & Catering Science
- B.Sc. Maths / B.C.A. / B.Com. / B.Com (CA), B.B.A. / B.A. English

- 100க்கு மேற்பட்ட இலங்கை மாணவர்கள் கல்விகற்ற நிறுவனம்.
- **International Hostel.**
- மேற்கூறிய Degree முடிப்பவர்களுக்கு எதிர்காலத்தில் Canada, Australia, New Zealand, European Union ஆகிய நாடுகளில் PR (Permanent Residency) பெறுவதற்கான வாய்ப்பு.

**Call : 0777 - 767 818 (தமிழில்)**
www.ssmce.ac.in (48170)

**SIC** No. 01, Veverset Place, Wellawatte, Colombo 06.

# திடீரெனப் பற்றிய தீயால் காரைநகரில் பனை மரங்கள் நாசம்

வலி. வடக்கு, மே 19

காரைநகர் பகுதியில் உள்ள பனந்தோட்டத்தில் திடீரென ஏற்பட்ட தீயால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றமான நிலைமை காணப்பட்டது.

நேற்று முன்தினம் காரைநகர் வலந்தலையில் உள்ள நொண்டி புலத்தில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டது.

சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட பனை மரங்கள் எரிந்து நாசமாகியுள்ளது. வீட்டுக்காரரின் வைக்கோல் பட்டறையில் பரவிய தீ சுவாலைவிட்டு எரிந்ததில் அருகில் உள்ள பனைமரங்களிலும் தீ பரவியதில் பனைமரங்களும் எரிந்து நாசமாகியுள்ளன.



பற்றிய தீயை கட்டுப்படுத்தும் பணியில் இளைஞர்கள்

இந்த தீ விபத்துக்கான காரணம் தெரியவராத போதிலும் வழிப்போக்கர்கள் கவனவீனமாக எறிந்த புகைத்தல் பொருள் பற்றைக்குள் வீழ்ந்து வெப்பம் காரணமாக பற்றை தீப்பற்றி வைக்கோல் பட்டறை எரிய அதில் இருந்து பனை மரங்களுக்கு தீ பரவியிருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தீ கடுமையாக பனந்தோப்பில் பரவிய நிலையில் உடனடியாக குறிப்பிட்ட இடத்துக்கு விரைந்து சென்ற காரைநகர் பிரதேச சபையின் நீர்த் தாங்கியில் இருந்து நீர் மோட்டரின் உதவியுடன் தீ மேலும் பரவா வண்ணம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பொது மக்களுடன் இணைந்து அந்தப் பகுதிகளில் நிலை கொண்டுள்ள கடற்படையினரும் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் தீ பரவா வண்ணம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டமையால் பெரிய தீ விபத்து தடுக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது நிலவும் கடும் வறட்சியால் விரைவாக ஏனைய மரங்களுக்கும் தீ பரவி ஆபத்தை ஏற்படுத்தியிருக்க முடியும் என்றும் அந்தப் பகுதியில் உள்ள பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (வ-86-250)


# சிவபூமி முதியோர் இல்ல ஆண்டு விழாவில் நவீன வசதிகளுடன் விடுதி மண்டபம் திறப்பு

## வைத்திய நிபுணர் செல்வி யமுனா மார்க்கண்டு நினைவாக

யாழ்ப்பாணம், மே 19

சுழிபுரம் - தொல்புரத்தில் சிவபூமி முதியோர் இல்ல 7 ஆவது ஆண்டு விழாவும் ரூபா 86 லட்சம் செலவில் வைத்திய நிபுணர் செல்வி யமுனா மார்க்கண்டு நினைவாக நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள முதியோர் இல்லத்துக்கான புதிய கட்டடத் திறப்பு விழாவும் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றன.

உயர் கல்விக்காக லண்டன் சென்றிருந்த நிலையில் சாவடைந்த வைத்திய நிபுணர் செல்வி யமுனா மார்க்கண்டு ஞாபகார்த்தமாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழா நிகழ்வு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுகன் தலைமையில் நடைபெற்றது.



நினைவு மண்டபத்தை அமரர் செல்வி யமுனாவின் பெற்றோர் திறந்து வைத்தனர்.

வைத்திய நிபுணர் அமரர் செல்வி யமுனா மார்க்கண்டு நினைவு மண்டபத்தை அவரது பெற்றோர்களான முன்னாள் பொறியியலாளர் தி.மார்க்கண்டு அவரது மனைவி திருமதி சிவபாக்கியம் மார்க்கண்டு ஆகியோர் திறந்து வைத்தனர். தொடர்ந்து மகள் யமுனாவின் உருவப்படத்தையும் நினைவுப் பலகையையும் அவர்கள் திரைநீக்கம் செய்து வைத்தனர்.

முன்னதாக முதியோர் இல்லத்தில் உள்ள வைரவர் ஆலயத்தின் விசேட வழிபாடுகள் இடம்பெற்று, மங்கல விளக்கேற்றலை அடுத்து மண்டபம் திறந்து வைக்கப்பட்டது. அதன் பின்னர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மறைந்த வைத்திய நிபுணரின் சேவைகள் குறித்த சிறப்புரைகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், கிழக்கு மாகாண சபை முன்னாள் செயலாளர் பொ.பாலசிங்கம், மல்லாகம் மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிபதி திருமதி ஜோய் மகாதேவா, வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன், வடமாகாண கல்வித் திணைக்கள முன்னாள் கல்விப் பணிப்பாளர் எஸ். விக்கினேஸ்வரன், தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கையம்மன் ஆலய பிரதம குரு எஸ்.அகிலேஸ்வரக்குருக்கள் உட்பட மற்றும் பலர் ஆசியுரைகளை வழங்கினார்கள். (ஓ-7-86)

# நடைபாதை வியாபாரிகள் பெண்களிடம் ‘சில்மிஷம்’

*கொழும்புத்துறை, மே 19*

*யாழ்.நகரில் நடைபாதை வியாபாரங்களில் ஈடுபடுவோர் பொது மக்களுடன், குறிப்பாக பெண்களுடன் அநாகரிகமான செயற்பாடுகளை வெளிப்படுத்தி நுகர்வோரை தமது கடைகளுக்கு அழைப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.*

*நடைபாதைகளில் உள்ள புடைவைகள், அழகு சாதனப் பொருள் விற்பனைக் கடைகளுக்கு வரும் பெண்களை வியாபாரத்துக்கு அழைப்பதைச் சாட்டாகக் கொண்டு கைகளைப் பிடித்து இழுப்பதும், கைகளை விரித்து உடலுடன் உரசும் அளவுக்கு நெருங்கித் தத்தமது கடைக்கு கூப்பிடுவதும் தொடர்ந்து கொண்டிருப்பதாக நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.*

*வியாபாரத்துக்கு விளம்பரமும் பாவனையாளர்களை ஈர்ப்பதும் முக்கியமானதுதான். ஆனால் எல்லைமீறி 'சில்மிஷம்' அங்க சேஷ்டைகள் புரிந்து அழைப்பதை அனுமதிக்க முடியாது என்று பெண்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகிறது.*

*இதேபோன்று தனியார் மினி பஸ்களிலும் இளம் பெண் பயணிகளை வாசலில் ஏறும்போது பிடித்து அணைத்து பஸ்ஸினுள் அனுப்பும் செயற்பாட்டை பஸ் நடத்துநர்கள் மேற்கொள்வதாகவும் பலர் விசனம் தெரிவிக்கின்றனர். குறித்த முறையற்ற அநாகரிக வியாபாரக் கலாசாரம் யாழ்.நகரில் கையாளப்படுவது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (வ-135)*



திறக்கப்படவுள்ள புதிய பிரதேச செயலகத்தின் தோற்றம்

# விரைவில் திறக்கப்படும் நிலையில் புதிய யாழ்.பிரதேச செயலகம்

## இறுதிக் கட்டப் பணிகளுக்காக காத்திருப்பு

யாழ்.பழைய பூங்கா வளாகத்தில் அமைக்கப்பட்டு வரும் யாழ்.பிரதேச செயலகத்துக்கான புதிய கட்டடம் பெரும்பாலும் ஜூலை மாதமளவில் பூர்த்தி செய்யப்பட்டுத் திறந்து வைக்கப்படவுள்ளதாக யாழ்.பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முடிவுறுத்தப்படாத இறுதிக் கட்டடப் பணிகளுக்கான அரச நிதி கிடைக்கப் பெற்றதும் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு திறப்பு விழா நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது பிரதான வீதி சுண்டுக்குளிப் பகுதியில் பழைமை வாய்ந்த கட்டடத் தொகுதியில் யாழ்.பிரதேச செயலகப் பணிமனை இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-135)

# குழப்பம் விளைவித்த நபருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, மே 19

கையில் வாளுடன் மது போதையில் குழப்பம் விளைவித்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

மிருசுவில் பகுதியில் வாளுடன் திரியும் ஒருவர் பொது மக்களை அச்சுறுத்தும் வகையில் செயற்படுவதாக கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்ததுடன் வாளையும் கைப்பற்றினர்.

அந்த நபருக்கு எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு விடப்பட்டது. (வ-9)

# வீதி விபத்தில் இளைஞன் படுகாயம்

தென்மராட்சி, மே 19

வீதி விபத்தில் சிக்கி இளைஞன் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை மிருசுவில் பகுதியில் இடம்பெற்றது.

மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த பார்த்தீபன் (வயது -18) என்பவர் பலத்த காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (வ-9)

# மாவட்ட மட்ட ஓவிய போட்டிகள் இவ்வாரம்

கொழும்புத்துறை, மே 19

தேசிய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் மாவட்ட மட்ட ஓவியப் போட்டிகள் இவ்வாரம் நடைபெறவுள்ளன. மாவட்ட மட்டத்தில் வெற்றியீடும் போட்டியாளர்கள் தேசிய மட்டப் போட்டியில் தெரிவு செய்யப்பட்டு ஜனாதிபதி விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளதாகக் கலாசார அலுவல்கள் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்துக்கான போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 9 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும். கிளி-முல்லை மாவட்டத்துக்கான ஓவியப்போட்டி கிளிநொச்சி சென்.திரேசா மறைப்பணி நடுவகத்தில் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

இதேபோன்று மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களிலும் போட்டிகள் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆர்வமுள்ளவர்கள் தத்தமது பிரதேச செயலகங்களூடாக தொடர்புகளை ஏற்படுத்தி பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. (வ-135)

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com


## அரசுக்கு ஏன் இந்த இருவித நிலைப்பாடு?

முள்ளிவாய்க்கால் போர்க் களத்தில் கொல்லப்பட்ட இரத்த உறவுகளுக்கு அமைதியாக, மனப்பூர்வமாக உணர்வுகளை சிந்தி நினைவஞ்சலி செலுத்தவும் கூட மறுக்கப்பட்டு விட்ட நிலையில் ஆங்காங்கே மறைவாகவும் தம் உறைவிடங்களிலும் மக்கள் கண்ணீர் சிந்தியும் , கதறி அழுதும் தம் கடன்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். படையினரும் புலனாய்வாளர் களும் ஆயுதங்களுடன் பல இடங்களிலும் சுற்றித் திரிந்ததையும் குறிப்பிட்ட சில இடங்களில் தரித்து நின்று அவதானிப்பில் ஈடுபட்டிருந்ததையும் கூட பார்க்க முடிந்தது.

கடந்த 16 ஆம் திகதி கைதடி மாகாண சபை கட்டடத்துக்கு முன்னால் இடம்பெற்ற நிகழ்வின் போது பொலிஸ் அதிகாரிகள் உட்புகுந்து காட்டு மிராண்டித்தனமாக நடந்து கொண்டமையும் இறந்தவர்களின் நினைவாக ஏற்றப்பட்டிருந்த சுடர்களை கீழே விழுத்தி பூட்ஸ் கால்களால் மிதித்து அணைத்ததையும் பத்திரிகைகளில் படித்தோம். இறந்தவர்களின் ஆன்மாக்கள் அமைதியுறுவதற்காக ஏற்றப்பட்ட தீபங்களை காலால் உழக்கி அசிங்கம் செய்தமை இந்த நாட்டுக்கு உரிய நாகரிகமல்ல. போரில் இறந்த எல்லாள மன்னனுக்கு மதிப்பளிக்கும் விதத்தில் அவர் சமாதி அமைந்துள்ள பகுதியில் கௌரவமாக நடந்து கொள்ள வேண்டும் என எல்லாளனின் எதிரியான துட்டகைமுனு அரசன் கட்டளையிட்டிருந்தான் என்பது இந்த நாட்டின் பழைய வரலாறு. அரசர்கள் காலத்தில் பேணப்பட்டுவந்த நாகரிகம் கூட இன்று ஜனநாயக அரசியல் பேசப்படும் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இல்லாமல் போயிருப்பது விஷேடம்தான்.

சிறுபான்மையோர் என்று இந்த நாட்டில் எவருமே இல்லை என்று அடிக்கடி மிகச் சாதாரணமாகக் கூறிவரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இறந்த உறவினர்களுக்கு நினைவஞ்சலி செலுத்த வேண்டாம் என்று இந்த நாட்டின் எல்லா மக்களுக்கும் ஒரே விதமான கட்டளையைப் பிறப்பிக்காமல் இருப்பது ஏன்? முள்ளிவாய்க்காலில் போரிட்டு மடிந்தவர்களில் தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகள் மட்டும்தானா இருந்துள்ளார்கள் ?அவர்கள் ஒவ்வொருவரும் பிடித்துப் பார்த்து அடையாளம் கண்டுதான் கொல்லப்பட்டார்களா?

போரில் சம்பந்தமே இல்லாத அப்பாவிகள் தான் அதிகம் என்று அரசு சாரா நிறுவனங்களும், ஐ.நா.அறிக்கைகளும் கூறுகின்றன. ஏன் அரச படையினரும் கொல்லப்பட்டிருக்கலாம். ஆனால் அவர்களின் நினைவாக மிகப் பெரும் எடுப்பில் வெற்றி விழாவை அரசும் அரசின் பங்காளிகளும் மாத்தறையில் மக்கள் வரிப் பணத்தில் கொண்டாடி மகிழ்ந்தார்கள் நேற்று வரப்போகின்ற ஜனாதிபதித் தேர்தல் அல்லது நாடாளுமன்றத் தேர்தலுக்கான அறிவிக்கப்படாத பரப்புரை மேடையாகவே அது அமைந்திருக்க வேண்டும்.

இவ்வாறு வடகிழக்குக்கு ஒரு நீதி- வடக்கு கிழக்கில் கொல்லப்பட்டவர்களை நினைத்தும் பார்க்க வேண்டாம் என்று ஒரு கட்டளை. இது இங்கே கொல்லப்பட்டவர்களும், அவர்களின் உறவினர்களும் சிறுபான்மையினர்- தமிழ் பேசுவோர் அவர்களைத் தீர்த்துக்கட்டி வெற்றி வாகை சூடியவர்கள் பெரும்பான்மையின- சிங்களம் பேசுவோர்.

இவ்வாறு இருநிலை செயற்பாடுகளை -பாகுபாடுகளை செய்து கொண்டு இங்கே பெரும்பான்மை சிறுபான்மை என்பதே கிடையாது என்று எவ்வாறு கூற முடிகிறது?

சிங்கள மக்களின் உணர்வுகளை உற்சாகப்படுத்தவும், அவர்கள் தரப்பில் ஏற்பட்ட இழப்புகளுக்கு ஈடு செய்யவும் வெற்றி விழாக்களும் விருது வழங்குதல்களும் தேவைப் படுவதாய் இருக்கலாம். ஆனால் பல்லாயிரக்கணக்கான உறவுகளைத் துடிக்கத் துடிக்க காவு கொடுத்துவிட்டு ஏங்கி தவித்துக் கொண்டிருக்கிறார்களே இந்த நாட்டின் இன்னொரு சமூகத்தினர் அவர்களின் மன ஆறுதலுக்கு ஏதும் செய்திட வேண்டாமா- அந்த வகையிலும் சற்றும் சிந்திக்க முடியாதவர்களாய் போனார்களா இன்றைய ஆட்சியாளர்கள்?

ஆம் , இதை சர்வதேசம் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறது. நீதி தேவன் காத்துக் கொண்டிருக்கிறான். ஐ.நா.மனித உரிமை விசாரணைக்கான ஆயத்தம் நடைபெறுகின்றது.

இந்தியாவிலும் இதுவரை கைகொடுத்து தாங்கிக் கொண்டிருந்த காங்கிரஸ் மண் கவ்வியுள்ளது. புதிய சிந்தனையுடன் நரேந்திரமோடி சிம்மாசனம் ஏறியுள்ளார். சுற்றுச்சூழல் சற்று வித்தியாசமாகவே இருள் கவிந்து காணப்படுகின்றது. ஆட்சியாளர் விழிப்படைய வேண்டிய காலம் என்பதை சுட்டிக் காட்டுவோம்.

# கிறிஸ்மஸ்தீவில் மோசமான நிலையில் காணப்படும் சிறார்கள்

ஆஸ்திரேலியாவில் வாழும் சிறார்களின் உரிமைகளை அந்நாட்டு அரசு பாதுகாத்து வருகின்ற போதிலும், தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறார்களின் உரிமைகளை இந்நாட்டு அரசு கவனத்திலெடுக்கவில்லை.

இவ்வாறு இணைத்து பிரித்தானியாவை தளமாகக் கொண்ட கார்டியன் ஊடகத்தில் வெளிவந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் உள்ள அதிகளவான தடுப்பு முகாம்களை விரைவில் மூடுவதெனவும் இங்குள்ள புகலிடக் கோரிக்கையாளர்களை நௌரு மற்றும் மனுஸ்தீவுக்கு மாற்றுவதெனவும் அண்மையில் அறிவித்துள்ளதால் கிறிஸ்மஸ் தீவிலுள்ள சிறார்கள் மிகவும் அச்சம் கொண்டுள்ளனர்.

இவ்வாறு தடுப்பு முகாம்களுக்குச் சென்றமருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

நாம் ஆஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவில் மருத்துவ ஆலோசகர்களாக ஒரு வாரத்தைச் செலவிட்டபோது, அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களின் நிலை தொடர்பில் அதிர்ச்சியுற்றோம். இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறார்கள் மற்றும் இளையோர் நம்பிக்கையற்ற வாழ்வை வாழ்கின்றனர். இவர்கள் அங்கு மதிக்கப்படவில்லை.

ஆஸ்திரேலியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறார்களின் உளப்பாதிப்புக்கள் தொடர்பாக ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையகத்துக்கு ஆலோசனைகளை வழங்குவதற்காகவே நாங்கள் கிறிஸ்மஸ்தீவில் மார்ச் மாதத்தில் ஒரு வாரகாலத்தைச் செலவிட்டோம். இங்குள்ள புகலிடக் கோரிக்கையாளர்கள் மற்றும் இக் குடும்பங்களைச் சேர்ந்த சிறார்களில் பெரும்பாலானவர்கள் எந்தவொரு புகலிடக் கோரிக்கை மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்படாது ஆறு தொடக்கம் ஒன்பது மாதங்கள் வரை இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இப்புகலிடக் கோரிக்கையாளர்கள் போர், சித்திரவதைகள், மோதல்கள் போன்றன இடம்பெறும் ஆப்கானிஸ்தான், சோமாலியா, இலங்கை , பர்மா, சிரியா, ஈராக் மற்றும் ஈரானைச் சேர்ந்தவர்களாவர்.


> நாங்கள் மார்ச் மாதம் கிறிஸ்மஸ் தீவுக்குச் சென்றபோது 356 சிறார்கள் மற்றும் தடுப்பிலிருக்கும் போது பிறந்த 25 குழந்தைகள் உட்பட 1,700 பேர் தடுத்து வைக் கப்பட்டிருந்தனர். இந்தச் சிறார்களில் அரைவாசிப் பேர் ஐந்து வயதும் அதற்குக் கீழ்ப்பட்டவர்களுமாவர். மற்றும் பராமரிப்பதற்குக் குடும்பத்தவர்கள் இல்லாத, 18 வயதுக்குக் குறைந்த 41 பிள்ளைகள் இருந்தார்கள்.


நாங்கள் மார்ச் மாதம் கிறிஸ்மஸ் தீவுக்குச் சென்றபோது 356 சிறார்கள் மற்றும் தடுப்பிலிருக்கும் போது பிறந்த 25 குழந்தைகள் உட்பட 1,700 பேர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இந்தச் சிறார்களில் அரைவாசிப் பேர் ஐந்து வயதும் அதற்குக் கீழ்ப்பட்டவர்களுமாவர். மற்றும் பராமரிப்பதற்குக் குடும்பத்தவர்கள் இல்லாத, 18 வயதுக்குக் குறைந்த 41 பிள்ளைகள் இருந்தார்கள்.

நான்கு பேர் கொண்ட எமது மருத்துவ ஆலோசனைக் குழுவினர் 230 குடும்பங்களுடன் நேர்காணல் மேற்கொண்டோம். நாங்கள் அவர்களுடன் கதைக்கும் போது அவர்களது சிறார்களிடம் பேப்பர் மற்றும் பேனாக்களைக் கொடுத்து அவர்களது வாழ்வு எவ்வாறானது என்பதை வரைந்து காண்பிக்குமாறு கேட்டோம். அவர்கள் தங்களின் அவலத்தை வரைந்திருந்தனர்.

ஐ.நாவால் வரையப்பட்ட சிறார்கள் உரிமைகளை ஏற்றுக்கொண்டு 1990இல் ஆஸ்திரேலியா இதில் கையெழுத்திட்டது. இந்தச் சிறார்கள் உரிமையின் கீழ் இவர்களுக்கான உணவு, தங்குமிடம், கல்வி போன்றன வழங்கப்படுவதுடன், மிகவும் மோசமான வடுக்கள் நிறைந்த அனுபவங்கள் அதாவது சித்திரவதைகள், தொந்தரவுகள், பலவந்தமாகத் தடுத்து வைக்கப்படுதல் போன்ற பல்வேறு மீறல்களிலிருந்து சிறார்கள் பாதுகாக்கப்படுவதுடன், தமது வாழ்வு தொடர்பாக தீர்மானிப்பதற்கான வாய்ப்பு சிறார்களுக்கு வழங்கப்படுவதுடன், இவை சிறார்களின் வயதைப் பொறுத்து தீர்மானிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த உரிமைகள் மிகத் தெளிவானவையாகவும், விவாதிக்கப்பட முடியாதவையாகவும் காணப்படுகின்றன. ஆகவே ஆஸ்திரேலியாவில் வாழும் சிறார்களின் உரிமைகளை அந்நாட்டு அரசு பாதுகாத்து வருகின்ற போதிலும், தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறார்களின் உரிமைகளை இந்த நாட்டு அரசு கவனத்திலெடுக்கவில்லை. சிறார்கள் பிறந்ததிலிருந்து 18 வயது வரை அவர்களுக்கான தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு அவர்களுக்கான பாதுகாப்புக்கள் உறுதிசெய்யப்பட வேண்டிய போதிலும், ஆஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவில் இவை நிறைவேற்றப்படவில்லை என்பதை நாம் பார்த்தோம்.

சிறுபராயத்தில் பல்வேறு வன்முறைகளை அனுபவித்தல், வடுக்களைத் தாங்குதல் மற்றும் பெற்றோரை இழந்து தனிமையில் வாழ்தல் போன்றன சாதாரண அபிவிருத்தியை குழப்புவதுடன் சிறார்களின் வெளிப்படுத்தல்களிலும் தாக்கத்தைச் செலுத்துகின்றன. தொடர்ந்தும் நீண்டகாலமாக மோசமான விளைவுகளுக்கு முகங்கொடுப்பதால் சிறார்கள் மனவடுக்களுக்கு உள்ளாகுகின்றனர். மிகவும் தகுதிவாய்ந்த, தரமான சிறார் பராமரிப்பு, இளையோர்களின் உதவியுடன் சிறார்களுக்கான பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்றன சிறார்களுக்குச் சாதகமான கற்றல் சூழலை வழங்குகிறது. இதனால் பல்வேறு பாதிப்புக்களிலிருந்து சிறார்களைப் பாதுகாக்க முடியும்.

கிறிஸ்மஸ்தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறார்கள் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கும் தமது குடும்பங்களுடன் மகிழ்ச்சிகரமாகப் பொழுதைச் செலவழிப்பதற்கும் ஒரு பாதுகாப்பான சூழல் இங்கு காணப்படவில்லை. இங்குள்ள பெரும்பாலான சிறார்கள் பாடசாலைக்குச் செல்வது மிகக் குறைவு. அதிகமான சிறார்கள் தாங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள காலத்தில் நாளொன்றுக்கு மூன்று மணித்தியாலங்கள் மட்டுமே கல்வி கற்கின்றனர். இவர்கள் இந்த எட்டு மாதங்களில் 10 நாள்கள் மட்டுமே பாடசாலைக்குச் சென்றுள்ளனர்.

ஆஸ்திரேலியாவிலும் மேலும் பல நாடுகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள புகலிடக் கோரிக்கை கோரப்பட்ட சிறார்கள் மிகவும் மோசமான, ஆபத்தான வாழ்வையே தொடர்கின்றனர். மிகவும் பின்தங்கப்பட்ட தீவுப் பகுதியில் இந்தச் சிறார்கள் தடுத்து வைக்கப்படும் போது இவர்களுக்கான பாதுகாப்பான சூழல் அங்கு மறுக்கப்படுகிறது. இந்தச் சிறார்கள் தமது சூழல் தொடர்பாக இரவில் பயங்கரக் கனவுகளைக் காண்கின்றனர். இவர்கள் உளரீதியான பாதிப்புக்களுக்கு உள்ளாகுகின்றனர்.

கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் வெளியில் அல்லது மழையில் வரிசையில் காத்திருந்து தமது அடையாள அட்டைகளைக் காண்பித்து உணவுகளைப் பெற்றுக் கொள்கின்றனர். இவர்கள் தமது அடையாள அட்டைகளைக் காண்பித்தே மருத்துவ தேவைகளுக்கும், வைத்தியர்களை அல்லது தாதியர்களைச் சந்திக்க வேண்டும். குழந்தைகளுக்கான மாற்றுத் துணிகள் மற்றும் இவர்களுக்கான மூன்று போத்தல் பாலைப் பெற்றுக் கொள்வதற்கு ஒவ்வொரு தடவையும் பெற்றோர்கள் வரிசையில் காத்திருக்க வேண்டும். இரவு 11 மணி மற்றும் காலை 5-6 மணி ஆகிய இரண்டு தடவைகளும் புகலிடக் கோரிக்கையாளர்கள் தங்கியிருக்கும் அறையின் கதவுகளில் அதிகாரி ஒருவர் தட்டுவார். இதனால் சிறுவர்கள் மற்றும் இளையோரின் நித்திரை பாதிக்கப்படுகிறது.

குடும்பங்களைப் பிரித்தல் என்பதும் பிள்ளைகளுக்கிடையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதாவது மருத்துவ காரணங்களுக்காக வெளியிடங்களுக்குக் குடும்ப உறுப்பினர்கள் அனுப்பும் போது, பிள்ளைகள் பெற்றோர்களை விட்டும் பெற்றோர்கள் பிள்ளைகளை விட்டும் நீண்ட நாள்கள் பிரிந்திருக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. சிலசந்தர்ப்பங்களில் 18 வயதை அடையும் ஆண்கள் திடீரென மனுஸ்தீவுக்கு இடம் மாற்றுகின்ற சம்பவங்களும் இடம்பெறுகின்றன. இவ்வாறு ஆள்களை இடம்மாற்றுவதானது அதிகாலை வேளையிலேயே அதிகம் இடம்பெறுகிறது. இவர்களுக்கு எவ்வித முன்னறிவித்தலும் வழங்கப்படுவதில்லை. இவ்வாறான சம்பவங்கள் கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மத்தியில் வெறுப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சிறார்கள் தாம் வரைந்த படங்களின் மூலம் தாம் எவ்வாறான வடுக்களைச் சுமந்து வாழ்கின்றனர் என்பதைத் தெளிவாகக் காண்பித்துள்ளனர். தமது எதிர்காலம் தொடர்பாகவும், தமது வாழ்வு தொடர்பாகவும் மிகவும் அச்சமான வாழ்வை இவர்கள் வாழ்கின்றனர் என்பது இவர்களால் வரையப்பட்ட படங்கள் தெளிவுபடுத்துகின்றன. இவ்வாறான நிலையில் வாழும் இச்சிறார்கள் மற்றும் இளையோர் நௌரு அல்லது மனுஸ் தீவுக்கு இடம்மாற்றப்பட்டால் நிலைமை மிகவும் மோசமாகும்.

நன்றி : புதினப் பலகை.

# அழிவின் விளிம்பில்

## நெடுந்தீவு ஆடுகளும் மட்டக் குதிரைகளும்

ச.யசிந்தன்,
பேராசிரியர் பிரதீபா சில்வா
(விலங்கு வேளாண்மைப் பிரிவு
விவசாயபீடம் பேராதனைப் பல்கலைக்கழகம்)

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

வேகமாக ஓடும் திறனும் வீரியமும் கொண்டவை நெடுந்தீவு ஆடுகள். இந்தச் சிறப்பியல்புகளைக் கொண்டிருப்பதாலேயே இன்றும் நெடுந்தீவில் ஆடுகளை பார்க்கக்கூடியதாக உள்ளது. மேலும் ஆடுகளை அடையாளப்படுத்தி இனங்காண்பதற்கு காதுகள் வெவ்வேறு வடிவத்தில் வெட்டப்படுகின்றன. மேலும் ஆடுகளைப் பிடிக்கும்போது கயிறு மூலம் எறிந்து பிடிக்கப் படுகின்றன. ஆடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக அதன் இரு கால்களும் குறுக்கு வழியில் கட்டப்பட்டிருக்கும்.

பல்வேறு. இன்னல்களால் தமது ஆடுகளை இழந்த பண்ணையாளர்கள் இன்று ஆடுகள் வீட்டில் இருக்க வேண்டும் என் பதற்காக பொதுவாக இரண்டு அல்லது மூன்று ஆடுகளையே கட்டி வைத்து வளர்க்கிறார்கள். கால்நடை மருத்துவ வசதிகள் இந்தப் பண்ணையாளர்களுக்கு எட்டாக்கனியாகவே உள்ளது. இவற்றுக்கு ஏற்படும் கால்நடை மருத்துவ வசதிகள் கூட கிட்டாத பண்ணையாளர்கள், பல சுதேசிய வைத்திய முறைகளைக் கையாள்கின்றனர்.

மேலும் பல்வேறு மூலிகைகளை உணவாக உட்கொள்வதால் நோயெதிர்ப்புத் திறன் மேன்மேலும் வளர்ச்சியடைகிறது. இவ்வாறு பல சிறப்பியல்புகளைக் கொண்ட இந்த இனத்தை அழியாது பாதுகாப்பதும் நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

நெடுந்தீவில் சுதேசிய ஆடுகளின் தொகை வீழ்ச்சிக்கு உள்நாட்டுப் போர் முக்கிய பங்கை வகித்தது என்றால் மிகையாகாது. உள்நாட்டுப் போரின் போது இந்த ஆட்டினங்கள் பெருமளவில் அழிக்கப்பட்டன. உயர் பாதுகாப்பு வலயத்தின் மூலமும் இவை அழிவை எதிர்நோக்கின. நெடுந்தீவு ஆடுகள் அவற்றின் மேய்ச்சல் நேரம் வந்ததும் உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள மேய்ச்சல் தரைக்கு வழமை போல் சென்று வரும். அவ்வாறு ஆடுகள் சென்றதும் அவற்றைக் கண்காணிப்பதற்குப் பண்ணையாளர்கள் செல்ல முடியாது உயர் பாதுகாப்பு வலயம் தடுத்து நிறுத்திவிடும். இதன்போது மீண்டும் திரும்பிவரும் ஆடுகளின் எண்ணிக்கையில் தினம் குறைவு ஏற்பட்டதாகவும் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு பல்வேறு இன்னல்களை எதிர்கொண்ட இந்த ஆட்டினத்தின் எண்ணிக்கையில் வீழ்ச்சிக்குப் பல காரணங்களை முன்வைக்கலாம். நெடுந்தீவு ஆட்டுப் பண்ணையாளர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அவர்கள் இன்று எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகள் வருமாறு:-

அதிகரிக்கும் ஆடுகளின் திருட்டு. இரைகௌவி நாய்களின் அதிகரிப்பு. ஏற்றுமதி செய்யப்படும் ஆடுகளின் எண்ணிக்கை அதிகரிப்பு.

இவ்வாறு அதிகரிக்கும் திருட்டுக்களால் பண்ணையாளர்கள் ஆடுகளை மேய்ச்சல் நிலங்களுக்கு அனுமதிப்பதைத் தவிர்க்கின்றனர். இதனால் பெரும்பாலான பண்ணையாளர்களின் ஜீவனோபாய நடவடிக்கைகள் அச்சுறுத்தலடைந்து வருகின்றன.

நெடுந்தீவு ஆடுகள் பெரும்பாலும் மேய்ச்சல் நிலங்களிலேயே தங்களுக்கான உணவுகளை பெற்றுக் கொள்கின்றன. மேய்ச்சல் தரைகள் பெரும்பாலும் மனித குடியிருப்புகளிலிருந்து விலகி ஆள் நடமாட்டம் குறைந்த இடங்களில் காணப்படுவதால் திருடர்கள் ஆடுகளைத் திருடுவது சுலபமாகின்றது. இப்படியான ஆடுகளின் திருட்டுகள் இன்றைய நாள்களில் அதிகரித்துக் காணப்படுகின்றன. இது தொடர்பாக பண்ணையாளர்கள் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்ட போதும் பயனளிக்காத நிலையில் திருட்டுகள் அதிகரித்த வண்ணமே உள்ளன.

காலையில் இருந்து ஆடுகளை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கும் நாய்கள், ஆடுகள் மேய்ச்சல் நிலத்தை அண்மித்ததும் அவற்றைத் துரத்திப் பிடித்து இரத்தம் குடித்துவிட்டு அப்படியே விட்டுச் செல்கின்றன. கடற்படையினரால் வளர்க்கப்படும் நாய்கள் ஆடுகளைப் பிடித்து இரத்தம் குடிப்பதாலும், ஆடுகளின் எண்ணிக்கை பெருமளவில் வீழ்ச்சியைக் கண்டுள்ளது. மேலும் இந்த நாய்களை பண்ணையாளர்கள் கட்டுப்படுத்த முயலுகையில் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

அளவுக்கதிகமான நெடுந்தீவு ஆடுகளின் ஏற்றுமதியும் ஆடுகளின் குடித்தொகைப் பரம்பலை வெகுவாகப் பாதிக்கிறது. இறைச்சிக்காக நெடுந்தீவில் இருந்து ஏற்றுமதி (வர்த்தகர்களால்) செய்யப்படும் ஆடுகளின் எண்ணிக்கையும் அதிகரித்த வண்ணமே செல்கிறது. ஆடுகளின் ஏற்றுமதியின் போது வர்த்தகர்களுக்கு அனுமதி வழங்கும்போது இந்தக் குடித்தொகை வீழ்ச்சியை கருத்தில் கொள்கின்றார்களா? என்பது சந்தேகமாகவே உள்ளன.

### மட்டக்குதிரை (Pony)

இங்கு பாவிக்கப்படும் மட்டக்குதிரை எனும் பதம் பெரும்பாலானோருக்கு தெளிவின்மையை ஏற்படுத்தவும் செய்யலாம். மட்டக்குதிரை என்பது குதிரை விலங்கினங்களின் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மிருகமாகும். நெடுந்தீவில் காணப்படும் இந்தக் குதிரை இனத்தை மட்டக்குதிரை என அழைக்கப்படும். அதாவது ஆங்கிலத்தில் Pony என அழைக்கப்படும். குதிரை என்றால் ஆங்கிலத்தில் (Horse) என அழைக்கப்படும். பெரும்பாலான மக்கள் இந்த இனத்தை குதிரை (Horse) என்றே அழைக்கின்றனர். இன்னும் சிலர் கோவேறு கழுதை எனவும் குறிப்பிடுவர். குதிரை மற்றும் கழுதை ஆகிய இரண்டும் இனம் கலந்து அதன் மூலம் பெறப்படும் உயிரினமே கோவேறு எனப்படும். இதை ஆங்கிலத்தில் (Mule) என அழைக்கப்படும். கோவேறு கழுதை இனப்பெருக்கம் செய்யும் திறனற்ற (வளமற்ற) ஓர் இனமாகும். நெடுந்தீவில் இருப்பது மட்டக்குதிரை இனமே. இது எமது ஆய்விலும் கூட உறுதிப்படுத்தப்பட்டது. இந்த இனம் குதிரை அல்ல என்பதைத் தெளிவுபடுத்துவதற்கு பல காரணங்களை முன்வைக்கலாம். மட்டக்குதிரை இனமானது குதிரை இனத்துடன் ஒப்பிடுகையில் உயரத்தில் குறைவாகவும் அடர்த்தியான பிடரி முடியையும் தடித்த வால் பகுதியையும் கொண்டது. மேலும் உடலுடன் ஒப்பிடுகையில் பருமனில் சிறிய கால்களையும் தடித்த கழுத்தையும் சிறிய பரந்த முகத்தையும் கொண்டது.

பெரும்பாலானோ ரால் குதிரை என்று அழைக்கப்படும் மட்டக்குதிரை இனம் போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் காலத்தில் அரேபிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய் யப்பட்டதாக வரலாற்று நூல்கள் கூறுகின்றன. ஒல்லாந்தரால் இறக்குமதி செய் யப்பட்டதாகக் கூறப்படும் இந்த மட்டக் குதிரை சில வரலாற்று ஆசிரியர்களால் போர்த்துக் கேயர் காலத்தில் கொண்டு வரப்பட்டதாகவும் கூறப்படுகிறது. நெடுந்தீவு மக்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பெரும்பாலானோர் ஒல்லாந்தரால் இறக்குமதி செய்யப்பட்டதாகவே கூறுகின்றனர். இந்த மட்டக்குதிரை இனம் அன்னியர் ஆட்சியில் நன்கு பராமரிக்கப்பட்டு வந்ததுக்குச் சான்றாக இந்தத் தீவில் உள்ள சிதைந்த குதிரைலயம் மற்றும் மருந்துக்கேணி ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.



### முகத்தில் வெண்ணிற அடையாளத்தைக் கொண்டவை

கறுப்பு மற்றும் பொன் மண் நிறத்தை பிரதான நிறமாகக் கொண்ட இந்த மட்டக்குதிரை இனம்கலந்து உருவான செங்கபில நிற மட்டக்குதிரைகளும் உள்ளன. கறுப்பு நிற மட்டக் குதிரைகள் மிக அரிதாக காணப்படுகின்றன. சில மட்டக்குதிரைகளின் முகத்தில் வெண்ணிறப் பொட்டுகள் அல்லது கீறல்கள் காணப்படும். நெடுந்தீவு மக்களுடனான நேர்காணலில் அவர்கள் கூறுகையில்; மட்டக்குதிரைகளின் உயரம் மற்றும் வெண்ணிறப் புள்ளிகள் ஆகியன காலத்துக்குக் காலம் குறைவடைந்து செல்வதாகக் கூறுகின்றனர். இதற்குப் பிரதான காரணங்களாக உணவுப் பற்றாக்குறை மற்றும் உள்முகக் கலப்பு ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

### நெடுந்தீவு மட்டக்குதிரைகளின் பயன்பாடு

இந்தத் தீவில் உள்ள மட்டக்குதிரைகள் பல்வேறு காரணங்களுக்காக வளர்க்கப்படுகின்றன. பெரும்பாலான மாட்டுப் பண்ணையாளர்கள் குதிரை மீது ஏறி மாட்டுக் கூட்டங்களில் உள்ள தமது மாடுகளை இனங்காட்டி மட்டக்குதிரையை அவற்றை நோக்கி நகர்த்தி மாடுகளை கயிறுமூலம் எறிந்து பிடிப்பார்கள். இதைவிட மட்டக் குதிரை ஓட்ட (குதிரை ஓட்ட) நிகழ்வுகள் இடம்பெறுவதால் அவற்றுக்காகவும் சிலர் இதை வளர்த்து வருகின்றனர். சில காலங்களில் நெடுந்தீவு சிறுவர்கள் பொழுது போக்குக்காக மட்டக்குதிரையைப் பிடித்து அதன்மீது ஏறிச் சவாரி செய்வார்கள். இதைவிட சில பதநீர் மற்றும் கள் சேகரிப்பாளர்கள் தமது போக்குவரத்துக்காக மட்டக்குதிரையைப் பயன்படுத்துவார்கள். மேலும் நெடுந்தீவில் மட்டக்குதிரைகள் பல்வேறுபட்ட கலாசார நிகழ்வுகளில் அணிவகுப்பு மரியாதைக்குரிய இனமாக பயன்படுகிறது. அது மட்டுமல்லாமல் அஸ்வமேதயாகம் போன்றவற்றில் குதிரைக்குப் பதிலாக இவை பயன்படுகின்றன.

பெரும்பாலான நெடுந்தீவு மற்றும் இலங்கை மக்களுக்கு மட்டக்குதிரையின் பயன்பாடுகள் சரிவரத் தெரிவதில்லை. வெளிநாடுகளில் இவற்றைப் பல்வேறு தேவைகளுக்காக மக்கள் பயன்படுத்துகின்றனர். பொதுவாக மட்டக்குதிரையை சவாரி செய்வதற்கும், வண்டில் ஓட்டுவதற்கும் பயன்படுத்துவர். ஜேர்மன் நாட்டில் மட்டக் குதிரையை உழவுக்காகப் பயன்படுத்தி வருகின்றனர். பல இடங்களில் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கும் இவற்றை வைத்து சுற்றுலாத் தலங்களை உருவாக்கவும் பயன்படுத்துவர். மேலும். மணமக்கள் ஊர் வலத்திலும் இவற்றை வைத்து அலங்கரிக்கப்பட்ட வண்டியில் பயணம் செய்வர். மேலும் உயரிய வளமான ஓட்டக் குதிரைகளை இவற்றை வைத்து உருவாக்குகின்றனர். அவ்வாறு உருவாக்கப்படும் ஓட்டக்குதிரை ஒன்றின் விலை சுமார் 70,000,000 ஆகும்.

### சுற்றுலாப் பிரயாணத்தில் மட்டக் குதிரை


மட்டக்குதிரை வளர்ப்பவர்களிடம் மேற்கொண்ட ஆய்வில் அவர்கள் எவ்வாறு மட்டக்குதிரையை தேர்ந்தெடுத்து பிடித்து அவற்றை பராமரிப்பது பற்றி தெரிவித்த கருத்துக்களின் சாராம்சம் என்னவென்றால் மட்டக்குதிரை ஒன்றைப் புதிதாகப் பிடிக்கும்போது அவர்கள் அதன் தலையில் உள்ள சுழியை வைத்து அதனைத் தரம் கணிப்பர். ஒரு சுழி அல்லது மூன்று சுழி உள்ள மட்டக்குதிரைகள் மிகவும் உற்சாகமானவை எனவும், இரண்டு சுழி உள்ள மட்டக்குதிரை குறைவான வேகம் உடையது எனவும் கருதுகின்றார்கள். இவற்றைவிட மட்டக்குதிரைத் தெரிவின் போது பற்களின் அமைப்பு, செவியின் அமைப்பு மற்றும் அவை ஓடும்போது அவற்றின் வேகம் ஆகியவற்றை வைத்துத் தேர்ந்தெடுப்பார்கள்.

மட்டக்குதிரைகளைப் பிடிக்கும்போது பிறிதொரு மட்டக்குதிரையைப் பயன்படுத்தியே பெரும்பாலும் பிடிப்பார்கள். சிலர் நீர் நிலையை அண்டிய இடங்களில் பொறி வைத்தும் பிடிப்பார்கள். பெரும்பாலும் இந்த மட்டக்குதிரைகள் கயிறு மூலம் எறிந்து பிடிக்கப்படுகின்றன.

நெடுந்தீவில் மட்டக்குதிரைகளை அடையாளங் காண குறிசுடுதலை மட்டக்குதிரை வளர்ப்போர் பயன்படுத்துகின்றனர். பெரும்பாலான மட்டக்குதிரைகள் புற்றரைகளில் பிடிக்கப் பட்டதும் உடனே குறி சுடப்படும். குறி சுட்டபின் அந்த மட்டக் குதிரை அந்தக் குறியை குறிப்பவருக்கு உரிமை என்று அந்த மக்கள் கூறுகின்றனர். மட்டக்குதிரை தேர்ந்தெடுத்தலின் போது குறிசுடப்பட்டவை பிடிக்கப்படமாட்டா.

புதிதாகப் பிடிக்கப்பட்ட மட்டக்குதிரை சவாரி செய்யும் அனுபவமற்றது. சவாரி பழக்குவதற்காக கடற்கரையிலே பயிற்சி மேற்கொள்ளப்படும். கடற்கரையில் பயிற்சி பழக்குவதால் பயிற்றுவிப்பாளருக்கு ஏற்படும் காயங்கள் தவிர்க்கப்படுகின்றன. புல்வெளியில் காணப்படும் மட்டக்குதிரை 3 வகையான கூட்டங்களாகப் பொதுவாகக் காணப்படும். அவையாவன, ஒரு ஆண் குதிரையும் 5-6 பெண் குதிரைகளும் கொண்ட கூட்டம், 4-5 ஆண் குதிரைகள் மட்டும் சேர்ந்த கூட்டம், மற்றும் ஆண், பெண் குதிரைகளும் குட்டிகளும் சேர்ந்த கூட்டம் என்றவாறு காணப்படுகின்றன. மூன்றாவதாகக் கூறப்பட்ட ஆண், பெண் குதிரைகளும் குட்டிகளும் சேர்ந்த கூட்டத்தில் உள்ள சிறிய ஆண் மட்டக்குதிரைகள் வயது முதிர்ச்சியடைந்ததும், அந்தக் கூட்டத்தில் உள்ள மற்றைய ஆண் மட்டக் குதிரைகளுடன் சண்டையிடும் சண்டையில் வெற்றி பெற்ற ஆண் மட்டக் குதிரையே அந்தக் கூட்டத்தை வழி நடத்தும். தோல்வியடைந்த மற்றய மட்டக்குதிரைகள் இவ்வாறு தோல்வியைத் தழுவிய ஏனைய மட்டக்குதிரைகளுடன் சேர்ந்து ஆண் மட்டக் குதிரைகளின் கூட்டத்தை உருவாக்கும். இவை பெண் குதிரைகளுடன் காணப்படும் ஆண் மட்டக்குதிரையை சண்டையில் தோற்கச் செய்து அந்தக் கூட்டத்தில் நுழைவதற்கு தகுந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்த வண்ணம் இருக்கும்.

*(தொடரும்)*





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: வாழ்க்கைத் துணையுடன் விவாதம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலையும் காரிய தாமதத்தையும் சந்திக்க வேண்டி இருக்கும்.

**இடபம்**: புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். குடும்பத்தில் இருந்த குழப்பம் நீங்கும். உறவினர்கள் வருகை இருக்கும். வெளியூர் பயணங்களின்போது கவனம் தேவை. அடுத்தவர்களுக்காக பொறுப்புகளை ஏற்கும்போது ஒரு முறைக்கு பலமுறை யோசித்து முடிவு எடுப்பது நல்லது.

**மிதுனம்**: வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். புதிய நபர்களிடம் எச்சரிக்கை தேவை. மனதில் தைரியம் தன்னம்பிக்கை உண்டாகும். துணிச்சலுடன் எந்த காரியத்திலும் ஈடுபட்டு சாதகமாகச் செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரம் திருப்திகரமாக இருக்கும்.

**கடகம்**: எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வருமானம் அதிகம் கிடைக்க பெறுவீர்கள். வராது என்று எண்ணிய பணம் வந்து சேரும். வாழ்க்கை துணையினால் இலாபம் கிடைக்க பெறுவீர்கள். சகோதர வழியில் வேண்டிய உதவி கிடைக்கும்.

**சிங்கம்**: மனோ தைரியம் கூடும். துணிச்சலுடன் எந்தக் காரியத்திலும் ஈடுபட்டு சாதகமாகச் செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு எதிலும் வெற்றி பெறுவீர்கள். கலைத்துறையினருக்கு எதிலும் வெற்றிகள் குவியும்.

**கன்னி**: சமூகத்தில் மரியாதை உயரும். வாக்கு வன்மையால் புகழ் கூடும். புதிய நபர்களை நம்பி எதையும் செய்யும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டாகும். வெளியூர், வெளிநாட்டு பயணம் திட்டமிட்டபடி அமையும்.

**துலாம்**: அரசு தொடர்பான வேலைகள் தடையின்றி நடக்கும். குடும்பத்தில் திடீர் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர்களுடன் சுமுகமான போக்கு காணப்படும். அவர்களால் நன்மையும் உண்டாகும். நீண்ட தூர தகவல்கள் நல்ல செய்திகளைத் தரும். பிள்ளைகள் எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும்.

**விருச்சிகம்**: உங்களது செயல்களை மற்றவர்கள் பாராட்டுவார்கள். மரியாதையும் அந்தஸ்தும் அதிகரிக்கும். புதிய நபர்களிடம் கவனம் தேவை. உத்தியோகத்தில் முன்னேற்றம் காணப்படும். ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் போது கவனம் தேவை.

**தனுசு**: நிர்ப்பந்தத்தின் பேரில் மனதுக்கு பிடிக்காத வேலை செய்ய வேண்டி இருக்கலாம். தொழில் வியாபாரத்தில் விழிப்புடன் இருப்பது நன்மைதரும். எதிர்காலம் பற்றிய சிந்தனையும் மனக்கவலையும் ஏற்படும்.

**மகரம்**: குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் உண்டாகலாம். உங்கள் பேச்சை சரியாகப் புரிந்து கொள்ளாமல் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள். அனுசரித்து செல்வது நல்லது. ஆன்மிக பணிகளில் கவனம் செல்லும்.

**கும்பம்**: எந்த வாக்குறுதியும் அளிக்காமல் இருப்பது நல்லது. தேவையான உதவிகள் கிடைக்கும். புதிய நண்பர்கள் அறிமுகமாவார்கள். எதையும் ஒரு முறைக்கு இருமுறை நன்கு யோசித்து செய்வது வெற்றியைத் தரும்.

**மீனம்**: அடுத்தவருக்கு உதவி செய்யப் போய் அதனால் அவச் சொல் உண்டாகலாம் கவனம் தேவை. வீண் அலைச்சல் உண்டாகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் கொடுத்த பணியை முடிப்பதில் தாமதம் உண்டாகலாம்.

## நாளை

**வைகாசி-06 செவ்வாய்க்கிழமை | 20.05.2014**

திதி: ஷஷ்டி பி.ப. 01.11 வரை
நட்சத்திரம்: திருவோணம் மு.இ.11.31 வரை
சுபநேரம்: 10.22-11.52 வரை
இராகுகாலம்: 02.52-04.22 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### இந்து வேதாந்தத் தத்துவத்தின் படிகள்

இந்தியச் சமயங்களின் தொடக்கமே விசித்திரமாக இருக்கிறது. கடுமையான ஆராய்ச்சியினாலும், கவனமாகக் கணக்கிடுவதாலும், ஊகத்தாலும் மட்டுமே இத்தகைய விசித்திர நிலை ஒன்று இருந்தது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க முடியும். நாம் அறியும் ஆரம்ப நிலை இந்த நிலைக்கு அடுத்தபடியே தவிர விசித்திரமான இந்த முதற்படி அல்ல. ஆரம்ப நிலையில் படைப்பைப் பற்றியிருந்த கருத்தே மிக விசித்திரமானது. இறைவனின் விருப்பத்தால் வெறும் சூனியத்திலிருந்து இந்தப் பிரபஞ்சம் படைக்கப்பட்டது; முன்பு இது இல்லவே இல்லை; சூனியத்திலிருந்து தான் இவை எல்லாம் பிறந்தன என்பதே அந்தக் கருத்து. அடுத்த நிலையில் இந்த முடிவைப் பற்றிய சந்தேகம் வந்து விடுகிறது. சூனியத்திலிருந்து, பொருள் எவ்வாறு தோன்ற முடியும்? வேதாந்தத்தின் முதற்படியிலேயே இந்தக் கேள்வி எழுகிறது. இந்தப் பிரபஞ்சம் இருப்பது உண்மையானால், இருக்கும் ஏதாவது ஒன்றிலிருந்து தான் இது தோன்றியிருக்க முடியும். சூனியத்திலிருந்து எதுவும் எங்கும் தோன்ற முடியாது என்பது நன்கு தெரிந்த ஒன்று. மனிதர்கள் செய்யும் எல்லாத் தொழில்களுக்கும் பொருள்கள் தேவைப்படுகின்றன. வீடு ஒன்று கட்ட அதற்கு வேண்டிய துணைக் கருவிகள் முன்பே இருந்தன; ஒரு படகு கட்டப்பட்டாலும் அப்படியே; எந்த ஆயுதம் செய்தாலும் அப்படியே. ஏற்கெனவே உள்ள காரணங்களால்தான் ஒரு காரியம் உருவாகிறது. எனவே, சூனியத்திலிருந்து இந்தப் பிரபஞ்சம் படைக்கப்பட்டது என்னும் கொள்கை ஏற்றுக் கொள்ள முடியாதது. இது படைக்கப்படுவதற்குக் காரணமான மூலப்பொருள் ஒன்று தேவைப்பட்டது. இந்த மூலப்பொருள் பற்றிய ஆராய்ச்சியே உலக மதங்களின் வரலாறு ஆகும்.

## உலகின் மிகப்பெரிய டைனோசரின் உடல் எச்சங்கள் கண்டுபிடிப்பு



இதுவரை பூமியில் வாழ்ந்தவற்றுள் மிகப்பெரிய உயிரினத்தின் உடல் எச்சங்கள் ஆர்ஜன்ரீனாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தொன்ம உயிரியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.
இந்த டைனோசரின் தொடை எலும்புகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்புக்களின் பிரகாரம், இது 40 மீற்றர் நீளமானதாகவும், 20 மீற்றர் அகலமானதாகவும் இருந்திருக்கும் என்று தெரிகிறது.
பாலைவனப் பகுதியில் வாழ்ந்திருக்கலாம் எனக் கருதப்படும் இந்த டைனோசர் வகை ஏறக்குறைய 77 தொன் எடையைக் கொண்டவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது 14 ஆபிரிக்க யானைகளின் மொத்த எடையைக் கொண்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் முன்பு கண்டறியப்பட்ட டைனோசர் வகைகளை விட இந்த டைனோசர்களின் எடை 7 தொன் அதிகம் எனவும் ஆய்வாளர்கள் குறிப் பிட்டுள்ளனர்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 4 | | | | | 3 | 8 |
| 6 | 5 | 2 | | | 1 | 9 | 4 | |
| | | | | 7 | | 2 | | |
| | | | | 9 | | 3 | | 4 |
| | 3 | | 8 | 4 | 7 | | 2 | |
| 4 | | 1 | | 2 | | | | |
| | | 9 | | 6 | | | | |
| | 4 | 6 | 2 | | | 5 | 9 | 1 |
| 5 | 8 | | | | | 7 | | 2 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 8 | 1 | 9 | 5 | 3 | 2 | 4 |
| 4 | 9 | 5 | 6 | 3 | 2 | 8 | 1 | 7 |
| 1 | 3 | 2 | 4 | 7 | 8 | 5 | 6 | 9 |
| 5 | 6 | 3 | 9 | 2 | 7 | 1 | 4 | 8 |
| 2 | 4 | 9 | 5 | 8 | 1 | 6 | 7 | 3 |
| 8 | 1 | 7 | 3 | 4 | 6 | 2 | 9 | 5 |
| 7 | 5 | 4 | 2 | 1 | 3 | 9 | 8 | 6 |
| 9 | 2 | 6 | 8 | 5 | 4 | 7 | 3 | 1 |
| 3 | 8 | 1 | 7 | 6 | 9 | 4 | 5 | 2 |



# படைக்கும் பிரம்மாக்கள் பெண்களே

உடுவிலூர்
■ கலா

ஆன்மிகம் தொடங்கி அறிவியல் வரை பெரிய முன்னேற்றம் கண்டு சமூக வளர்ச்சிகளில் கூட பற்பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ள போதும் பெண்ணினத்தின் மீதான சமூகப் பார்வையானது இன்றும் அடிமைகளாகவும் இரண்டாம் பட்சமாக பார்க்கின்ற நிலையிலேயே உள்ளது. நாகரிக வளர்ச்சி என்பது ஆண்களுக்கு மட்டும்தானா? சமூக நாகரிக வளர்ச்சியில் பெண்ணினம் அடிமைகளாக, பழைமைவாதக் கொள்கைகளை கிரகித்துக் கொள்ள வேண்டும் எனச் சமூகம் செயற்படுவது ஏன்? பெண்ணினத்தால் தியாகம் நிறைந்த நற்சேவைகளைப் பெற்று உயிர்ப்படையும் குடும்பமோ, சமூகமோ பெண்களின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருப்பது ஏன்?

குடும்பத்தின் உந்துசக்தி பெண். சமுதாயத்தின் உட்கரு பெண். பெண்ணில்லாத வீடு சிறப்படைவதில்லை. பெண்ணின் துணை ஒவ்வொருவருக்கும் முக்கியமானது. பெண்ணின் துணையின் அவசியம் உணர்ந்து தான் ஆண்கள் பெண்ணைத் துணையாகக் கொள்கின்றனர். மனைவி இறந்துவிட்டால் இன்னொரு பெண்ணைத் துணையாகக் கொள்வது இதற்காகவே குடும்பத்தில் பெண்ணின் தன்னலமற்ற சேவைக்கு நிகர் எதுவுமேயில்லை. சமுதாயத்திலும் சரி குடும்பத்திலும் சரி பெண்ணே உயிர்நாடி. ஆணுக்கு தாதியாக, அமைச்சனாக, மனைவியாக, தாசியாக துணை நிற்பவள் அவள் என்பதை அனுபவத்தால் நன்குணர்ந்தும் அடிமை வாழ்வினுள் காய் நகர்த்தி வேதனையோடு வாழ வைப்பதுதான் புரியவில்லை. ஆணின் வெற்றிக்குப் பின்னால் பெண் இருப்பாள் என்பதை விடவும் ஆணின் உற்ற துணையாக பெண் உள்ளாள் என்பதை ஆண்கள் உலகம் நன்றியோடு உணர வேண்டும்.

மனைவியை இழந்தவன் மறுமணம் செய்தால் முதல் தாரப் பிள்ளைகளைப் பராமரிக்க ஆணுக்கு துணை தேவையெனக் கூறும் சமூகம் ஓர் இளம் விதவை மறுமணம் செய்தால் தவறாகப் பார்க்கிறது. வல்லினத்தால் வன்முறைக்குள்ளாகும் மெல்லினத்தை அதே வல்லினமே வார்த்தைகளால் வசைபாடுவதை நம் சமூகத்தில் பரவலாகக் காண முடியும். நாகரிக உடையணிந்து சென்றால் வாகனங்கள் ஓட்டிச் சென்றால் வார்த்தைகளால் விமர்சிக்கும் சமூகம், பெண்ணின் சேவையைப் பெற்றுமெருகேறுவதை மறந்தே விடுகிறது.

கைபேசிகளில் குறும் செய்திகள், அநாமதேய அழைப்புக்கள் என பெண்களை இம்சிக்கும் ஆண்கள் பெண்களின் புனிதத் தன்மையையும் அவர்களுக்குள் இருக்கும் பரோபகாரம் நிறைந்த அழகான பெண்மையையும் பரிசுத்தப்படுத்த வேண்டும். பெண்ணுரிமை கிடைத்துவிட்டது என்ற போர்வையில் குடும்பத்திலும் சமூகத்திலும் பெண்கள் அனுபவிக்கும் இம்சைகள் பட்டியல் இடமுடியாதவை. பெண்களின் சிறு சிறு அசைவுகள் கூட சமுதாயத் தில் பேரம் பேசப்படுகிறது. ஆனால் ஆண்கள் செய்கின்ற வன்முறைகள் சமூகத்தில் பாராமுகமாகப் போகும் நிலைகளும் ஏன்? சட்டத்தின் முன் கூட சில பாலியல் குற்றவாளிகள் நிரபராதியாகின்றனர். பாலியல் வன்முறைக்குள்ளான பெண்கள் சமுதாயத்தில் வசைபாடும் உறவுகளால் நிர்க்கதி யாகின்றனர்.

எனவே இப்படியான பெண்கள் மீதான ஓரங்கட்டப்பட்ட சமூகப் பார்வையானது மாற்றம் பெற வேண்டும். பெண்களின் பெண்மையை அன்போடும் பரிசுத்தத்தோடும் கையாள வேண்டும். ஆண்களை விடவும் பெண்கள் ஒரு படி உயர்ந்தவர்கள். காரணம் படைக்கும் பிரம்மாக்கள் பெண்கள் சமூகமே. இந்த உண்மையை நீ உணர்ந்திடு. வசைபாடுவதை மறந்திடு.

> பெண்களின் பெண்மையை அன்போடும் பரிசுத்தத்தோடும் கையாள வேண்டும். ஆண்களை விடவும் பெண்கள் ஒரு படி உயர்ந்தவர்கள். காரணம் படைக்கும் பிரம்மாக்கள் பெண்கள் சமூகமே. இந்த உண்மையை நீ உணர்ந்திடு. வசைபாடுவதை மறந்திடு.



## உலகோர் குலதெய்வம்

உன் கருவின் கதகதப்பில்
உயிர் கொண்டேன்
எனைப் படைத்த
கடவுள் நீ!

எனக்கு பாலூட்டி
சீராட்டி வளர்த்தாய்
என் தாய் நீ!

என்னோடு
மண்ணில் விளையாடி
அன்பை வளர்த்தாய்
என் சகோதரி நீ!

பதின் பருவ
ஹார்மோனால்
பட்டாம்பூச்சி பறந்த போது
எனக்கு தேவதை நீ!

கல்யாண பந்தத்தில்
வாழ்வோடு கைகோர்த்த
மனைவி நீ!

என் சகியின்
மணிவயிற்றில்
மலர்ந்து சிரித்த போது
எனக்கு தெய்வத் திருமகள் நீ!

சருமம் சருகாகி
உதிரும் இலையான
எனை மடியில் சுமக்கும் போது
மீண்டும் தாயே நீ!

மானுட தேர் ஓட
மறுக்க முடியாத
மலர்ந்த சக்தியே
அச்சாணியே....
மாகாளி நீ!
பராசக்தி நீ!
உலகோர் குலதெய்வம்!

*எஸ்.ஆர்.செந்தில்குமார்*



# உலகை மாற்றிய சரித்திரத் தோழி

வரலாற்று நெடுகிலும் பெண்களின் அறிவும் திறமையும் மறைக்கப்பட்டே வந்திருக்கிறது. அவற்றில் மிகச்சில பெண்களே தடைகளை மீறி வெளியுலகத்துக்குத் தெரிந்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் பண்டைய காலம் தொட்டே அறிவுத் தளங்களில் பெண்கள் செயல்பட்டிருக்கிறார்கள் என்பதை ஔவையார் என்ற மூதாட்டியின் படைப்புகளில் இருந்து அறிந்துகொள்ள முடிகிறது.

**அழியாத ஔவையார்**

திருமணம் செய்துகொள்ளாமல், புலமை பெற்ற பெண்களை ஔவை என்று அழைக்கிறார்கள். நாம் ஔவை என்று சொல்பவர் ஒரே ஒரு பெண் அல்ல... பல காலகட்டங்களில் வாழ்ந்த பெண்களின் படைப்புகளை, ஒரே பெயரிட்டு அழைத்து வருகிறோம்.


நமக்கு எல்லாம் நன்கு அறிமுகமான ஔவை, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி நாற்பது போன்ற அழியா படைப்புகளைக் கொடுத்தவர்.

சிறுவர்களையும் பெரியவர்களையும் அசரவைக்கக்கூடிய படைப்பு இந்த ஔவையுடையது. இவர் சங்க காலத்தில் வாழ்ந்தவர். இவருடைய படைப்புகள் மிகவும் எளிமையாகவும் வலிமையாகவும் இருப்பது சிறப்பு. ஆத்தி சூடிக்கும் கொன்றை வேந்தனுக்கும் விளக்கவுரையே தேவை இல்லை... அவ்வளவு எளிமையானவை.

பெண்கள் அடக்கி வைக்கப்பட்ட காலகட்டத்தில், ஆணாதிக்க சமூகத்தில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டு, தன் படைப்புகளை வெளிப்படுத்திய ஔவை இன்றைய பெண்களுக்கு உதாரண மனுஷியாவார்.

எளிமை, நேர்மை, நாணயம், பண்பு போன்ற வற்றை போதித்த ஔவை, தானும் அப்படியே வாழ்ந்தவர். மன்னர்களுடனும் அறிவில் சிறந்த சான்றோர்களுடனும் நட்பு கொண்டவர், விவாதம் செய்தவர்.

பல இடங்களுக்குப் பயணம் மேற்கொண்டவர். காலம் கடந்தும் தமிழ்ப் பெண்களின் பெருமையை உலகுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார் ஔவை.



> **பெண்கள் அடக்கி வைக்கப்பட்ட காலகட்டத்தில், ஆணாதிக்க சமூகத்தில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டு, தன் படைப்புகளை வெளிப்படுத்திய ஔவையார் இன்றைய பெண்களுக்கு உதாரண மனுஷியாவார்.**

# அமலமரித் தியாகிகள் சபையின் கொழும்புத்துறை ஆலயத் திருவிழா

கொழும்புத்துறை, மே 19
அமலமரித் தியாகிகள் சபையின் நிறுவுநர் புனித இஜீயின் டி மசெனட்டின் பெயரில் அமலமரித் தியாகிகள் சபையின் கொழும்புத்துறை வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தின் முதலாவது திருவிழா எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ளது.
நேற்று ஆரம்பமான திரிதின ஆராதனையைத் தொடர்ந்து நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5.15 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும், 21 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் நடைபெறும்.
குறித்த சபை ஆரம்பிக்கப்பட்டு 200 ஆம் ஆண்டு எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு நிறைவடையவுள்ளதை முன்னிட்டு இந்த ஆண்டு முதல் 3 வருடங்களுக்கு தயாரிப்பு வழிபாட்டுக் குரு விழாவாக சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
பணி வாழ்வு, ஆன்மிகத்தில் உலகளாவிய ரீதியில் புதுப்பித்தலை ஏற்படுத்தும் நோக்கில் பொது நிலையினருக்கான அமலமரிமறை பரப்புச் சபையையும் இணைத்து பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக குருமட அதிபர் தெரிவித்தார். (வ-135)

# வவுனியா மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளராக அகிலேந்திரன்

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் அத்தியட்சகர் வைத்தியர் கே.அகிலேந்திரன் வைத்தியசாலையின் பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். சுகாதார அமைச்சால் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் "ஏப்ரல் 4 ஆம் திகதி தொடக்கம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டுள்ளீர்கள்" என குறிப்பிடப்பட்டுள்ளது.
திருகோணமலை மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் கல்வி கற்று 2004 ஆம் ஆண்டு மருத்துவராக வெளியேறி பல மாவட்டங்களில் கடமையாற்றி இறுதியாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்தியராகக் கடமையாற்றி, சென்ற வருடம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் அத்தியட்சகர் ஆனார்.
இவர் அத்தியட்சகர் பதவியேற்ற பின் வைத்தியசாலையில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நோயாளர்கள் இலகுவாக மருத்துவ சேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் இவரால் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-421)


## தேவை

சகலவிதமான நெல் வகைகளும் கொள்முதல் செய்யப்படும்.
தொடர்பு : 077 772 2215 (48220) (7.6.3)

## காணி விற்பனைக்குண்டு

சிவபூதராயர் வீதி, சுன்னாகம் தெற்கில் உள்ள 25 பனைகளுடன் கூடிய 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: க.பாலசுப்பிரமணியம்
T.P. No. 077 698 5855 (48106) (7.6.3)

## இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் 1kg இறைச்சி 430/= மட்டும்.
10kgஇற்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு 1kg - 410/= மட்டும்.
விஜயகுமார் தனிப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 315 1723 (48163) (7.6.3)


# மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கணித, உயிரியல் மற்றும் வர்த்தக பிரிவு மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை இன்று திங்கட்கிழமையும், எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது.
இந்தப் பரீட்சை வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு , மன்னார் ஆகிய 4 மாவட்டங்களில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு நடத்தப்படவுள்ளது.
வர்த்தகப் பிரிவு பரீட்சை வவுனியா மாவட்டத்திலும் ,கணித, உயிரியல் பிரிவு பரீட்சைகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படவுள்ளன என்று வவுனியா அனைத்து பல்கலைக்கழக மாணவர் அபிவிருத்திச் சங்கத் தலைவர் தெரிவித்தார். கடந்த காலங்களில் நடைபெற்ற இந்தப் பரீட்சை மாணவர்களை உயர்ந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு உதவியாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# விவசாய டிப்ளோமாவுக்கு விண்ணப்பிக்கலாம்

ஏப்ரல் 25 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விவசாய டிப்ளோமா கற்கை நெறிக்கான அனுமதி யைப் பெறுவதற்குத் தகைமை படைத்த விண் ணப்பதாரிகளை விண்ணப்பிக்குமாறு வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் கேட்டுக் கொண்டுள்ளார்.
விவசாயப் போதனாசிரியர், ஆராய்ச்சி உதவியாளர், குடியேற்ற உத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு விவசாய டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் வடமாகாணத்தில் போதியளவு காணப்படவில்லை எனத் தெரிவித்த அவர் தகுதியானவர்கள் இந்த வாய்ப்பைத்தவறவிடாது எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து உரிய இடத்துக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொண்டுள் ளார். (க)

# முன்னோடிப் பரீட்சை நேர அட்டவணை

யாழ்ப்பாணம், மே 19
க.பொ.த. உயர்தர முன்னோடிப் பரீட்சைக்கான நேர அட்டவணை வடமாகாண கல்வி அமைச்சின் சார்பில் வெளியிடப்பட்டுள்ளது.
23 ஆம் திகதி - காலை 08.30- மு.ப 10.30 பௌதிகவியல் I, 26ஆம் திகதி- காலை 08.30- மு.ப 11.30 பௌதிகவியல் II, 27ஆம் திகதி - காலை 08.30- மு.ப 10.30 இரசாயனவியல் I, 28ஆம் திகதி காலை 08.30- மு.ப 11.30 இரசாயனவியல் II, 29ஆம் திகதி- காலை 08.30- மு.ப 10.30- உயிரியல் I, காலை 08.30- மு.ப 11.30 இணைந்த கணிதம் I, 30ஆம் திகதி- காலை 08.30- மு.ப 11.30 உயிரியல் I, காலை 08.30.மு.ப 11.30- இணைந்த கணிதம் II. (ம)

# மரண அறிவித்தல்

## திருமதி தனலக்ஷ்மி சிறீதரன்

(ஆசிரியை - நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை)



விழிசிட்டி, தெல்லிப்பழையைப் (வித்தகபுரம்) பிறப்பிடமாகவும், 49A, இராமநாதன் வீதி, நாயன்மார் கட்டுவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலக்ஷ்மி சிறீதரன் நேற்று (18.05.2014) ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் தருமராசா - நீலாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும், சீறீதரன் (பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், ஜெயலக்ஷ்மி, வரலக்ஷ்மி, கருணாலக்ஷ்மி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பிரணவி, ஹம்ஷாளினி (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), கரணிதரன் (யாழ். இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும், கணபதிப் பிள்ளை - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், யோகீஸ்வரன், சந்திரா, பாஸ்கரன், ஜெகதீஸ்வரன், கேதீஸ்வரன், காலஞ்சென்றவர்களான தயாபரன், கிருபாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2014) திங்கட்கிழமை பிற்பகல் 2 .00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**கணவர், பிள்ளைகள்.**
49 A , இராமநாதன் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம். (48229) (45.6.3)
தொ.பே. 077 190 6842/077 236 7852

# சமய சந்நிதிகளில்....

வட்டுக்கோட்டை, மே 19
வட்டுக்கோட்டை உடுக்கியவளை ஸ்ரீ மஹா கணபதி பிள்ளையார் ஆலய ஜயவருட சங்காபிஷேகம் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.
இன்று திங்கட்கிழமை மாலை வாஸ்துசாந்தி, கும்பஸ்தாபனம், யாகபூசை, ஹோமம் என்பன நடைபெறும். செவ்வாய்க்கிழமை காலை 7 மணி முதல் விசேட பூசைகள் நடைபெற்று பஞ்சமுக விநாயகர் சங்காபிஷேகம், விசேட பூசை, திரு ஊஞ்சல், சுவாமி திருவீதியுலாவுடன் நிறைவு பெறும். (ஒ)

♦♦♦

யாழ்ப்பாணம், மே 19
வில்லூன்றி விநாயகராலய வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் புதன்கிழமை காலை ஒன்பது மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறும். தினமும் காலை 7.45 மணிக்கும் பிற்பகல் 5.30 மணிக்கும் வசந்த மண்டபப் பூசை நடைபெறும். 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கும் வசந்த மண்டபப் பூசையும் 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ஒ)

# இளங்கோ அடிகள் நினைவு தினம்

வவுனியா, மே 19
வவுனியாவில் இளங்கோ அடிகளின் நினைவு தினம் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது.
வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், வவுனியா வரியிறுப்பாளர் சங்கம் இணைந்து இந்த நிகழ்வை நடத்தின.
இந்த நிகழ்வில் வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா, முன்னாள் வவுனியா நகர பிதாஎஸ்.என்.ஜிநாதன், முன்னாள் உப நகர பிதா சந்திரகுலசிங்கம் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.
"இளங்கோ அடிகள்" பற்றியநினைவுரையை தமிழ்மணி அகளங்கன் நிகழ்த்தினார்.
நிகழ்வின் இறுதியில் "பூமரக் கன்றுகள்" நடப்பட்டன. (க-402)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**விமலாதேவி நித்தியானந்தம்**
மலர்வு 03★10★1952
உதிர்வு 23★05★2011
திதி: அபரபக்க சஷ்டி 19.05.2014

அன்புக்கோரி இலக்கணமாய்
ஆதரவாய் எமக்கிருந்தீர்
இங்கிதமாய் பேசும் உமதியல்பு
ஈடில்லா இறைபக்தி கொண்டவரே!
ஆண்டுகள் மூன்று அகன்றாலும்
உங்கள் நினைவு எம்மை விட்டு அகலாது

இன்று (19.05.2014) திங்கட்கிழமை வத்திராயன் ஆலடிப்பிள்ளையார் கோயிலில் இவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வு நடைபெறும். அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வத்திராயன் வடக்கு, தாளையடி. (48136)(3.6.1)
சு.நித்தியானந்தம் (கணவர்)
பிள்ளைகள்.


## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து) கேள்வி கோரல்கள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை பின்வரும் பொருள்களுக்கான கேள்வி கோரல்களைக் கோருகின்றது.

1) ஈயம்
2) இரும்பு
3) பழைய அச்சக இயந்திரங்கள்
4)பழுதடைந்த மரத்தளபாடங்கள்

கேள்விப் பத்திரத்திற்கான மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50/= செலுத்தி இயந்திரத்திற்கான விவரங்களையும், விண்ணப்பப் படிவத்தையும் சபை அலுவலக நேரத்தில் பெற்று 05.06.2014 இற்கு முன்னதாக விண்ணப்பிக்கவும். தங்களுக்கு வசதியான நேரத்தை முன்னரே அறிவித்து பொருள்களை களஞ்சியத்தில் பார்வையிடலாம்.

செயலாளர்,
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து)
வீரசிங்கம் கட்டடத் தொகுதி - 2ஆம் மாடி
இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(#/14009)(7.6.3)

## Vacancies

எமது யாழ்.நகர் மற்றும் சாவகச்சேரி கிளைகளில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- Reception Duty Officer - Female
- Officer in-charge - Male
- Instructor for C, C++, Java - Male / Female
- Lecturer for AUTO CAD (Part time) - Male / Female
- Instructor for Multimedia - Male / Female

விண்ணப்பதாரிகள் சுயவிபரக்கோவையை மின்னஞ்சல் (e-mail) மூலமாக 22-05-2014ம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.
HND & Degree முடித்தவர்கள் Officer Incharge பதவிக்கு விண்ணப்பிக்கலாம். (C/14008)

ASIAN COMPUTER EDUCATION
e-mail : asianedu@dialogsl.net

# தந்தைக்கு உதவியாக 'ரீ' விற்ற மோடி இன்று பரந்த பாரத நாட்டின் பிரதமர்


## எம்.ஏ.பட்டம் பெற்றவரான அவர் நான்கு தடவை குஜராத்தின் முதல்வர்

இந்தியத் தேர்தல் வரலாற்றையே நரேந்திர தாமோதர் தாஸ் மோடி மாற்றியிருக்கிறார். சரியாகச் சொல்லப் போனால், இந்தியத் தேர்தல் வரலாறு இதுவரை இரு பெரும் அலைகளைக் கண்டிருக்கிறது. ஒன்று, இந்திரா காந்தி மரணத்துக்குப் பின் ராஜீவ் காந்திக்கு ஆதரவாக எழுந்த பேரலை; அடுத்து, மன்மோகன் சிங் அரசின் பெரும் ஊழல் ஆட்சிக்குப்பின் மோடிக்கு ஆதரவாக இப்போது திரண்டிருக்கும் பேரலை.

முன்னது, இயல்பாக உருவானது. பின்னது, ஒரு தனி மனி தன் முன்னின்று உருவாக்கியது. தேர்தலுக்கு வெகுநாள் களுக்கு முன்னரே இந்தத் தேர்தலின் மையம் தன்னை நோக்கிச் சுழலுமாறு மாற்றி விட்டார் மோடி. ஒரே நேரத்தில் அவர் இரு போர்களை நடத்தினார்; ஒன்று, கட்சிக்குள்... இன்னொன்று, கட்சிக்கு வெளியே எங்கள் கட்சியில் மோடியையும் சேர்த்து ஏழெட்டு பிரதமர் வேட் பாளர்கள் இருக்கிறார்கள்; அதில் எட்டாவது இடத்தில் மோடி இருப்பார் என்று பா.ஜ.க. தலைவராக இருந்த நிதின் கட்காரி சொன்னது பல யுகங்களுக்கு முந்தி அல்ல. இரண்டாண்டுகளுக்குள்தான்.

கொஞ்சம் கொஞ்சமாக எல்லோரையும் பின் தள்ளி முன்னேறிய மோடி, ஒருகட்டத்தில் தன்னுடைய மிகப் பெரிய யுத்தத்தைத் தன் குருநாதரிடம் எதிர்கொண்டார். கட்சி தன் னைத் தேர்ந்தெடுப்பது அதன் முன் இருக்கும் வாய்ப்பு அல்ல; அதுதான் ஒரே வழி என்பதை உணர்த்திய மோடி, பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னும், அந்த போரை தொடர்ந்தார். காலங்காலமாகக் கட்சிக்குள் கோலோச்சிக்கொண்டிருந்த மூத்த தலைகளுக்கு அவர்களுடைய இடத்தைச் சுட்டிக் காட்டினார். கட்சிக்குத்தான் முதலிடம் - தனி நபருக்கு அல்ல என்று காலங்காலமாகச் சொல்லிக் கொண்டிருந்த கட்சியின் சகல தரப்பினரையும் மோடிதான் கட்சி என்று கிட்டத்தட்ட சொல்ல வைத்தார். இன்னொரு போர் ஏனைய கட்சிகளுடன் அவர் நடத்தியது.

இந்தத் தேர்தலில் மக்கள் முன் ஒரேயொரு கேள்விதான் இருந்தது: மோடி வேண்டுமா வேண் டாமா? அவரை எதிர்த்தவர்கள் ஆயிரம் விமர்சனங்களை வைத்திருந்தார்கள். ஒரே வார்த்தையில் அவர் எல்லாவற்றை யும் சல்லடையாக்கினார்: வளர்ச்சி! ஒருகட்டத்தில் அவ ரைப் பற்றி மட்டுமே எதிரிகள் பேச ஆரம்பித்தார்கள். அவர்களிடத்தில் பேச ஒன்றுமே இல்லாமல் போனது. பா.ஜ.க. பெற்றிருக்கும் மகத்தான வெற்றி உண் மையில் இந்தியாவின் அத்தனை கட்சி களுக்கும் பெரிய நெருக்கடி. இனி, அவர்கள் தங்களைப் புதுப்பித்துக் கொண்டே ஆக வேண்டும். சகல பலவீனங்களுடனும் தங் கள் வாக்கு வங்கியை நம்பி அவர்கள் களம் இறங்க முடியாது. இல்லாவிட்டால், குஜராத்தில் உருவாக்கியதுபோல் எதிர்க் கட்சி ஒன்றையே இல்லாமல் அவர் ஆக்கிவிடக்கூடும்!



### சவால்கள்

மோடியை எது ஜெயிக்கவைத்ததோ, அதே முழக்கம்தான் அவர் எதிர் கொள்ளும் பெரிய சவாலும் அவரின் வளர்ச்சியும். ஊழலுக்கு எதிரான மக்களின் எழுச்சியும் மோடியிடம் எதிர்பார்ப்பது நேர்மையான நிர்வாகத்தை. கட்சிக்குள் இப்போது இருக்கும் எடியூரப்பா போன்ற ஊழல் கறை படிந்தவர் கள் மீண்டும் விஸ்வரூபம் எடுத்தால் சமாளிப்பது இரண் டாவது சவால். கட்சியின் தனிப் பெரும் பான்மை எண்ணிக்கை பிளவுகளுக்கு அஞ்சாத அளவுக்கு அதிகம் இல்லை என்பதால், கட்சிக்குள் உள்ள அணிகள் மூன்றாவது சவால். விலைவாசி உயர்வு என்றுமே சவால்.

### பெரிய கேள்வி

பா.ஜ.க. முதல் முறையாகத் தனிப் பெரும் பான்மை பெற்றி ருக்கும் நிலையில், கட்சி யின் தனித்துவக் கொள்கை களான பொது சிவில் சட்டம், ராமர் கோயில் போன்ற சங் பரிவாரக் கோரிக்கைகள் முழு வீச்சில் எழும். ஆர்.எஸ்.எஸ். அமைப் பின் இந்த சேவகர் அந்த அமைப்பை எப்படிக் கையாளப் போகிறார் என்பதுதான் பெரிய கேள்வி.

### இவை நடக்கலாம்

நதிநீர் இணைப்புத் திட்டம், புல்லட் ரயில் திட்டம், வீடுகள் தோறும் மாற்று எரிசக்தி உற் பத்திக்கு வித்திடும் திட்டம், பயங்கரவாதத் தடுப்புக்குத் தீவிர நடவடிக்கைகள்.

### இவையும் நடக்கலாம்

பொது சிவில் திட்டம், ராமர் கோயில் திட்டம், அரசியல் சாசனத்தில் காஷ்மீருக்கு அளிக் கப்பட்டுள்ள சிறப்பு அந்தஸ்து நீக்கம், சேது சமுத்திர திட்டத் துக்கு நிரந்தர மூடுவிழா.

### இது நடக்குமா?

வெளிநாடுகளில் பதுக்கப்பட்டிருக்கும் கறுப்புப் பணத்தை மீட்டெடுத்தல்.

### அலைவீச்சு

அசாம் முதல் ஆந்திரம் வரை மோடி அதிர்வு உணரப்பட்டது. சொந்த மண் குஜராத் ஒட்டு மொத்தமாக 26 இடங்களையும் மண்ணின் மைந்தனுக்கு வாரி வழங்கியது. மோடியின் வியூகப்படி கட்சி குவித்த மொத்த தொகுதிகளில் நான்கில் ஒரு பங்கை-71 தொகுதிகளை உத்தரப் பிரதேசம் தந்தது. டெல்லி, ராஜஸ்தான், மகாராஷ் டிரம், பீஹாரில் கிடைத்த இடங்கள் போட்ட கணக்கைக் காட்டிலும் அதிகம்.

### எதிர்ப் புயல்

தமிழகம், கேரளம், மேற்கு வங்கம் இந்த மூன்று மாநிலங் களுக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. மூன்றுமே இயல்பில் மதச்சார் பின்மையைத் தூக்கிப் பிடிக்கும் மாநிலங்கள். மூன்றி லுமே ஆளும் ஆட்சியாளர்கள் மீது பெரிய அதிருப்தி இல்லை. இத்தனை பெரிய அலைக்கு மத்தியிலும் தமிழகத்தில் ஜெய லலிதா நல்லாட்சி தருவதாக மக்கள் நம்புகிறார்கள்.



### நண்பர்கள்

பா.ஜ.க. தனிப் பெரும் பான்மை பெற்றிருக்கும் சூழலில், வெளியே நிற்கும் கட்சிகளில் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள் தவிர, பலவும் எந்த நேரத்திலும் மோடி பக்கம் சாயலாம். ஒருவேளை பெரும்பான்மை எண்ணிக் கையில் பிளவு ஏற்பட்டால் ஜெயலலி தாவின் 37 இடங்கள் ஆபத்பாந்தவனாக உதவ லாம். கட்சியிலும் ஆட்சியிலும் ராஜ்நாத் சிங், அமித் ஷா இரு கரங்களாக நிற்பார்கள். ஆர். எஸ்.எஸ். தலைவர் மோகன் பாக்வத்தின் ஆசீர்வாதம் எப் போதும் உண்டு.

### எதிரிகள்

பா.ஜ.கவுக்கு வெளியே உள்ள மோடியின் எதிரி கள் இப்போது பலவீனப்பட்டு விட்டார்கள். உண்மையில் மோடியின் எதிரிகள் கட்சிக்குள் தான் இருக் கிறார்கள். எந்த நேரத்திலும் அத்வானி, ஜோஷி உள்ளிட்ட மூத்த தலைகள் கை கோக்க லாம்.

### வட்நகரில் இருந்து டெல்லிக்கு..

மாநிலம் (அப்போதைய பம்பாய் மாகாணம்) வட் நகரில் தாமோதர்தாஸ் முல்சந்த் மோடி- ஹீராபென் தம்பதியரின் மகனாக 1950 செப்ரெம்பர் 17 இல் நரேந்திர தாமோதர்தாஸ் மோடி பிறந்தார்.

சிறுவயதில் புத்தர், விவேகானந்தரின் வாழ்க்கை வரலாற்றால் பெரிதும் ஈர்க் கப்பட்ட மோடி வீட்டைவிட்டு வெளி யேறி வட இந்தியாவுக்குச் சென்றார். அங்கு சாதுக்களைச் சந்தித்து அவர் களோடு பல மாதங்கள் தங்கியிருந்தார். 1960 இல் மீண்டும் அவர் வீட்டுக்குத் திரும்பினார்.

வட் நகர் ரயில் நிலையத்தில் மோடியின் தந்தை ரீ க்கடை நடத்தி வந்தார். அந்தக் கடை யில் தந்தைக்கு உதவியாக இருந்த மோடி ரயில் நிலைய பிளாட்பாரங்களி தேநீர் விற்றார். பின்னர் அகமதாபாத் பஸ் நிலையத்தில் தனது சகோதரர்களின் தேநீர் கடையிலும் அவர் வேலை செய் தார்.

குஜராத் பாரம்பரிய வழக்கத்தின்படி சிறு வயதிலேயே மோடிக்கும் யசோதா பென் னுக்கும் திருமணம் நடை பெற்றது. ஆனால், கொஞ்ச காலத்திலேயே அவர்கள் பிரிந்து விட்டனர்.

### அமெரிக்காவில் பயின்ற மோடி

ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தில் சிறு வயது முதலே அதிக ஈடு பாடு கொண்ட மோடி அந்த இயக்கத்தின் முழு நேர ஊழி யர் ஆனார். பிற்காலத்தில் அரசியலில் நுழைந்த மோடி படிப்படியாக முன்னேறினார். 1987-இல் அகமதாபாத் நகர பா.ஜ.க. செயலாளராக நியமிக்கப் பட்டார். தன்னுடைய பணி களால், 1995 இல் கட்சியின் தேசிய செயலரானார். இதற்கிடையில் டெல்லி பல் கலைக்கழகத்தில் அரசியல் அறிவியல் பட்டப்படிப்பை முடித்தார். பின்னர் குஜராத் பல்கலைக் கழகத்தில் அதே பாடப்பிரிவில் எம்.ஏ. பட்டம் பெற்றார். 1990 இல் அமெ ரிக்கா சென்ற அவர் அங்கு மக்கள் தொடர்பு, தனிநபர் ஆளுமைத் திறன் குறித்த மூன்று மாத பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயின்றார்.

### நான்கு முறை முதல்வர்

குஜராத் பூகம்பத்தின்போது அப்போதைய முதல்வராக இருந்த கேசுபாய் பட்டேல் பதவி விலக நேரிட்டது. அதைத் தொடர்ந்து 2001 ஒக்ரோபர் 7 ஆம் திகதி முதல்வர் பொறுப்பை மோடி ஏற்றார். அன்று முதல் இன்று வரை தொடர்ந்து நான் காவது முறையாக குஜராத் முதல்வராக அவர் பதவி வகித்து வருகிறார். கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து 2002ஆம் ஆண்டில் குஜராத்தில், பெரும் கலவரம் வெடித்தது. இந்தச் சம்பவம் உள்நாடு மற்றும் சர்வதேச அளவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

அதன் பிறகு குஜராத்தில் 2007 இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல், 2009 இல் நடைபெற்ற மக்களவைத் தேர்தல்களில் பா.ஜ.க. அதிக இடங்களைக் கைப்பற்றி சாதனை படைத்தது. 2013 செப்ரெம்பரில் கட்சியின் பிரதமர் வேட்பாளராக மோடி அறி விக்கப்பட்டார். இப்போது வரலாற்று வெற்றி யுடன் டெல் லிக்குச் செல்கிறார்.

நன்றி: இந்து

# சீனாவிலிருந்து இறக்குமதியான ரயில் எஞ்சின்களில் கோளாறு

## ரயில் சங்கங்கள் தகவல்

கொழும்பு,மே 19

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ரயில் பெட்டிகள் அடங்கிய எஞ்சின்களின் நிறுத்த அமைப்புக்களில் பிரச்சினைகள் நிலவுகின்றன என்று ரயில் சங்கங்கள் தகவல் தெரிவிக்கின்றன. தரத்தில் குறைந்த நிறுத்த அமைப்புக்கள் ரயில் எஞ்சின்களில் பொருத்தப்பட்டுள்ளதால் ரயில் இடையிலேயே நின்றுவிடுகின்றன.

இந்தப் பிரச்சினைகளைத் தவிர்க்க வேண்டுமாயின் எஞ்சின்களின் நிறுத்த அமைப்புக்கள் புதுப்பிக்கப்படல் வேண்டும். அதற்கு அதிகளவு செலவு செய்து புதிய பாகங்கள் பொருத்தப்பட வேண்டும். அதனால், ரயில் திணைக்களத்துக்கு நட்டம் ஏற்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் டலஸ் அழகப்பெரும, போக்குவரத்து அமைச்சராக இருந்த காலத்தில் சீனாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரயில் பெட்டிகள் 100 அடங்கிய எஞ்சின்களில் கோளாறுகள் காணப்படுகின்றன என்று ரயில் தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட எஞ்சின்கள் பிரதான மற்றும் கரையோர ரயில் சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அவற்றில், மணித்தியாலத் துக்கு சுமார் 40 அல்லது 50 கிலோமீற்றர் வேகத்தில் கூட பயணிக்க வேண்டாம் என்று ரயில் அதிகாரிகளால் சாரதிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வாக்காளர் இடாப்பின் திருத்தங்கள் ஆரம்பம்

கொழும்பு,மே 19

2014ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பிரதி தேர்தல் ஆணையாளர் எம்.எம். முஹம்மத் தெரிவித்தார்.

வாக்காளர் இடாப்பு திருத்தும் பணிகள் சகல மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர்களின் கண்காணிப்பின் கீழ் இடம்பெற்று வருகின்றன என்று அவர் கூறினார்.

வாக்காளர் இடாப்பு திருத்தப்படுவதற்கு முன்னர் நாடு முழுவதும் உள்ள சுமார் 14 ஆயிரம் கிராம உத்தியோகத்தர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டன. அதற்கமைய சகல கிராம உத்தியோகத்தர்களும் தமது பிரதேசத்தில் உள்ள சகல வீடுகளுக்கும் சென்று வாக்காளர் இடாப்பு திருத்தும் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர் என்று அவர் குறிப்பிட்டார்.

வாக்காளர் இடாப்பின் மாதிரி விண்ணப்பப் படிவங்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் சகல வீடுகளுக்கும் விநியோகிக்குமாறு கிராம உத்தியோகத்தர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

> வாக்காளர் இடாப்பின் மாதிரி விண்ணப்பப் படிவங்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் சகல வீடுகளுக்கும் விநியோகிக்குமாறு கிராம உத்தியோகத்தர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு பின்னர் வாக்காளர் இடாப்பின் இரண்டாம் கட்ட திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன என்று அவர் மேலும் கூறினார். (ச)

## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்பராணி பாலசுந்தரம்



கொடிகாமம் கச்சாய் வீதியைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி வடக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பராணி (ராணி) பாலசுந்தரம் அவர்கள் நேற்று (18.05.2014) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சதாசிவம்-நல்லம்மா தம்பதியரின் மகளும், விஜயடேஸ்வரன் (பிறேம் அச்சகம், யாழ்ப்பாணம்), அருள்ராஜ் (ஆசிரியர், யா/கீரிமலை நகுலேஸ்வரா ம.வி) ஆகியோரின் தாயாரும், திருச்செல்வம், காலஞ்சென்ற அருட்செல்வம் மற்றும் தவச்செல்வம், விஜயராணி, காலஞ்சென்றவர்களான குணச்செல்வம்,பஞ்சலிங்கம் மற்றும் அகிலேஸ்வரி, பத்மினிதேவி, கௌரிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நகுலாம்பிகை, யமுனா (சமுர்த்தி முகாமையாளர், வலி தென்மேற்கு பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுவேதன், சதுர்த்திகன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2014) காலை 9.00 மணிக்கு டச்சு றோட் அளவெட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அளவெட்டி மேற்கு, தம்மளை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு றோட், அளவெட்டி.
077 774 1567

தகவல்: விஜயன், அருள்ராஜ். } மகன்மார்

(48232) (7.6.3)

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

புதிதாக அங்கத்தவராக் இணைய விரும்பும் பழைய மாணவர்கள், பிரேரணைகளைச் சமர்ப்பிக்க விரும்புவோர் செயலாளருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (க)

## பெண்ணுக்கு மறியல்

திருகோணமலை,மே19

திருகோணமலை, கிண்ணியா குறிஞ்சாக் கேணி பகுதியில் சுமார் ஆறுலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை மோசடி செய்த பெண்ணொருவர் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

சந்தேகநபரான பெண் திருகோணமலை பதில் நீதிவான் செந்தில்நாதன் முன்னிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை முன்னிலைப் படுத்தப் பட்டபோதே, அவர் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

கிண்ணியா பொலிஸாருக்குக் கிடைத்த முறைப் பாட்டுக்கு அமைய சந்தேகநபர் கைது செய்யப் பட்டுள்ளார். இந்நபர் நான்கு பேரிடம் நகை மோசடி செய்துள்ளார் என்று ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கிண்ணியாப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் ஆசிரியராக, உப அதிபராக 14 வருடங்கள் நிறைவான சேவையாற்றிய

### திருமதி தனலட்சுமி ஸ்ரீதரன்

அவர்கள் காலமானதையிட்டு மனம் வருந்துகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(48233) (7.6.3)

பாடசாலைச் சமூகம் யா/நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்

## மரண அறிவித்தல்

### கிருஸ்ணன் ஆனந்தகுமார் (தங்கப் பழம்)

(உரிமையாளர்- மோட்டார் ஊர்தி திருத்தகம் கோப்பாய், உரும்பிராய்)



சுழிபுரம் மத்தியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கு, செல்வபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணன் ஆனந்தகுமார் 17.05.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணன் மற்றும் பூபதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் தங்கரத்தினம் தம்பதியரின் மருமகனும், கோகிலாவின் அன்புக் கணவரும் துவாரகா (மாணவி, யாழ். இந்து மகளிர் கல்லூரி ) அவர்களின் பாசமிகு தந்தையும், செல்வகுமார், கணேசகுமார், சிவகுமார், கமலகுமாரி, வசந்தகுமாரி ஆகியோரின் சகோதரனும், அருள்தீசன், கஜரூபி, அனித்தா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.05.2014) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் தெற்கு,
செல்வபுரம், உரும்பிராய்.
077 678 3008 (ரமேஸ்) (482349) (45.6.3)

தகவல்: குடும்பத்தினர்.
077 400 2759 (மனைவி)


29 ஆண்டு கால தனித்துவமிக்க ஒரு பயிற்சி நிலையம்
1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



யாழ். கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)





மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடிசிராக்குதலும்)



- முக அழகுக் கலை (Facials)
- Pedicure,Manicure (கைகள், கால்கள் விரல்கள்,நகங்கள் அழகு படுத்துதல்)
- Nail art
- மெஹந்தி போடுதல்
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம் வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 23-05-2014
வெள்ளி காலை 9.30 மணி
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 25-05-2014
ஞாயிறு காலை 9.30 மணி
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

- (B)பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள் கிழமை நாட்களில் மட்டும் நடைபெறும்.

-இயக்குநர்-


## நீங்கா நினைவலைகள்

முதலாம் ஆண்டு



36ஆம் ஆண்டு





திருமதி இராசம்மா கணேசு

ஆறுமுகம் கணேசு

நெஞ்சினிக்க நாவினிக்க நித்தம் செவியினிக்க நினைவில் நிழலாடும் ஆறுமுகம் கணேசு திருமதி இராசம்மா- கணேசு இவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மல்லாகம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 18 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகை, உடைமைகள் களவு

வலி.வடக்கு, மே 19

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஒரு வார காலத்தில் சுமார் 18 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் உடைமைகள் திருட்டுப் போயுள்ளதாக யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விமலசேனா தெரிவித்தார். வெள்ளிக்கிழமையாழ்ப்பாணம்பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் உள்ள 9 பொலிஸ் பிரிவுகளிலும் சுமார் 16 லட்சத்து 41 ஆயிரத்து 880 ரூபா பெறுமதியான உடை மைகள், தங்க நகைகள் திருடப்பட்டுள்ளதாகவும் காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் முப்பத்தையாயிரம் ரூபா பெறுமதியான உடை மைகள் களவாடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் உள்ள யாழ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வண்ணார்பண்ணையில் உள்ள வீடொன்றில் இருந்து 10 லட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளும், அரியாலைப் பகுதியில் எட்டா யிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் களவும் கொக்குவில் மேற்கில் கடை உடைத்து 58 ஆயிரத்து 600 ரூபா பெறும தியான உடைமைகளும் யாழ்ப்பாணத்தில் தரித்து நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த 70 ஆயிரம், 80ஆயிரம்ரூபாபெறுமதியான இரண்டுமோட்டார் சைக்கிள்களும், மானிப்பாய் பொலிஸ் பிரிவில் நாலரை லட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி பகல் வேளை யில் வீட்டில் இருந்து திருட்டுப் போயுள்ளது.

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவில் வீடுடைத்து 22 ஆயி ரம் ரூபா பெறுமதியான உடைமைகள் களவாடப்பட்டுள்ளதுடன் வேலணைப் பகு தியில் 13,280 ரூபா பெறுமதி யான உடைமைகள் வீட்டில் இருந்து திருடப்பட்டுள்ளன. காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட் பட்ட அச்சுவேலி பொலிஸ் பகுதியில் 24 ஆயிரம் ரூபா பெறுமதியான புகைப்படக் கருவி வீட்டில் இருந்து களவாடப்பட்டுள்ளது. 11 ஆயிரம் ரூபா பெறுமதி யான சைக் கிள் களவும் இடம் பெற்றுள்ள தாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-86)

---

## 71 ஆவது பிறந்த தினமும் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 * 05 * 1943 | 29 * 05 * 2013 |

**அமரர் தவரத்தினம் இராணி**

**திதி: 19.05.2014**

கோப்பாய் மத்தி,
கோப்பாய். (48232) குடும்பத்தினர்

---

## மரண அறிவித்தல்

## கந்தையா பத்மநாதன் (குரு)

தம்பு வீதி, நுணாவில் மத்தி, நுணாவிலை வசிப்பிடமாகக் கொண்ட கந்தையா பத்மநாதன் (குரு) 16.05.2014 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையா-பாக்கியம் தம்பதியினரின் மகனும், ஆறுமுகம்-தங்கமுத்து தம்பதியினரின் மருமகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், லசிதா (ராசாத்தி), ஜெயந்தா (பிரான்ஸ்), கவிதா, மயூரன் (கண்ணன்-சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாசீலன், காலஞ்சென்ற தர்மகுலசிங்கம் மற்றும் சந்திரசேகரம் (பிரான்ஸ்) ஆகியோரின் மாம னாரும், துவாரகா, கார்த்திகா, பகீரதன், டிலக்ஷன், வைஸ் ணவன், பேரலாதன், பேரனுஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை (16.05.2014) வெள்ளிக்கிழமை பி.ப. 5 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தம்பு வீதி, நுணாவில் மத்தி,*
*நுணாவில்.* (48246)

தகவல்:
**குடும்பத்தினர்.**

---

## 90ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
06.12.1987

மறைவு
17.02.2014



## திருமதி சிந்துஜா ஜெயரூபன்

அழுதும் ஆவதென்ன
அக்கினிதன் வாய்திறந்து
போனவுடல் ஈவதில்லை
பிறப் பிறப்பு மாற்றிவிடும்

ஞானமுள்ளோர் யாருமில்லை
நல்லவர்கள் சாவதில்லை
அறிவார் துயர் மறந்து
ஆற்றிடுவார் காலமெனும்

கடந்த 17.022014 அன்று சிவபதமடைந்த திருமதி சிந்துஜா ஜெயரூபன் அவர்களின் 90ம் நாள் நினைவாக இன்று (19.05.2014) திங்கட் கிழமை துர்க்கா மணிமண்டபத்தில் (நல்லூர்) மதிய போசன நிகழ்வு நடைபெற இருப்பதால் அனைவரை யும் கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*துர்க்கா மணிமண்டபம்,*
*நல்லூர்.* (48236)

தகவல்:
**த.ஜெயரூபன் (கணவன்)**
*மண்கும்பான்.*

---

# தென்மராட்சி வலயமட்ட மெய்வன்மைப் போட்டி முடிவுகள்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட மெய்வன்மைப் போட்டி கள் அண்மையில் வரணி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக ஒலிம்பிக் பதக்கம் பெற்ற நா.எதிர்வீரசிங்கம் கலந்து கொண்டார். போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வகை ரீதியான பாடசாலைகளும், சிறந்த தடகள வீரர்களாக தெரிவு செய்யப் பட்ட மாணவர்களின் விவரம் வருமாறு:-

**வகை 1ஏபி பாடசாலைகள்**

சாவகச்சேரி இந்துக் கல்லூரி , வரணி மத்திய கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

**வகை Iசி:** உசன் இராமநாதன் ம.வி., நாவற்குழி ம.வி., மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவ ரோதய ம.வி.

**வகைII:** மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம், கைதடி நவீல்ட் பாடசாலை, கச்சாய் அ.த.க. பாடசாலை.

சிறந்த வலய மட்ட தடகள வீர வீராங்கனைகள்

**ஆண்கள்**

13 வயதுப் பிரிவு
அ.ஸ்.ஜெனிசன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி

15 வயதுப் பிரிவு
பா.நிதுஜன் - மட்டுவில் சந்திர மௌலீச வித்தி.
மு.லிங்கயன் - சாவகச்சேரி இந்துக் கல் லூரி.

17 வயதுப் பிரிவு
சு.அர்ஜின்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
சி.கஜீபன்-சாவ கச்சேரி இந்துக் கல்லூரி.

19 வயதுப் பிரிவு
மு.முரளிதரன்-கைதடி விக்னேஸ்வரா வித்தி.,
செ.மிறோ ஜன்- வரணி மத்திய கல்லூரி.

21 வ்யதுப் பிரிவு
ச.கௌதன்-மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.
அ.ஸ். றொக்ஸயன்-சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

**பெண்கள்**

13 வயதுப் பிரிவு
யே.ஜெயசாளினி-நாவற்குழி ம.வி.,
ஜோ.சி. ஜெயசீலி - நாவற்குழி ம.வி.


15 வயதுப் பிரிவு
வி.றெஜினா-கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல் லூரி, ர.தவரஞ்சினி-உசன் இராமநாதன் ம.வி.

17 வயதுப் பிரிவு
சி.கஜிதா-கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, கெ.சாதனா-மட்டுவில் சந்திரபுரஸ் கந்தவரோதய ம.வி.

19 வயதுப் பிரிவு
சி.கஸ்தூரி-சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
பு.கோபிகா- மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

21 வயதுப் பிரிவு
இ.அகல்யா- சாவகச்சேரி இந்துக் கல்லூரி. (வ-9)

---




## வெளிச்சத்துக்கு வாருங்கள்

இரண்டு பக்கவாட்டிலும் கரியருடனும் பாருடனும் வரிந்து கட்டப்பட்ட தும்புத்தடிக்கட்டுக்களுடன் கடை ஒன்றின் முன்பாக நிற்கிறது அந்த சைக்கிள். "ராசா வரியப் பிறப்புக் கெண்டு வாங்கின தும்புத்தடிக்கட்டு அப்பிடியே கிடக்கு. இப்ப இஞ்சையும் வீடுகளுக்கு மாபிள் போடுறதாலை எல்லாரும் மொப்பண்ணுறதிலைதான் நிக்கினம். தும்புத்தடிப் பக்கம் நாயும் திரும்பிப்பாக்காதாம்". கடைக் காரரது சலிப்பிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது. வெளிநாட்டு நாகரிகமும் காசும் ஒரு சேர இப்போது எங்கள் வீடுகள், கோவில்கள் எல்லாம் மாபிள் தரைதான். சிமெந்து, சிவப்புக்காவி கொண்டு பூசி மினுக்கப்பட்ட தரைகள் உடைக்கப்பட்டு லட்சக்கணக்கான பணம் மாபிளுக்காக அள்ளி இறைக்கப்படுகிறது.

மன்னார் மாவட்டத்திலுள்ள மலைக்காடு பகுதியில் எம்மவர்களின் வாழிடங்களை செய்தித்தாள்கள் படம் போட்டுக்காட்டியிருந்தன. பத்துப்பதினைந்து காட்டுத்தடிகளின் உருவமைப்பில் தறப்பாளால் போடப்பட்டு, உரப்பைகளால் சுற்றி மறைப்புக்கள். நாகரிக வீடுகளின் ஹோல், பெட்றூம், ஒபிஸ் றூம், ஸ்ரோர்றூம், கிச்சின் இத்தியாதியும் இந்த உரப்பைக் கூட்டுக்குள்தான். இரவில் மின்தடைப்பட்டால் சார்ஜர் லைற், ரோச்லைற் தேடும் எமக்கும் பொழுது சாய்ந்ததும் பாம்பு, பூச்சி என்று ஏங்கி ஏங்கித் தூங்கி எழும் அவலத்தில் அவர்களுக்கும் ஒரே கடவுள்தான்.

சில ஆலயங்கள் இப்போ பொழுதுபோக்கு மையங்களாகிக் கொண்டிருக்கின்றன. தங்கள் தங்கள் திருவிழாக்களுக்கு வழிபட வரு வோரை விட நிகழ்ச்சிகளைப் பார்க்க வரும் சனக் கூட்டத்தில் தான் போட்டி போட்டு ஆர்வம் காட்டுகிறார்கள். உள்ளூர் கலை நிகழ்ச்சிகளைத் தாண்டி வெளியூர், வெளிநாட்டு கலைஞர்கள் என்று திருவிழாக்கள்களை கட்டுகின்றன. தலைவலியும் தனக்கு வந்தால்தான் தெரியும் என்பதை உணராதவர்களின் அகந்தை இருள் மண்டிக்கிடக் கும் மனக்காடுகளில் வெளிச்சம் வரவேண்டும். மலைக் காடுகள் போல் இன்னும் எத்தனை எத்தனை என்பதை இவர்களும் கண்திறந்து காண வேண் டும்.

*செல்வவேலாயுதம்.*

---


**பணிப்பெண் தேவை**

சாவகச்சேரியில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை

தொடர்பு: 077 4983185, 021 227 0793

---

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கணபதிப்பிள்ளை மார்க்கண்டு ஜோசப்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25.01.1925 | 19.05.2006 |

ஐயா என்று நாம் அழைத்து
ஆண்டுகள் எட்டாகியதே
எமைச்சூழ ஆயிரம், ஆயிரம் உறவுகள்
அவையனைத்தும் உங்களுக்கீடாகுமா
பாசத்துடனும் பரிவுடனும் எமைவளர்த்தவரே
எம் உயிர் உள்ளவரை
பாரினில் உங்கள் நினைவோடு
நாம் வாழ்வோம்

உங்கள் ஆத்ம சாந்திக்காய் அனுதினமும் இறைஞ்சுகின்றோம் எல்லாம் வல்ல இறைவனை.

இல. 25A, மூளாய் லேன்,
சுண்டுக்குளி தெற்கு,
யாழ்ப்பாணம். (48239)

பிரிவால் துயருற்றிருக்கும்
**குடும்பத்தினர்**

# மோடியின் அரசுடன் இலங்கை இணைந்து செயற்பட வேண்டும்

## ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது

கொழும்பு, மே 19
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தியாவின் நரேந்திர மோடி தலைமையிலான புதிய அரசுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளதுடன், சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளையும் அரசு நிறைவேற்ற வேண்டும் என்றும் அந்த கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மஹிந்த ராஜபக்ஷ அரசு, இந்தியாவின் காங்கிரஸ் கட்சியின் தலைமையிலான அரசு மேற்கொண்ட குழப்பமான செயற்பாடுகளை முன்னெடுக்காது மோடியுடன் புதிதாக முனைப்புகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்தியாவில் நிலையான அரசு இருப்பது இலங்கைக்கு நல்லது. தமிழக அரசியல் கட்சிகளின் தலையீடுகள் இன்றி இந்திய அரசால் தீர்மானங்களை எடுக்க முடியும்.

புதுடெல்லி தற்போது தனது வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படையில் இலங்கையுடனான செயற்பாடுகளை முன்னெடுக்கும்.

கடந்த காலங்களில் மாநில கட்சிகள் இந்திய அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்து வந்ததை நாம் காணக் கூடியதாக இருந்தது.

இந்தியாவின் தேர்தல் முடிவுகள் மோடிக்கு பெரும் வெற்றியைகொடுத்துள்ளன. இலங்கை இந்தியர்களுடன் மேலும் ஆக்கபூர்வமாக பணி யாற்ற முடியும் என ஐக்கிய தேசியக் கட்சி உணர்கிறது"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## இலங்கையுடனான வர்த்தகம் நியூஸி. எதிர்க்கட்சி எதிர்ப்பு

மெல்போர்ன், மே 19
இலங்கையுடனான புதிய வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பது தவறான செயல் என்று நியூஸிலாந்தின் எதிர்க்கட்சி அந்த நாட்டின் அரசை வலியுறுத்தியுள்ளது.

நியூஸிலாந்தின் பசுமை கட்சியின் மனித உரிமைகள் விவகார பேச்சாளர் ஜேன்லோகி இதுகுறித்துக் கூறும் போது,

"இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இன்னும் உரிய பதில் வழங்கப்படவில்லை. இந்த நிலையில் இலங்கைக்கு உதவி செய்வது முறையில்லை" என்று தெரிவித்துள்ளார். (ற)

## அரசியல் வேண்டாம் என்கிறார் விஜிதமுனி

கொழும்பு, மே 19
அரசியலில் இருந்து விலகப் போகின்றேன் என்று தெரிவித்துள்ளார் வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சர் விஜிதமுனி சொய்சா.

மொனராகலை மாளிகாவில, விகாரையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு உரையாற்றும்போது எதிர்வரும் தேர்தலுடன் தான் அரசியல் இருந்து ஒதுங்கி கொள்ள விரும்புகின்றேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேற்படி விகாரைக்கு இரண்டு யானை தந்தங்களையும் அன்பளிப்புச் செய்தார். (ற)

### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை

**திருமதி தனலக்ஸ்மி ஸ்ரீதரன்**



சிவபதமடைந்தமையையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம், யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை
(48244)

### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியையான செல்வி
த. ஜெயலக்சுமி அவர்களின் அன்புச் சகோதரி
**தனலக்சுமி ஸ்ரீதரன்**
அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்**
**யா/ கீரிமலை. நகுலேஸ்வரா மகா வித்தியாலயம்.**
(14017)

### மரண அறிவித்தல்



**பரமேஸ்வரி நடராசா**

புங்குடுதீவு 11 ம் வட்டாரம் ஆலடியை பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி ஒட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி நடராசா நேற்று (18.05.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல , 189,மானிப்பாய் வீதி,ஒட்டுமடம் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021 4925189, 0779041507
தகவல் : குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்

**திருமதி பரமேஸ்வரி சுப்பிரமணியம்**



அத்தாய், அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் பர மேஸ்வரி அவர்கள் 16.05. 2014 வெள்ளிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை சுப்பிரமணியம் (திறைசேரி உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும். காலஞ்சென்றவர்களான சிதம்பரம் - பாக் கியம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, சிவகாமி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற தங்கவேலாயுதம் மற்றும் தவமணி, செல்வராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இராதாகுமார் (சுவிஸ்), சுபந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், உகந்தஜோதி (சுவிஸ்), குலராஜசிங்கம் (கனடா), ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா,நாகம்மா, தங்கவடிவேலு மற்றும் கைலாசபதி, திலகவதி ஆகியோரின் மைத்துனியும், வர்சினி, அப்சரா (சுவிஸ்) அனுஷன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 19.05.2014 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 10.00மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

அத்தாய், அல்வாய்
(C/14016)
தகவல்:- குடும்பத்தினர்.

## முஸ்லிம் காங்கிரஸின் மீது அரசுக்கு நம்பிக்கையில்லை

### ரவூப் ஹக்கீம் கூறுகின்றார்

அரசுக்குத் தற்போது முஸ்லிம் காங்கிரஸ்சின் மீது நம்பிக்கை அற்றுப்போயுள்ளது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மிகவும் முக்கியமான தீர்மானத்தை எடுப்பதற்கான காலம் வந் துள்ளது - இவ்வாறு தெரிவித் துள்ளார் அந்தக் கட்சியின் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம். ஏறாவூரில் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்த அரசுடன் இணைய நேர்ந்த, கட்டத்தில் இருந்து தொடர்ந்து சவால்களை சந் தித்து வருகின்றோம். இன்று இருக்கிற கட்டத்தில் அரசுக்கு முஸ்லிம் காங்கிரஸ் மீது நம் பிக்கை இல்லை. ஒட்டுமொத்த முஸ்லிம் மக்க ளுக்கும் முஸ்லிம் காங்கிர ஸின் அரசியல் சம்பந்தமான ஓர் தடுமாற்றம். இந்த நிலை யில் நாங்கள் நிதானம் இழந்து பக்குவம் இழந்து அவசரப் படுவது என்பது நல்ல முடி வாக அமையாது. எனவே தான் எல்லா விடயங்களை யும் ஆலோசித்துப் பார்க்க வேண்டியுள்ளது.

ஆனால் முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் இந்த அமைச்சுப் பதவிகளை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட அரசியல் அல்ல.

இருந்தாலும் இன்று ஒரு பார்வை உருவாகியுள்ளது. ஏனென்றால் முஸ்லிம் காங்கிரஸின் தலைமை விரட்டினாலும் போக மாட்டேன் என்ற காரணத்தினால் அமைச்சுப் பதவியில் தொங்கியிருப்பது தான் முஸ்லிம் காங்கிரஸின் ஒரே இலக்கு என்பதைப் போன்ற ஒரு பார்வையை உருவாக்கியிருக்கிறார்கள்.

இன்று அமைச்சர்கள் மலிந்து போயிருக்கிற ஒரு காலம். கல் லெறிந்தால் அமைச்சர் தலையிலே விழுகின்ற ஒரு நிலை யிலே இந்த அமைச்சுப் பதவி யைப் பற்றி பேசுவதற்கு பெரிதாக ஒன்றும் இல்லை. மிக உறுதியான ஒரு முடிவிற்கு முஸ்லிம் காங்கிரஸ் வந்தாக வேண்டும் என்ற கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கின் றோம். அதிலே எந்த சந்தேகமும் கிடையாது"- என்று அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## லண்டன் பயணமாகிறார் அநுரகுமார திஸாநாயக்க

கொழும்பு, மே 19
ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க எதிர்வரும் 24ஆம் திகதி லண்டன் பயணமாகின்றார். அங்கு அவர் "எமது நோக்கம்" என்ற தலைப்பின் கீழ் பல்வேறு கூட்டங்களில் பங்கேற்கவுள்ளார்.

அவரது முதலாவது உரை 24 ஆம் திகதியன்று வெம்பிலி யில் அமைந்துள்ள சென் ஜோன்ஸ் சனசமூக நிலையத் தில் இடம்பெறவுள்ளது. அத னையடுத்து அடுத்துவரும் திங்கட்கிழமையன்று லிவர் பூலில் உள்ள பல்கலைக்கழகத்தில் கூட்டம் ஒன்று இடம் பெறவுள்ளது. அதன்பின்னர் அநுரகுமார திஸாநாயக்க அயர்லாந்துக்கு செல்லவுள்ளார்.

### தவறிவிட்டது

ஆசைப்பிள்ளை யூட் டினேஸ் கொடுதோர் என்பவரின் தேசிய அடையாள அட்டை (902680292V) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும் பாஷையூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 072 314 6147

### மரண அறிவித்தல்

**ஆழ்வாப்பிள்ளை சுப்பிரமணியம்**




நாவலடி, வல்வெட்டித் துறையைப் பிறப்பிட மாகவும், ஊரிக்காடு, வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வாப்பிள்ளை சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற அதிபர் யா/ சிவகுரு வித்தியா சாலை வல்வெட்டித் துறை) நேற்று (18.05. 2014) ஞாயிற்றுக்கி ழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வாப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் மூத்த மகனும், வள்ளியம்மா, தர்மலிங்கம் மற்றும் காலஞ்சென்றார்களான பத்மேஸ்வரி, வேலுப்பிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் இராசகுமார் (சுவிஸ்) நிர்மலா, ஸ்ரீ ரஞ்சினி (நோர்வே) மோகன் (கனடா) பிரபாகரன் ( கனடா) ராஜினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருப்பதி (சுவிஸ்) உதயரூபன் (அதிபர் யா/ கெருடாவில் இ.த.க. பாட சாலை), ஜெயரூபன் (நோர்வே) சிவதர்சினி (கனடா) புஸ்பரஞ்சினி (கனடா) திருச்செந்தூரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கௌசிகன் (சுவிஸ்) தர்ணிகா (சுவிஸ்) லதுஷ்ஷோபன்(யா/ஹாட்லிக் கல்லூரி), நம்ரிதா (யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) காருண்யா (நோர்வே) காவ்யா (நோர்வே) கிஷான் (கனடா) மோலிஷன் (கனடா) கேசிகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தொ.பே. 021 226 5180
077 8010 212
தகவல் : குடும்பத்தினர்.

### கண்ணீர் அஞ்சலி



சாரதா ஆச்சிரம
ஸ்தாபகர்
**சுவாமி**
**சித்ரூபானந்தா**

'மக்கள் சேவையே மகேசன்' சேவை என்று நலிவுற்றோர், ஆதரவற்றோர்களுக்கு அறப்பணி புரிந்த தர்மசீலன் அவர்களின் மறைவுச் செய்திகேட்டு துயரடைவதுடன், அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக உறுப்பினர்கள், பணியாளர்கள்
சிறுவர், முதியோர்கள்
ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமம்
வதிரி, கரவெட்டி.
(C/14018)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### எவர்

கின்றது. பொய்யான பிரசாரங்கள் ஊடாக தவறாக வழிநடத்தக் கூடாது.

இது போர் வெற்றி விழா அல்ல. சமாதானத்தை வெற்றி கொண்ட நாள். பயங்கரவாதிகளினால் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த தமிழர்களை படையினர் மீட்டுள்ளதுடன், இன்றைக்கு ஐந்து வருடங்களுக்கு முன்னர் இதேபோன்றதொரு நாளில் எமக்கு கிடைத்த வெற்றி தமிழர்களுக்கு எதிரான வெற்றியல்ல. பயங்கரவாதிகளுக்கு எதிரான வெற்றியாகும். அந்த வெற்றிக்கு பங்கம் ஏற்படுத்த சிலர் முயற்சிக்கின்றனர். அதற்கு இடமளிக்கக்கூடாது - என்று தெரிவித்திருந்தார்.

கனேடிய அரசைச் சாடல்

இலங்கை அரசின் போர் வெற்றிக் கொண்டாட்டங்களில் பங்கெடுக்கப்போவதில்லை என்று கனேடியத் தூதுவர் தெரிவித்திருந்தார். போர் வெற்றிக் கொண்டாட்டங்களைக் கைவிட்டு போரில் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூர்வதற்கு ஒரு நாளை ஒதுக்குமாறும் கோரியிருந்தார்.

இந்த நிலையில் நேற்றைய போர் வெற்றி விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி, தமிழீழ விடுதலை புலிகளுக்கு எதிரான போரில் படையினர் கண்ட வெற்றியை கொண்டாடுவதற்கு எதிராக மேற்கொள்ளப்படும் வெளி அழுத்தங்களை அரசு ஒரு போதும் செவிமடுக்காது. அதே போல் போர் வெற்றி கொண்டாட்டத்தையும் அரசு ஒரு போதும் நிறுத்தாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

"நாங்கள் பயங்கரவாதிகளின் தோல்வியை நிச்சயமாக கொண்டாடுவோம். இந்தக் கொண்டாட்டத்தில் யார் கலந்து கொண்டாலும் கலந்து கொள்ளாவிட்டாலும் எமது அந்த போர் வெற்றி கொண்டாட்டங்கள் தொடரும்" என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். (ற-5)

### இராணுவ

கள் சமய அனுஷ்டானங்களில் ஈடுபடாமல் தடுப்பதற்குமாக பல்வேறு இடங்களிலும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் பல்வேறு தடைகளையும் விதித்திருந்தனர்.

யாழ்ப்பாணம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நினைவேந்தல் நிகழ்வு நேற்று மாலை இடம்பெற்றது. இராணுவத்தினர் முன்பாகவே, பெரிய கோயிலுக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அங்கு மெழுகுவர்த்தி ஏந்தி உயிரிழந்த மக்களுக்காகப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். இதன் பின்னர் நல்லூரில் அமைந்துள்ள வீரமாகாளியம்மன் கோயிலுக்குச் சென்றனர். இதன் போது அங்கு மதுபோதையில் நின்ற சிலரால் அஞ்சலி நிகழ்வுக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டது.

ஆனால் அதையும் பொருட்படுத்தாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சிதறு தேங்காய் அடித்து கற்பூரம் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அஞ்சலி செய்வதை தடுக்கும் நோக்குடன் மதுபோதையில் நின்றிருந்த சிலர் குழப்பங்களை ஏற்படுத்தியதுடன், ஆலயத்தில் அடிக்கப்பட்ட சிதறு தேங்காயையும் வீதியில் தூக்கி எறிந்தனர்.

இறுதியில் நல்லூர் கோயிலில் தேங்காய் அடித்து கற்பூரம் ஏற்றி வழிபாடுகளில் ஈடுபட்டனர். பெருமளவு படையினர், புலனாய்வாளர்கள் முன்பாகவே இந்த நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டனர். இதன் பின்னர் நல்லூர் கோயில் முன்றிலில் இரண்டு நிமிட நேரம் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

இதன் போது அங்கு நின்றிருந்த படையினர் என்ன நடக்கின்றது என்பதை அறியாமல், அவர்களும் தமது மேலங்கிகளைக் கழற்றி விட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் சேர்ந்து அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சி.சிறிதரன், வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம், மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், சோ.சுகிர்தன், கே.சயந்தன், அ.பரஞ்சோதி, எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் பிரதேச சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள், பிரத்தியேக இடமொன்றில் தமது அஞ்சலி நிகழ்வுகளை மேற்கொண்டுள்ளனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அலுவலகம் நேற்றுக் காலை முதல் இராணுவத்தினரின் முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக கட்சி உறுப்பினர்களோ, ஆதரவாளர்களோ, பொது மக்களோ கட்சி அலுவலகத்தினுள் நுழைய அனுமதிக்கப்படவில்லை. இதன் காரணமாக திட்டமிட்டபடி நினைவேந்தல் நிகழ்வை அங்கு நடாத்த முடியாததன் காரணமாக பிரத்தியேக இடத்தில் மேற்கொள்ளப்பட்டது. ஈகைச் சுடரை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன் ஏற்றியிருந்தார்.

இதனை விட யாழ். மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி

இராணுவத்தினரின் முழுமையான கண்காணிப்பிலும் முற்றுகைக்குள்ளும் வைக்கப்பட்டிருந்த, கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் அலுவலகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந் தல் நிகழ்வுகள் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதில் வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, உறுப்பினர் அ.பசுபதிப்பிள்ளை உட்பட பிரதேசபை உறுப்பினர்கள், கட்சியின் மாவட்ட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டு முள்ளி வாய்க் கால் நினைவேந்தலில் தீபங்கள் ஏற்றி வணங்கினர்.

வவுனியா

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் இல்லத்திலிருந்து, பி.ப. 2.45 மணிக்கு ஊர்வலமாகப் புறப்பட்ட மக்கள் சிந்தாமணி பிள்ளையார் கோவிலை சென்றடைந்து அங்கு, முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்களுக்காக தீபமேற்றி வழிபட்டனர்.

இதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் அனைவரும் கலந்து கொண்டிருந்தனர். இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வட மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம், வட மாகாணசபை உறுப்பினர்களான சி. சிவமோகன், இ. இந்திரராஜா, எம். தியாகராஜா மற்றும் பிரஜைகள் குழுவின் உறுப்பினர்களான எஸ். தேவராஜா, அருட்சகோதரர் செபமாலை உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

மன்னார்

முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த உறவுகளுக்கான விசேட அஞ்சலி நிகழ்வு நேற்றுப் பிற்பகல் மன்னாரில் அவர்களை அடக்கம் செய்த அதே இடத்தில் இடம்பெற்றது. மன்னார் பொது சேமக்காலை மற்றும் முத்தரிப்புத்துறை தேவாலயம் ஆகிய இடங்களில் விசேட அஞ்சலி நிகழ்வுகள் மிகவும் எழுச்சியுடன் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பிரஜைகள் குழு தலைவர் அருட்தந்தை இ.செபமாலை அடிகளார் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த உறுப்பினர் திரு அந்தோணி மார்க், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இளைஞர் அணி ஆதரவாளர்கள் பொது மக்கள் என்று பலரும் கலந்துகொண்டனர்.

இராணுவம், பொலிஸ் மற்றும் புலனாய்வுப் பிரிவினரின் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் இந்த அஞ்சலி நிகழ்வுகள் திட்டமிட்டபடி வெற்றிகரமாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு

இறுதிக்கட்ட போரில் உயிர் நீத்தவர்களை நினைவுகூரும் நிக்ழ்வு மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அலுவலகத்தில் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், பா.அரியநேத்திரன் ஆகியோரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான இரா.துரைரெட்னம், கி.துரை ராஜசிங்கம், மா.நடராசா, பிரசன்னா இந்திரகுமார், ஞா.கிருஸ்ண பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டனர். இதன்போது உயிரிழந்தவர்களுக்காக ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (ற-5-135-55-426-18-102-36-104)

### நினைவேந்தல்

அறிவித்திருந்த இராணுவத்தினர், மீறி நடத்துவோர் கைது செய்யப்படுவர் என்றும் எச்சரித்திருந்தனர்.

ஆயினும் எது நடந்தாலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்படும் என்று அரசியல் கட்சிகளும், பல்வேறு அமைப்புகளும் அறிவித்திருந்ததுடன், ஆலயங்களில் வழிபாடு உள்ளிட்ட பல்வேறு வகையில் இந்த நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னெடுப்பதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

அதையடுத்து நேற்று நினைவேந்தல் நிகழ்வுகளை தடுக்கும் முயற்சிகளில் இராணுவம் முழுவேகத்துடன் இறங்கியிருந்தது. வடபகுதியின் மூலை முடுக்கு எங்கும் இராணுவ மயம். அவர்களுக்கு உதவியாக புலனாய்வாளர்களும் சகல இடங்களிலும் களமிறக்கப்பட்டனர்.

பொதுமக்கள் ஒன்று கூடும் சனசமூக நிலையங்கள், பொது மண்டபங்கள், கட்சி அலுவலகங்கள் என்பவற்றில் படையினர் குவிக்கப்பட்டு அவை ஆக்கிரமிக்கப்பட்டு படையினரின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் அவை கொண்டு வரப்பட்டிருந்தன.

குறிப்பாக தெல்லிப்பழை பிரதேசத்திலும், யாழ்.நகரப் பகுதியிலும் இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகளும், வீதித் தடை நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டிருந்தன. அதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளிவாய்க்கால் பகுதியிலேயே இராணுவத்தினரின் பிரசன்னம் அளவுக்கு அதிகமாக காணப்பட்டது.

போர்க் காலத்தைப் போன்று வீதிகளில் முழத்துக்கு முழம் இராணுவத்தினர் நிறுத் தப்பட்டிருந்தனர். அத்துடன் குச்சொழுங்கைகள் முதல் பிரதான வீதிகள் வரை எல்லாவற்றிலும் ரோந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. வீதித் தடைகள் போடப்பட்டு சோதனை நடவடிக்கைகளும் பஞ்சமில்லை.

வடமாகாணம் முழுவதிலுமே இராணுவத்தினர் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். அத்துடன் புலனாய்வாளர்கள் சிவில் உடையில் கைத்துப்பாக்கிகளுடன் களமிறக்கப்பட்டிருந்தனர். அவர்கள் பொது இடங்களில் ஒன்று கூடுவோர் மற்றும் ஆலயங்களுக்கு வழிபடச் சென்றோரை ஒளிப்படம் எடுத்தனர். அதனால் பொதுமக்கள் அச்சமடைந்தனர்.

புலனாய்வாளர்களதும், இராணுவத்தினரதும் நேற்றைய செயற்பாடுகள் உச்சக் கட்டப் போர் ஒன்று நடைபெறுவதைப் போன்ற சூழலையே வடக்கு மக்கள் மனதில் தோற்றுவித்திருந்தது. இராணுவத்தினரால் ஏற்படுத்தப்பட்ட இந்தப் பதற்ற நிலை காரணமாக மக்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கினர்.

வடக்கின் சகல வீதிகளிலும் நேற்றைய தினம் பொது மக்களின் நடமாட்டத்தைவிட இராணுவத்தினரின் நடமாட்டம், கவச வாகனங்களையே அதிகம் காண முடிந்தது. (ற-5-135-55-426-18-102-36)

### அடக்குமுறை

நாள்களாக வடக்கில் நிலவும் பதற்றமான சூழ்நிலை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான க.சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"வடக்கில் படைக்குறைப்புச் செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசு சொல்லி வருகின்றது. கடந்த மூன்று தினங்களாக வடக்கில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரைப் பார்க்கும் போது படைக்குறைப்பு செய்யப்பட்டதன் லட்சணம் தெரிகின்றது. இது தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட இராணுவ அடக்குமுறையே. இதை நிச்சயமாக ஏற்றுக் கொள்ள முடியாது. இதை சர்வதேச சமூகம் இலங்கைக்கு உணரச் செய்ய வேண்டும்.

வடக்கில், குறிப்பாக யாழ். பல்கலைக்கழக சூழலில், நல்லூர் ஆலய சுற்றாடலில் மேலும் பல இடங்களில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் 'உதயன்' மற்றும் தினக்குரல் பத்திரிகை அலுவலகங்கள் இராணுவத்தினரால் முற்றுகைக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

வீதிகளில் பொதுமக்களின் நடமாட்டம் இராணுவத்தி னரால் திட்டமிட்ட ரீதியில் முடக்கப்பட்டுள்ளது. கிராமம் கிராமமாக இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கில் இவ்வாறான இராணுவ அடக்குமுறை பிரயோகிக்கப்படும் சூழ்நிலையில், தெற்கில் போர் வெற்றிக் கொண்டாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதியும் இராணுவத்தினரும் சேர்ந்து தெற்கில், தமிழர்களைத் தோற்கடித்த போர் வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபடுகின்றனர். இது இலங்கை அரசின் மிக மோசமான இனவாதத்தின் வெளிப்பாடாகும்.

தமிழர்கள் தமது உறவுகளை நினைந்து ஒரு சொட்டுக் கண்ணீர் விடுவதற்கு வடக்கில் இராணுவ அடக்குமுறை பிரயோகிக்கப்படுகின்றது. ஆனால் தெற்கில் பாடசாலைகளுக்கு விடுமுறை விடுத்து போர் வெற்றி விழாக் கொண்டாட்டங்கள் இடம்பெற்று வருகின்றது. இவையனைத்து தமிழ் மக்களை அழித்தொழிக்கும் முயற்சியே. வடக்கில் தமிழ் மக்களை அழிக்க முன்னெடுக்கப்பட்டு வரும் இராணுவ அடக்குமுறைகள் குறித்து சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற-5)

### பத்திரிகை

'உதயன்' அலுவலகத்துக்கு அருகில் நேற்றுக் காலை 11 மணியளவில் பிக்கப் ரக வாகனம் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து சிவில் உடையில் ஒருவர் இறங்கினார். அவரது இடுப்பில் 'பிஸ்ரல்' செருகப்பட்டிருந்ததை 'உதயன்' ஊழியர்கள் அவதானித்தனர். அதனையடுத்து இது தொடர்பில் 'உதயன்' அலுவலகப் பாதுகாப்புக் கடமையிலிருந்த பொலிஸார் ஊடாக பொலிஸ் நிலையத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

சிறிது நேரத்திலேயே அந்தப் பகுதியூடாக வந்த பொலிஸ் வாகனத்தை மறித்த 'உதயன்' ஊழியர்கள் விடயத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினர். அதற்கு வாகனத்தில் வந்த பொலிஸார், "நீங்கள் யார்?" என்று உதயன் ஊழியர்களைப் பார்த்துக் கேள்வியெ முப்பியதுடன், 'உதயன்' ஊழியர்களிடம் விசாரணை நடத்தி விட்டு, சந்தேகத்துக்கிடமானவர் என்று அடையாளப் படுத்திய நபரிடம் எதுவித விசாரணையும் மேற்கொள்ளாமல் சென்றனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்று சிறிது நேரத்தில், மதியம் 12 மணியளவில் 'உதயன்' வளாகம் முற்றுகைக்குள்ளாக்கப்பட்டது.

கஸ்தூரியார் வீதியில், கன்னாதிட்டிச் சந்தியிலும், நாவலர் சந்தியிலும் குவிக்கப்பட்ட படையினர் 'உதயன்' வளாகத்திற்குள் எவரையும் அனுமதிக்காததுடன், 'உதயன்' வளாகத்திலிருந்து எவரையும் வெளிச் செல்லவும் அனுமதிக்கவில்லை. அத்துடன் உதயன் வளாகத்துக்கு அருகில் இராணுவ ட்ரக்கில் பெருமளவிலான படையினரைக் குவித்தனர்.

மதியம் 12 மணியிலிருந்து பி.ப 3 மணிவரையில் இந்தப் பதற்றமான நிலைமை நீடித்தது. அதன் பின்னரும் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டிருந்த போதும், வீதியூடான போக்குவரத்துக்கு அனுமதித்தனர்.

**தினக்குரல் அலுவலகத்தில்**

இதேவேளை தினக்குரல் அலுவலகத்திற்குச் செல்லும் தியேட்டர் ஒழுங்கையின் இருமருங்கிலும் காலையிலிருந்தே படையினர் நிறுத்தப்பட்டிருந்தனர். மதியத்திற்குப் பின்னர் அந்தப் பகுதியில் பெருமளவிலான படையினர் குவிக்கப்பட்டதுடன், உள்ளிருந்து வெளியேயும், வெளியிலிருந்து உள்ளேயும் யாரும் சென்று வர அனுமதிக்கப்படவில்லை. சில மணித்தியால முற்றுகையின் பின்னர் இராணுவத்தினர் வெளியேறினர். (ற-5)

### கட்சி

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் வடக்கில் நடைபெறுவதை தடுக்கும் நோக்குடன் இராணுவத்தினர் நேற்று மூலை முடுக்கெங்கும் குவிக்கப்பட்டிருந்தனர். குறிப்பாக நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட பகுதிகளில் அதிகளவில் குவிக்கப்பட்டிருந்ததுடன் வீதித் தடைகளையும் ஏற்படுத்தியிருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள மார்டின் வீதியில் நேற்றுக் காலையிலிருந்தே இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். அலுவலகத்திற்கு யாருமே செல்ல முடியாதவாறு, மார்டின் வீதியின் இரு மருங்கிலும் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டு வீதித் தடை ஏற்படுத்தப்பட்டிருந்தது. அந்தப் பகுதியில் வசிப்பவர்கள் தவிர வேறு எவரையும் அந்தப் பாதையினூடாகச் சென்று வருவதற்கு இராணுவத்தினரும், புலனாய்வாளர்களும் அனுமதிக்கவில்லை.

அத்துடன் வீதியின் இருமருங்கிலும் 5 மீற்றர் இடைவெளியில் இராணுவத்தினர் காவலுக்காக நிறுத்தப்பட்டிருந்தனர்.

அலுவலகத்துக்குச் செல்ல முயன்ற கட்சி உறுப்பினர்களையோ வேறு எவரையும் இரா ணுவத்தினர் உள்ளே அனு மதிக்கவில்லை. அத்துடன் அந் தப் பகுதியில் மேலும் பதட் டத்தை அதிகரிக்கும் வகையில் ரோந்து நடவடிக்கையிலும் ஈடுபட்டிருந்தனர்.

இதேபோன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தின் இரு மருங்கிலும் இராணுவத்தினர் வீதித் தடைகளை ஏற்படுத்தி அலு வலகத்தினுள் யாரையும் உள் செல்வதற்கு அனுமதிக்கவில்லை. கட்சியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் உள் செல்வதற்காக சென்ற போதும் அவருக்கும் அனுமதி மறுக்கப்பட்டு பின்னர் உட்செல்ல அனுமதிக்கப்பட்டார். அத்துடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்துக்குள் புகுந்த இராணுவத்தினர் சோதனையிட்டுள்ளனர். (ற-5)

# தீவக உதைபந்து தொடர் வெற்றி பெற்ற அணிகள்



யாழ்ப்பாணம், மே 19
தீவக உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் நாரந்தனை அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
அதில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:
தம்பாட்டிகாந்திஜீ விளையாட்டுக்கழக அணிக்கும் புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
புங்குடுதீவு நண்பர்கள் விளையாட்டுக்கழக அணிக்கும் புங்குடுதீவு சண்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
புங்குடுதீவு அண்ணா விளையாட்டுக்கழக அணிக்கும் மண்டைதீவு சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
மெரிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக அணிக்கும் புங்குடுதீவு பாரதி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில்வெற்றி பெற்றது.
(ற-23)

# கரப்பந்தாட்டத்தில் சம்பியனானது கரவெட்டிப் பிரதேச இளைஞர் கழகம்



வலி. வடக்கு. மே 19
யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தால் யாழ். மாவட்ட பிரதேச இளைஞர் சேவைகள் மன்றங்களுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கரவெட்டி பிரதேச இளைஞர் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.
ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கோப்பாய் பிரதேச இளைஞர் கழக அணியும், கரவெட்டி பிரதேச இளைஞர் கழக அணியும் மோதிக் கொண்டன.
ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் கரவெட்டி பிரதேச இளைஞர் கழக அணி 25:23, 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதல் இரண்டு சுற்றுக்களையும வெற்றி கொண்டது. மூன்றாவது சுற்றை கோப்பாய் இளைஞர் கழக அணி 25 : 19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.
நான்காவது சுற்றை கரவெட்டி பிரதேச இளைஞர் கழக அணி 25:21 என்ற புள்ளியன் அடிப்படையில் வெற்றி கொள்ள கரவெட்டி பிரதேச இளைஞர் கழக அணி 3:1 என்ற சுற்றுக்கள் கணக்கில் கோப்பாய் பிரதேச இளைஞர் கழக அணியை வென்று மாவட்டச் சம்பியனாக தெரிவானது. (ற-86)



யாழ்.மாவட்ட பிரதேச இளைஞர் சேவைகள் மன்றங்களின் மகளிர் அணிகளுக்கு இடையிலான கபடித் தொடரில் வெற்றிபெற்ற தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி, பயிற்றுநர் மற்றும் இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரிகளுடன். (ற-23)

# இன்றைய ஆட்டம்



யாழ்ப்பாணம், மே 19
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.
இன்று திங்கட்கிழமை பி.ப. 3.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் சுடர்ஒளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அன்பாலை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
பி.ப 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மருதங்கேணிகணேசானந்தாவிளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆதிசக்தி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ற-23)

# போட்டி முடிவுகள்



யாழ்ப்பாணம், மே 19
வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அராலி 'ஏ எல்' விளையாட்டுக் கழகம் மற்றும் அராலி 'ஏ எல்' இளைஞர் கழகம் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அராலி 'ஏ எல்' விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வ்ருகின்றன.
கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதியது. அதில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக 'பி' அணி வெற்றி பெற்றது.
அடுத்து தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து அராலி திருமகள் விளையாட்டுக் கழக அணி களமிறங்கியது.
அதில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக 'ஏ' அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
கடந்த செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-
செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் வட்டுக்கோட்டை கலைநகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழக அணி மோதியது.
அதில் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் ஈவினை கலைமகள் விளையாட்டுக்க கழக அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு பிளைட் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.
அதில் ஈவினை கலைமகள் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
இரண்டாவது ஆட்டத்தில் அராலி பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழக அணி மோதியது.
அதில் அராலி பாரதி விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

# கரப்பந்தாட்ட முடிவுகள்



யாழ்ப்பாணம், மே 19
யாழ். மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடந்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.
கடந்த வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:
வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது.
3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.
அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் அச்சுவேலி தோப்பு கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழக அணி மோதியது.
3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் அச்சுவேலி தோப்பு கலைமகள் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.
கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் அச்சுவேலி தோப்பு கலைமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டுவில் ஜங்கரன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் அச்சுவேலி தோப்பு கலைமகள் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.
அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் கெருடாவில் விவேகனந்தா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதியது.
3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணி 2:1என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற மற்றைய ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகஅணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.
3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது.
(ற-23)

# விளையாட்டு விழா

வலி.வடக்கு. மே 19
வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான மெய்வன்மை விளையாட்டு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சபையின் கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்வார்.
(ஓ-86)

# மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்ட தொடரில் யாழ்.பிரதேச இளைஞர் கழகம் சம்பியன்

யாழ்ப்பாணம், மே 19
யாழ். மாவட்ட பிரதேச இளைஞர் சேவைகள் மன்றங்களுக்கு இடையே மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட ஆண், பெண் இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் இரு பிரிவிலும் யாழ். பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவானது.
தொடரின் இறுதியாட்டங்கள் கடந்த வாரம் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதான கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்றன.
ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ். பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி களமிறங்கியது.
அதில் யாழ். பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி 56:55 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.
பெண்களுக்கான இறுதியாட்டத்தில் உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியை எதிர்த்து யாழ்.



பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி மோதியது.
அதில் யாழ். பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி 56:36 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.
(ற-23)

# தயாராகிறது பாகிஸ்தான்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இலங்கைக்குச் சுற்று பயணம் மேற்கொண்டு இலங்கை அணியுடன் மோத வுள்ளது.

பாகிஸ்தானில் தீவிரவாதிகள் தாக்குதல் காரணமாக அங்கு எந்த நாட்டு கிரிக்கெட் அணியும் சுற்றுப்பயணம் மேற்கொள்வதில்லை.


இதனால் பாகிஸ்தான் அணி பொதுவான இடமான ஐக்கிய அரபு எமிரேட்ஸில் போட்டிகளை நடத்தி வருகிறது.

இந்நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி ஓகஸ்ட் மாதம் இலங்கைக்கு சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் விளையாட இருக்கிறது.

முதல் டெஸ்ட் ஓகஸ்ட் 6ஆம் திகதி காலி மைதானத்திலும், 2ஆவது டெஸ்ட் கொழும்பில் 14ஆம் திகதியும் தொடங்கு கிறது. முதல் ஒருநாள் போட்டி ஓகஸ்ட் 23ஆம் திகதியும், 27ஆம் திகதி 2ஆவது போட்டியும் மற்றும் 30ஆம் திகதி 3ஆவது போட்டியும் நடக்க இருக்கிறது (கு)

# டெஸ்ட் அணிக்கு தலைவராகத் தயார்

தென்னாபிரிக்கா அணியின் டெஸ்ட் போட்டிக்கான அணியில் அணித்தலைவர் பதவியை ஏற்கத் தயாராக இருப்பதாக அந்த அணியின் வீரர் டிவில்லியர்ஸ் கூறியுள்ளார்.



டி வில்லியர்ஸ்

தென்னாபிரிக்க அணி யின் வெற்றி அணித் தலை வர் என அழைக்கப்படும் சுமித். 108 டெஸ்ட் போட் டிக்கு அணித் தலைவராக இருந்து சாதனை ரிந்துள்ளார்.

சர்வதேச அளவில் 100 டெஸ்டுக்கு மேல் அணித் தலைவராக இருந்த ஒரே வீரர் சுமித் ஆவார். இவர் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக கடந்த பெப்ரவரி மாதம் நடந்த டெஸ்ட் தொடருடன் ஓய்வு பெற்றார்.

இந்நிலையில் தென்னா பிரிக்க டெஸ்ட் அணிக்கு அணித் தலைவர் பத வியை ஏற்கத் தான் தயாராக இருப்பதாக அந்த அணியின் முன்னணி துடுப் பாட் டக்காரர் டி வில்லியர்ஸ் கூறியுள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கூறுகையில்; தென் னாபிரிக்க டெஸ்ட் அணியின் தலை வர் பதவியை ஏற்க நான் தயாராக இருக்கி றேன். அதே சமயம் என்னால் இலக்குக் காப்பாளராகப் பணி யாற்ற இயலாது. இலக்குக் காப்பாளராக இல் லாமல் இருந்தால் மட்டுமே என்னால் அணித் தலைவர் பதவியை ஏற்க முடியும். நான் ஏற்கனவே 20/20 போட்டி மற் றும் ஒருநாள் ஆட்டத்துக்கு அணித் தலைவராக பணிபுரிந்து நிறைய பாடம் கற்று இருக்கிறேன்.

எனவே மிகவும் சவாலான டெஸ்ட் அணியின் தலைவர் பதவியை ஏற்க தயாராக இருக்கிறேன் என்று கூறி யுள்ளார். (கு)

# கவலையில் பீற்றர்சன்



ராஜஸ்தான் அணிக் கெதிரான ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வென்று களத்தடுப்பைத் தெரிவு செய்தது தவறான முடிவு என்று டெல்லி அணித் தலைவர் கெவின் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல் தொடரின் அகமதாபாத்தில் நடந்த கடைசிப் போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 62 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டெல்லி டேர்டெவில்ஸ் அணியை வீழ்த்தி யது. இது டெல்லி அணி தொடர்ச்சியாகச் சந்தித்த 6ஆவது தோல்வியாகும்.

இந்தத் தோல்வி குறித்து டெல்லி அணியின் தலைவர் கெவின் பீற்றர்சன் கூறுகையில்; நாணயச் சுழற்சியில் வென்று களத்தடுப்பைத் தெரிவு செய்தது தவறானது என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

யாரையும் குறை சொல்ல நாங்கள் இங்கு வரவில்லை. ஆடுகளம் மிகவும் மோசமாக இருந்தது. எங்கள் அணி யில் இளம் வீரர்கள் நிறையப் பேர் உள்ளதால் அடுத்த ஆண்டு சிறப்பாக விளையாட வேண்டியது அவசியமான தாகும் என்று கூறியுள்ளார். (கு)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இசைப்பிரியா

அதன் கரையிலும் பெரும்பாலான ஆண்கள் ஆடைகள் களையப்பட்ட நிலையில் அமர வைக்கப்பட்டுள்ள னர். அதில் சிறுவர்கள் மாத்திரம் காற் சட்டையுடன் உள்ளனர்.

மற்றைய படத்தில் அந்த ஆண்களுக்கு நடுவில் இசைப்பிரியாவுடன் உள்ள மற்றொரு ஊடகப் பணிப் பெண் அமர வைக்கப்பட்டுள்ளார். அவர் மஞ்சள் துணியினால் போர்த்தப்பட்டபடி அமர்ந்திருக்கின்றார். இசைப் பிரியாவின் மேல் வெள்ளைத் துணி போர்த்தப்பட்டபடி அமர்ந்திருக்கின் றார். அவர் பின்னால் இராணுவ வீரர் ஒருவர் இசைப்பிரியாவின் கையை கட்டுவது போன்று உள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தொலைக்காட்சியில் செய்தி வாசிப் பாளராகப் பணியாற்றிய இசைப்பிரி யாவின் இராணுவத்தினருடான மோதலின் போது கொல்லப்பட்டார் என்று படைத்தரப்பினர் தெரிவித் திருந்தனர். அவர் உயிரற்ற நிலை யில் காணப்படும் புகைப்படமும் வெளியாகியிருந்தது. ஆயினும் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் இசைப்பிரியா இராணுவத் தினரிடம் உயிருடன் பிடிபட்டு. கொண்டு செல்லப்படுவது போன்ற காணொலி காட்சி ஒன்றை சனல் - 4 ஊடகம் வெளியிட்டிருந்தது.

அந்த காணொலியில் "நீயா துவ ராகா?" (தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் மகளின் பெயர்) என்று இசைப்பிரி யாவைப் பார்த்துக் கேட்பதும். அதற்கு அவர் "ஐயோ நானில்லை" என்று கதறுவது போன்ற காட்சிகள் காணப் பட்டன.

இந்தக் காணொலியை மறுத்திருந்த இலங்கை அரசு, அது போலியானது என்று தெரிவித்திருந்தது.

இந்தநிலையில் தற்போது குறித்த புகைப்படங்கள் வெளியாகியுள்ளன. முள்ளிவாய்க்கால் நினைவு தினமான நேற்று இந்தப் படங்கள் வெளியாகி யுள்ளது. ஆயினும் குறித்த புகைப் படங்கள் யாரால் வெளியிடப்பட்டது என்பது குறித்த விவரங்கள் எதுவும் தெரியவரவில்லை.

இந்தப் புகைப்படங்கள் தொடர்பில் இலங்கை அரசின் கருத்தை அறி வதற்கு முயற்சித்தபோதும், அது கைகூடவில்லை.(ரு-5)

### வடக்கு

பட்டு வருகின்றன. கடந்த 4 ஆண்டு களும் நினைவேந்தல் நிகழ்வுகள் எதுவித தடையுமின்றி நடைபெற்றி ருந்த நிலையில் இந்த ஆண்டு இரா ணுவத்தினர் அதற்குத் தடை விதித் திருந்தனர்.

இருப்பினும் உயிரிழந்தவர்கள் நினைவாக வீடுகளில் விளக்கேற்றுவ தற்கோ அல்லது கோயில்களில் வழி பாடு நடத்துவற்கோ எந்தத் தடையு மில்லை என்றும் பொது இடங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் கடைப் பிடிக்கப்பட்டால் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் இராணு வத்தினர் தெரிவித்திருந்தனர்.

ஆயினும் வடக்கிலுள்ள இந்து ஆல யங்கள், கிறிஸ்தவ ஆலயங்களுக்கு நேற்றுமுன்தினம் இரவு சென்ற இராணுவத்தினர் மற்றும் புலனாய் வாளர்கள், நாளை (நேற்று) ஆலயங் களில் மணி எழுப்பக் கூடாதென்றும் விசேட பூசைகள் எதுவும் நடத்தக் கூடாதென்றும் தெரிவித்திருந்தனர்.

நேற்று அதிகாலை வடக்கிலுள்ள சகல இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ ஆல யங்கள் யாவும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டன. சிறிய ஆல யங்கள் முதல் பிரபல்யமான ஆலயங் கள் வரையில் ஒவ்வொரு ஆலயத் தைச் சூழவும் சீருடையில் இராணு வத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். அவர்களுடன் புலனாய்வாளர்களும் குவிக்கப்பட்டிருந்தனர்.

கோயில்களுக்கு பூசை வழிபாடு களுக்குச் சென்ற பக்தர்கள் இராணு வத்தினரால் திருப்பியனுப்பப்பட்ட னர். சில இடங்களில் மாத்திரம் சோத னையின் பின்னர் ஆலயங்களுக்குள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். பெரும்பாலான ஆலயங்கள் படை யினரின் கெடுபிடி காரணமாக தமது பூசை வழிபாடுகளை நிறுத்தியிருந் தன.

#### கீரிமலை செல்லத் தடை

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் யாகம், ஆயிரம் பேருக்கான அன்ன தானம் என உயிரிழந்த உறவுகளின் பிதிர்கடன் நிறைவேற்றுவதற்காக பல்வேறு ஒழுங்குகள் செய்யப்பட்டி ருந்தன. ஆயினும் நேற்றையதினம் கோயிலுக்குச் செல்வதற்கு எவரை யும் இராணுவத்தினர் அனுமதிக்க வில்லை. பிதிர்கடன் நிறைவேற்று வதற்காக பல்வேறு பகுதிகளிலிருந்து வந்தவர்களும் இராணுவத்தினரால் திருப்பியனுப்பப்பட்டனர்.

அத்துடன் ஆலயத்துக்குச் செல்வதற் கான அனைத்து பாதைகளிலும் இராணு வத்தினரால் தடைகள் ஏற்படுத்தப்பட் டிருந்தது.

தடைகளைத் தாண்டி யாரையும் உள்ளே செல்வதற்கு இராணுவத் தினர் அனுமதிக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் வடக்கு மாகாணசபை உறுப் பினர் பா.கஜதீபன் ஆகியோர் செல்ல முற்பட்ட போது இராணுவத்தினர் தடுத்து நிறுத்தினர். ஆயினும் அவர் நாடாளுமன்ற உறுப்பினர் என்றும் தனக்குச் செல்வதற்கான அனுமதி யுண்டு என்றும் தெரிவித்ததுடன் தர்க்கப்பட்டு பின்னர் கீரிமலை ஆல யத்தினுள் செல்வதற்கு அனுமதிக்கப் பட்டார். ஆலயத்திற்குச் சென்ற அவர் உயிரிழந்த உறவுகளுக்காக ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் ஈடுபட்டார்.

#### நல்லூரானும் கண்காணிப்பில்

நேற்றுக் காலையிலிருந்தே பெருமள வான படையினர் குவிக்கப்பட்டிருந் தனர். அதனால் ஆலயங்களில் வழி பாடுகள் நடத்துவதற்கு பக்தர்கள் பெரு மளவில் வரவில்லை. இந்த நிலை யில் அங்கு கடமையிலிருந்த ஒரு தொகுதி படையினர் ஆலயத் தினுள் சென்றுவிசேடஅர்ச்சனைகளைசெய்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளி வாய்க்கால் கிழக்கிலுள்ள புனித சின்னப்பர் ஆலயத்தில் நேற்று மாலை விசேட பூசை வழிபாடுகள் நடைபெற இருந்த நிலையில், அதற்குப் படையி னர் அனுமதி மறுத்துள்ளனர். மன் னார் மாவட்டத்திலும் தேவாலயங் களுக்கு அருகில் பெருமளவு படை யினர் குவிக்கப்பட்டு பூசை வழிபாடு களுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட் டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ரு-5-10-86)

# அடுத்த சுற்றுக்கு செல்லும் வாய்ப்பை அதிகரித்தது கொல்கத்தா



ஹைதராபாத் அணியை 7இலக்குகள் வித்தியாசத்தில் கொல்கத்தா அணி வெற்றி பெற்று அசத்தியது.

ஏழாவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி இந்தியாவில் இடம்பெற்று வருகின்றது. இதில் நேற்று இடம்பெற்ற 44 ஆவது ஆட்டத்தில் ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணியும் கொல்கத்தா நைற்றைடர்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஹைதராபாத் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய ஆரோன் பிஞ்ச் - தவான் ஜோடி சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றினாலும். அடுத்து இணைந்த நாமன் ஓஜா - டேவிட் வோர்னர் ஜோடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்த போராடியது. அதிரடி காட்டிய வோர்னர் 18 பந்துகளில் 34 ஓட்டங்களையும், ஓஜா 22 ஓட்டங்களுடனும் நடையைக் கட்டினர்.

கொல்கத்தாவின் பந்து வீச்சாளர்கள் நேர்த்தியாக பந்து வீசி ஹைதராபாத் ஓட்ட எண்ணிக்கையைக் கட்டுப்படுத்திய துடன் இலக்குகளையும் சரித்தனர். இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 142 ஓட்டங்களைப் பெற முடிந்தது.ஹைதராபாத் அணியின் இர்பான் பதான் 23 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் உமேஸ் யாதவ் 3 இலக்குகளையும், சொஹைப் அல் ஹசன் 2 இலக்குகளையும்,சுனில் நரைன்,பியூஸ் சௌலா தலா ஓர் இலக்கினையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து 143 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என களமிறங்கிய கொல்கத்தா அணிக்கு 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து கௌதம் கம்பீர் ஏமாற்றினார். அடுத்து இணைந்த ரொபின் உத்தப்பா- மனிஸ் பன்டே இணை நிதானமாகத் துடுப்பெடுத்தாடி அணியை வெற்றி பெறச் செய்வதற்கு கடுமையாகப் போராடியது.

அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 30 பந்துகளில் 5 நான்கு ஓட்டங்கள், ஒரு ஆறு ஓட்டம் அடங்கலாக 40 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ' ரன்அவுட்' முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார் ரொபின் உத்தப்பா.

அடுத்து மூன்றாவது இலக்குக்காக யூசுப் பதான் களமிறங்கினார். இருவரும் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி 45 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றபோது 35 ஓட்டங்களுடன் பாண்டே வெளியேற்றப்பட்டார்.

தொடர்ந்து களமிறங்கிய ரென் டெதி ஹற் யூசுப் பதானுடன் இணைந்து அணியை வெற்றி இலக்கு வரை அழைத்துச் சென்றார். இவர்கள் இருவரினதும் ஒத்துழைப்புடன் 19.4 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 146 ஓட்டங்கள் பெற்று 7 இலக்குகளால் வெற்றியைத் தமதாக்கிக் கொண்டது கொல்கத்தா அணி. வெற்றிக்கு வித்திட்ட யூசுப் பதான் 39 ஓட்டங்களுடனும்,ரெய்ன் ரென் 25 ஓட்டங்களுடனும் களத்திலிருந்தனர்.

பந்து வீச்சில் டவி ஸ்ரெய்ன், கரன் சர்மா ஆகியோர் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக உமேஸ் யாதவ் தெரிவு செய்யப்பட்டார். (400)

## விசாரணைக்குழுவில் கங்குலி


சூதாட்டம் குறித்து விசாரிக்கவுள்ள முத்கல் குழுவில், கங்குலியும் இடம் பெறுவார் எனத் தெரிகிறது.

ஆறாவது ஐ.பி.எல்., தொடர் சூதாட்டம் குறித்த விசாரணை இன்னும் முடிவடையவில்லை. இதுகுறித்து நீதிபதி முத்கல் குழு அளித்த் அறிக்கையில் சீனிவாசன், தலைவர் டோனி உள்ளிட்ட 13 பேர் சிக்கியுள்ளனர். இவர்கள் மீதான புகாரை விசாரிக்க, இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) நியமித்த குழுவை ஏற்க மறுத்த மேல் நீதிமன்றம் மீண்டும் முத்கல் குழுவையே நியமித்தது.எதிர்வரும் ஆகஸ்ட் மாத, இறுதியில் அறிக்கை அளிக்க வுள்ள நிலையில், நேர்மையான முன்னாள் வீரர் ஒருவரை சேர்த்துக் கொள்ளலாம் என, தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலியும் இக்குழுவில் இடம் பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுகுறித்து முத்கல் குழுவின் வேண்டுகோளை, கங்குலியும் ஏற்றுக்கொண்டதாக தெரிகிறது. தற்போது லண்டனில் உள்ள கங்குலி, இன்னும் ஓரிரு நாட்களில் இந்தியா திரும்பி, விசாரணைக்குழுவில் இணையலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (400)



## அமெரிக்காவில் விளையாடிய 5 பாகிஸ்தான் வீரர்களுக்கு அபராதம்


அமெரிக்காவின் ஹூஸ் டன் நகரில் நட்புரீதியிலான 20 /20 கிரிக்கெட் போட்டி கடந்த மாதம் நடந்தது. இதில் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் வகாப் ரியாஸ், அப்துல் ரசாக், பயத் ஆலம், நிசர் ஜாம்ஷெட், ஷாசெப் ஹசன் ஆகிய 5 வீரர்கள் பங்கேற்று விளையாடினர். ஆனால் இதில் பங்கேற்று விளையாட பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் அனுமதியைப் பெறவில்லை. இது குறித்து விசாரிக்க 3 பேர் குழுவை பாக். கிரிக்கெட் சபை அமைத்தது.விசாரணை குழுவுக்கு முன்புமுன்னிலையான 5 வீரர்களும், தாங்களுக்கு கிரிக்கெட் சபையின் முன் அனுமதி பெற வேண்டும் என்பது பற்றி தெரியாது என்று தெரிவித்தனர். விசாரணைக்கு பின் முன் அனுமதி இல்லாமல் போட்டியில் பங்கேற்ற 5 வீரர்களுக்கு தலா 5 ஆயிரம் அமெரிக்க டாலர் (3 லட்சம்) அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்தது.இந்த போட்டியில் சூதாட்ட புகாரில் சிக்கி வாழ்நாள் தடை பெற்ற பாகிஸ்தான் வீரர் டேனிஷ் கனேரியாவும் பங்கேற்று விளையாடியது குறிப்பிடத்தக்கது. (400)




## பழி தீர்த்தது பெங்களூர்

சென்னைக்கு எதிரான போட்டியில் 5 இலக்குகளால் தோற்கடித்து பழிதீர்த்தது பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணி. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் நேற்றைய லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ்- பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை அணி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கியது.அந்த அணியின் ஆரம்ப ஆட்டக்காரர்களாக ஸ்மித்தும் மக்கலமும் களமிறங்கினர்.மக்கலம் ஆரம்பம் முதலே அடித்து ஆடி வந்த போது ஸ்மித் பந்துகளை சந்திக்க சற்று சிரமப்பட்டார். 5ஆவது பந்துப்பரிமாற்றத்தில்அணி 29 ஓட்டங்கள் என்றிருந்தபோது 13 பந்துகளில் 19 ஓட்டங்கள் எடுத்திருந்த மக்கலம் ஆரோன் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். ஸ்மித்தும் அதே பந்துப்பரிமாற்றத்தில் 9 ஓட்டங்களுடன் நடையை கட்டினார். 2ஆவது இலக்குக்கு களமிறங்கிய ரெய்னா அதிரடியாக துடுப்பெடுத்தாடி பெங்களூர் அணியின் பந்துவீச்சை நொருக்கி தள்ளினார். 3 ஆவது இலக்குக்கு களமிறங்கிய டேவிட் ஹசியும் அடித்து விளையாடினார். ஆட்டத்தின் 15 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 104 ஆக இருந்தபோது ஹசி, முரளிதரனின் பந்துவீச்சில் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 4 ஆவது இலக்குக்கு களமிறங்கிய தோனியும்7 ஓட்டங்களில் பவிலியன் திரும்பினார். 5 ஆவது இலக்குக்கு ரெய்னாவுடன் ஜடேஜா ஜோடி சேர்ந்தார். ரெய்னா 48 பந்துகளில் 62 ஓட்டங்களும், ஜடேஜா 9 பந்துகளில் 10 ஓட்டங்களும் பெற்று இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். இதனால் நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் சென்னை அணி 4 இலக்குகள் இழப்பிற்கு 138ஓட்டங் களை பெற்றது.பந்து வீச்சில் வருன் ஆரோன் 2 இலக்குகளையும் முரளிதரன், அபு நெசிம் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். அடுத்து 139 ஓட்டங்க்ள் என்ற இலக்கை நோக்கி பெங்களூர் விளையாடியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய பட்டேல் 6 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். பின்னர் வந்த கோஹ்லி கெயிலுடன் ஜோடி சேர்ந்து நிதானமாக விளையாடினார். 27 ஓட்டங்கள் எடுத்தபோது கோஹ்லி ஆட்டமிழக்க அடுத்து வந்த டி வில்லியர்ஸ் அதிரடியாக விளையாடினார். அவர் 14 பந்துகளில் 28 (1 பவுண்டரி, 3 சிக்சர்) ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். இறுதியில் 6 பந்துகளில் 10 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் யுவராஜ் சிங் சிக்சர் அடித்து அணியை எளிதாக வெற்றி பெற செய்ய உதவினார். பெங்களூர் அணி 5 இலக்கை இழந்து 142 ஓட்டங்கள் எடுத்து சென்னை அணியை தோற் கடித்தது.



அதிகபட்சமாக கெயில் 46 ஓட்டங்கள் எடுத்தார்.பந்து வீச்சில் ரவிச்சந்திரன் அஸ்வின், டேவிட் ஹசி ஆகியோர் தலா இரு இலக்குகளையும் ஜடேஜா ஒரு இலக்கையும் கைப்பற்றினர் .போட்டியின் ஆட்ட நாயகனாக டி வில்லியர்ஸ் தெரிவு செய்யப்பட்டார். (400)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.